# பெரியயெழுத்து

# பவளக்கொடி

மாலை.

## படங்களுடன்

விலை அணா—

28 JAN 192

O-,194 N22
97190

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

வரகுணபாண்டியனது சமஸ்தானவித்வான்

பொன்விளைந்த களத்தூர்

புகழேந்திப்புலவர் அவர்கள்

இயற்றிய,

# பவளக்கொடி மாலை.



மதுரை, வடக்காவணிமூலவீதி,

புஸ்தகவியாபாரம்,

இ. இராமசாமிக் கோனாரால்

மதுரை, எக்ஸெல்ஸியர் பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

இதன் விலை] —— [அணா 8.

1922.

23 JAN 19

முந்துங்கள்! புத்தகத்திற்கு முந்துங்கள்!!

மதுரைத்தமிழ் வித்வான்,

ஸ்ரீ: நா. கிருஷ்ணசாமி நாயுடவர்கள் இயற்றிய

## சங்கீத பாகவதம் அல்லது

சம்பூர்ண

# ஸ்ரீ: கிருஷ்ணலீலா.

தற்கால நாகரிக வர்ணமெட்டுக்களிலமைந்த செஞ்சொற் பாக்களுடனும், இனிய செந்தமிழ் வசன நடையுடனும் வெளிவந்துளது.

| | | |
|---|---|---|
| முதல் இரண்டு பாகம் தனித்தனி | விலை அணா | 0—4—0 |

ஷை யாரியற்றிய

| | | |
|---|---|---|
| ,, சாவித்ரி சத்யவான் 1, 2 பாகம் தனித்தனி | ,, | 0—4—0 |
| ,, நல்லதங்காள் சரித்திரம் 1, 2 பாகம் தனித்தனி | ,, | 0—4—0 |
| ,, இராமாயணத்திருப்புகழ் காவடிச்சிந்து | ,, | 0—2—0 |
| ,, ஷை காந்தி தியானம் சிங்காரப்பாட்டுகளுடன் | ,, | 0—1—0 |

### மூத்தமிழ் க்ஷேத்திர மதுர பாஸ்கரதாஸவர்களியற்றிய

| | | |
|---|---|---|
| இந்து தேசாபிமானிகள் செந்தமிழ்த் திலகம் 1, 2 பாகங்கள் | விலை அணா | 0—6—0 |
| புதிய பெரிய பக்திரஸக் கீர்த்தனங்கள் | ,, | 0—5—0 |
| ஷை இரண்டாம் பாகம் | ,, | 0—5—0 |
| லலிதாங்கி சரித்திரம் ஷை யாரியற்றியது | ,, | 0—8—0 |
| வள்ளியம்மை சரித்திரம் ஷை | ,, | 0—6—0 |
| அதிரூப அமராவதி ஷை | ,, | 0—6—0 |
| சகுந்தலா 1, 2 பாகங்கள் ஷை | ,, | 0—8—0 |

### உடுமலை மூத்துசாமிக் கவிராயரவர்களியற்றிய

| | | |
|---|---|---|
| இராமநாடகம் (படங்களுடன்) | விலை ரூ | 2—0—0 |
| பக்திரஸ கீர்த்தனங்கள், 1, 2-பாகம் தனித்தனி | | 0—5—0 |
| விநோதவிகடசிந்தாமணி இரண்டாம் பாகம். நினைக்கும்போதெல்லாம் சிரிப்பையுண்டாக்கும் சிறந்த கதைகள் | | 0—8—0 |

### அம்பாசமுத்திரம் சுப்புசாமி அய்யரவர்களியற்றிய

| | | |
|---|---|---|
| இராமாயணச் சிந்து | | 0—2—0 |
| சோழபுரம் கவிக்குஞ்சர பாஷியம் அவர்களியற்றிய சௌ சௌ என்னும் 5 டிராமாச் சரித்திரங்கள் ஒன்று சேர்ந்தது. | | 0—6—0 |

இ. மா. கோபாலகிருஷ்ணக்கோன்,

புத்தகவியாபாரம், புதுமண்டபம், மதுரை.

உ

ஸ்ரீராமஜெயம்.

# பவளக்கொடி மாலை.

வேகமானெறி சேரும்வினைகளுந்
தாகபோகம் விடாத்தளர்ச்சியும்
சோகவாரியினுல் வருந்துன்பமும்
போகவானை முகவனைப்போற்றுவாம்.

## விநாயகர் துதி.

அத்திமுகத்தோனே அரனர்திருமகனே
சத்திக்கணபதியே சரிந்தவயிற்ரேனே
கரானைமாமுகனே கணபதிமுன்னடவாய்
ஸ்ரீராமர்தன்மருகா செல்வக்கணபதியே
பேழைவயிற்ரேனே பெருச்சாளிவாகனனே
வேழமுகத்தோனே விநாயகரேநான்சரணம்
கந்தருக்குமுன்பிறந்த கற்பகமேமெய்ப்பொருளே
வந்தெனக்குமுன்னடவாய் மாயன்மருமகனே.

## கலைமகள் துதி.

வாணிசரஸ்வதியே மறையவனர்தேவியரே
சொற்கள்வழுவாமல் சொற்குற்றம்வாராமல்
நாவுதவருமல் நடத்துமம்மாஇக்கதையை
ஐந்தெழுத்தைஓரெழுத்தா யழுத்துமம்மாவென்னுவில்
எட்டெழுத்தை ஓரெழுத்தா யழுத்துமம்மாநாவுதனில்

## துரோபதை துதி.

தோராவடிவழகி துரோபதையேபாஞ்சாலி
அக்கினியில்வந்துதித்த ஆதிபராசத்தியரே
நெருப்பிற்பிறந்தவளே நீலவர்ணன்தங்கையரே
மந்தாரக்குந்தியற்கு முந்திவந்தமருமகளே

சந்தனவடிவழகன் தருமராஜன்தேவியரே
பாடத்தொடங்கினேன் பாஞ்சாலன்சீர்மகளே
பவளக்கொடிமாலை பாடத்துணிந்தேன்யான்
கற்றோர்க்குக்குற்றங்கள் காதுவழிநேர்ந்தாலும்
உற்றபிழைகளெல்லாம் உயர்ந்தோர்மனம்பொறுத்து
இப்புவியோரெல்லோரும் ஒப்பிமனமகிழ
அப்பால்நடந்தகதை அடியேனுரைத்திடுவேன்

## அல்லி அரசிருக்கை.

அல்லிப்பெருமாள் அரசாளும்நாயகியாள்
ஆறுயிரம்பாண்டியர்க்கு ஆரியதுரைமகளாம்
மதுரைநகராளும் வாழ்பாண்டிநாடுடையாள்
நாலுமலையாளம் நடுவானதென்மதுரை
தென்மதுரையாளுகிற தேன்மொழியல்லியம்மாள்
ஆணரசாண்டாலே அழிந்துபோம்சீமையென்று
பெண்ணரசாளவென்று பிறந்தாளே அல்லியிலே
வயிற்றிற்பிறந்ததில்லை வன்கொடுமைசெய்ததில்லை
குடலிற்பிறந்ததில்லை குலக்கொடுமைசெய்ததில்லை
ஓடுகிறதண்ணீரில் உள்ளேமணற்சேறுமுண்டு
அடிக்கிறகாற்றதனில் அலைக்காற்றுரும்புமுண்டு
காலகண்டநாதருக்கு கண்டங்கறுப்புமுண்டு
சந்திரற்குமச்சமுண்டு சற்றேகறுப்புமுண்டு
குன்றுமணிக்காணுலுங் கொஞ்சங்கறுப்புமுண்டு
அவள்-மயிரேகறுப்பொழிய மற்றகறுப்புமில்லை
புருவங்கறுப்பொழிய பின்னேகறுப்புமில்லை
மன்னன்விஜயன் மடவூர்ந்தமாதேவி
காளைவிஜயன் கட்டழகன்மாதேவி
ஏழுபிராயத்திலே எதிர்த்துவந்த நீன்முகனை
வெட்டிக்கெலித்து வீரபட்டங்கட்டினவள்
பொம்மைவிருதுகட்டிப் பூமியெல்லாமாளுகிறாள்
அல்லியென்றுசொன்னால் குருவிதண்ணீர்குடியாது

கட்டழகிபேர்சொன்னால் கண்தெய்வங்கூத்தாடும்
அல்லிபேர்சொன்னால் அறுத்ததலைகொக்கரிக்கும்
கட்டழகியல்லியருங் காலையில்தானெழுந்து
முத்துச்சிவிகையதில் ஏறிமுறுகுழலாள்
தாதியருந்தோழியரும் தையல்மார்சூழ்ந்துவர
பூங்காவனச்சோலை போயிறங்கியல்லியரும்
பாளைகொண்டுபல்விளக்கி ஓலைகொண்டுநாவழித்து
பொய்கையிற்போயிறங்கி துய்யமுகஞ்சுத்திபண்ணி
முத்துநிகர்த்தபல்லும் முறுக்கம்பூச்செவ்வாயும்
காலோடுகைகளுங் கனிவாயுஞ்சுத்திபண்ணி
சிவசிவாவென்றுசொல்லி திருநீற்றுக்காப்பணிந்து
மதுரைமீனாட்சியரை மனதிலேதானினைந்து
சொக்கரடிபணிந்து தோகையரும்பூச்சொருகி
சந்தனமும்பன்னீருஞ் சவ்வாதுந்தானணிந்து
பார்ப்பார்பரதேசி பண்டாரஞ்சங்கமரும்
அந்தணர்சோகியர்க்கும் அதிதிபரதேசியர்க்கும்
தானம்வழங்கிவரத் தாமரைசூழ்வாழ்மாரி
தருமத்தைச்செய்தவளுந் தண்டிகையின்மீதேறி
பூங்காவனத்தைவிட்டுப் பொற்கொடியும்வாராளே
ஆனையின்மேல்பேரிகை அடிபடுதுகுமுகுமென்று
ஒட்டையின்மேல்பேரிகை ஓசைகிளம்புகுது
எக்காளமூதிவர இடக்கையும்டோலடிக்க
சங்கீதமேளம் சபையில்முழங்கிவர
ஐங்காதவழிதூரம் அநேகதாரையூதிவர
நாற்காதவழிதூரம் நாகசுரமூதிவர
முக்காதவழிதூரம் முரசுமுழங்கிவர
தித்திமிதோமென்று சிறுபெண்களாடிவர
தத்திமிதோமென்று தாளங்கள்போட்டுவர
கவிஞர்கவிபாட கட்டியங்களார்ப்பரிக்க
புலவர்புகழ்ந்துவர புஷ்பங்கள்தூவிவர
நட்டுவர்கள்பாடிவர நங்கையர்களாடிவர

செடில்கட்டிமல்லக செட்டிகள்யுத்தஞ்செய்ய
கேளிக்கைபார்த்துமல்லோ கிளிமொழியாள்வாராளே
தெற்குக்கிழக்குத் தெருவீதிதான்கடந்து
கடையுங்கடைத்தெருவுங் கருமாரவீதிவிட்டு
அங்காடிவீதிகளும் அரண்மனையுந்தான்கடந்து
மாடத்தெருக்கடந்து மண்டபமருகில்வந்து
பல்லக்கைவிட்டிறங்கிப் பார்மனையினுட்புகுந்து
முத்துமிதியடியைத் தொட்டுமிகநடந்து
மாணிக்கக்கிரீடங்கள் மகுடமுடிதுலங்க
தாதியர்கள்சூழ்ந்து தனிக்கவரிவீசிவர
மாதர்புடைசூழ மண்டபஞ்சென்றேறினர்
ஓராம்படித்தளமாம் ஓலைப்பூமண்டபமாம்
இரண்டாம்படித்தளமாம் இரத்னகிரிமேடைகளாம்
மூன்றும்படித்தளமாம் முத்துச்செம்பொன்படிவாசல்
நான்காம்படித்தளமாம் நாகரத்னமண்டபமாம்
ஐந்தாம்படித்தளமாம் அரக்குமணிமேடைகளாம்
ஆறும்படித்தளமாம் அழகானமேடைகளாம்
ஏழாம்படித்தளமாம் எழிலானமண்டபமாம்
எட்டாம்படித்தளமாம் எண்ணெய்க்கால்மண்பமாம்
ஒன்பதாம்படித்தளமாம் ஓலைப்பூச்சாவடியாம்
பத்தாம்படித்தளமாம் பளிங்குமாமண்டபமாம்
ஆயிரக்கால்மண்டபத்தில் அல்லியரும்வந்தமர்ந்தாள்
செம்பொன்முடிதுலங்கச் செங்கோலில்வந்தமர்ந்தாள்
ஆறுயிரம்பாண்டியர்களனைவரும்வந்தமர்ந்தார்
பன்னிரண்டுமந்திரியும் படைத்தலைவர்வந்தமர்ந்தார்
மந்திரிபிரதானிகளும் மற்றுமுள்ளராசர்களும்
முன்னூறுகோடி முடிமன்னர்வந்தமர்ந்தார்
நானூறுகோடி நகரத்தார்வந்தமர்ந்தார்
ஐந்நூறுகோடி அரசுமன்னர்வந்தமர்ந்தார்
முடியோடுமுடிநெருங்கும் முருகுழலாளம்பலத்தில்
சட்டையோடுசட்டை நெருங்குஞ்சபைதனிலே

அமரதருஞ்சமரதரும் அதிரதரானவரும்
கலிங்கர்தெலுங்கர்களும் கன்னடியரானவரும்
ஈழத்துவங்கணரும் இளநாட்டுச்சோனகரும்
நிறைந்தகொலுவாயிருக்கும் நேரிழையாளம்பலத்தில்
அப்பெரிய சபைதனிலே அல்லியவள்கொலுவிருக்க
காணவருவாருங் கைகட்டிநிற்பாரும்
பார்க்கவருவாரும் பாண்டிப்பெருமாளே
தூரத்துராஜாக்கள் சுருளோலைகொண்டுவருவார்
காதத்துராஜாக்கள் கையோலைகொண்டுவருவார்
செம்பொன்னுங்கப்பணமுந் தீவுகிளிப்பிள்ளைவரும்
இந்தவிதமாக இருக்கின்ற வேளையிலே

## புலந்திரன் விளையாடல்.

அந்தச்சமயத்தில் அழகுபுலந்திரனும்
செண்டுமறவானுஞ் சினேகிதரைத்தான்பிரியான்
கோட்டுமறவானுங் கூட்டாளிபிரியானும்
தாயாரைச்சுற்றிவந்து தயிருக்கழுவானும்
பாதத்தைச்சுற்றிவந்து பாலுக்கழுவானும்
விளையாடிவீட்டில்வந்து வெண்ணெக்கழுவானும்
முகந்தாக்கால்வாயதனை மூலைப்பால்கவுச்சடிக்கும்
வீதிவிலாசமது விளையாடும்வேந்தனவன்
தங்கத்தேரோட்டித் தார்வேந்தர்வீதியெல்லாம்
செம்பொன்தேரோட்டித் திகழ்வேந்தர்வீதியெல்லாம்
மாணிக்கத்தேரோட்டி மன்னர்தெருவீதியெல்லாம்
முத்துத்தேரோட்டி முடிமன்னர்வீதியெல்லாம்
வசந்தமணிமண்டபத்தின் வழியேவரும்போது
பஞ்சவர்ணக்கிள்ளைகளைக் கண்டந்தப்பாண்டியனும்
இப்படிக்கொத்ததே ரியபற்றப்புலந்திரனும்
மாதாக்கொலுசபைக்கு வந்தான்புலந்திரனும்
தண்டையசையச் சதங்கைகலகலென்ன
அரவடமுங்கிண்கிணியும் அரையில்நிழல்காட்ட

கண்டசாமுங் கனவயிரத்தாழ்வடமும்
மார்பில்பதக்கமின்ன வச்ரதவசங்கள்மின்ன
வட்டமிட்டநெற்றியிலே வயிரமுடிதுலங்க
பட்டுதட்டிவொட்டியாணம் பசும்பொன்னூற்சமுதாடும்
கச்சுபுரண்டாடக் கட்டழகன்வாரானும்
சிறுகால்மிதியடியாம் சிங்காணிவில்லழகாம்
பக்கமிருபுரமும் பரிசுபிடித்துவர
கட்டழகன்பின்னாகக் கத்திசுழற்றிவர
ஈட்டிபிடித்தவர்கள் இருபுறமுஞ்சூழ்ந்துவர
தாயார்கொலுச்சபையில் தார்வேந்தன்வந்துநின்றான்
வந்துநின்றதன்மகனைக் கண்டந்தஅல்லியரும்
அப்பாமகனேவா அழகானகண்மணியே
பிள்ளைகலிதீர்த்தவனே பெருமாளேவாருமென்றாள்
அண்டத்துச்சந்திரனே அருகிருக்கும்பாற்குடமோ
சொக்கர்திருமாளிகைக்குத் தூண்டாமணிவிளக்கே
வைகைக்கரைதனக்கு மண்சுமந்தசொக்கருள்
கப்பலுஞ்சோங்கும் கரைதுறையுமுள்ளவனே
சங்கீன்றமுத்தோ சகதலமாண்டவனே
ஆறுயிரம்பாண்டியற்கு அழகானபேரமையோ
வாராய்மகனேயென்று வாரிமடியில்வைத்து
ஏந்திமடியில்வைத்தாள் இருகொங்கைபாலொழுக
சட்டையைநீக்கியே சரீரமெல்லாமுத்தமிட்டாள்
உச்சிமுகந்தாளே உள்ளங்கால்முத்தமிட்டாள்
மைந்தனரைப்புல்கி மடிமேலேவைத்திருந்தாள்
என்னவேணுமென்மகனே எனக்கறியக்கூறுமென்றாள்

புலந்திரன் தாயாரைப் பவளத்தேர் கேட்டது.

எண்ணிப்புலந்திரனும் ஏங்கியுரைக்கலுற்றான்
தாயார்முகம்பார்த்துத் தார்வேந்தனேதுரைப்பான்
உலகமதையாளுகின்ற உன்மைந்தனனதினால்
நான்-ஏறிவிளையாட இயலானதங்கரதம்

தங்கத்தேர்தந்தாரே தார்வேந்தரென்பாட்டன்
செம்பொன்தேர்தந்தாரே திகழ்வேந்தரென்பாட்டன்
மாணிக்கத்தேர்தந்தாரே மகாமன்னரென்பாட்டன்
சித்திரைவீதிகளும் சிறப்பானதோப்புகளும்
மட்டில்லாவீதியது மதுரைப்பெருந்தெருவும்
வாழ்பாண்டிநாடாளும் மதுரையுஞ்சுற்றிவர
பாண்டியப்பெருமாளே பவளத்தேர்வேண்டுமம்மா
தந்தாலேயல்லாது சாதமுமுண்ணேனம்மா
போஜனம்வேண்டேனென்று புலந்திரன்பிணங்கினான்
மைந்தனுடவார்த்தையைக் கேட்டந்த அல்லியரும்
கேளாக்கருமத்தைக் கேட்டாயேகண்மணியே
தங்கத்தேர்வேண்டித் தார்வேந்தேகேளாமல்
முத்துத்தேர்வேண்டி முடிமன்னாகேளாமல்
மாணிக்கத்தேர்வேண்டி மன்னவனேகேளாமல்
என்னுடையராச்சியத்தில் இல்லையேபவளமது
இல்லாதவுடமைதனை யென்மகனேகேட்டாயே
உற்றுநினைத்தாளே ஒருகோடிபுத்திகளை
மைந்தன்மொழிகேட்டு மனதுதுயரமதாய்
அப்பெரியசபைதனி லனேகமன்னர்தங்கள்முன்னே
ஆறுயிரம்பாண்டியர்கள் ஐயன்மார்சபைதனிலே
வேந்தர்சபைதனிலே மெல்லியருமேதுரைப்பாள்
என்னுடையகொலுவிலே இருக்குமந்தராஜர்களே
மந்திரிபிரதானிகளே வாய்மொழியைக்கேளுமென்றாள்
பாலன்புலந்திரற்குப் பவளத்தேர்வேண்டுமாம்
அறிந்தாலுரையுங்கள் அழகானராஜர்களே
இவ்வார்த்தைகேட்டு எதுரைப்பார்மந்திரிமார்
இங்கேகிடையாது இயலானநற்பவளம்
வடக்கேவெகுதூரம் வண்மைதீவாந்திரத்தில்
தீவாந்தரக்காட்டில் செம்பவளம்விளைகிறது
பன்னிருகாதவழி பவளம்விளைகிறது
அங்கேயிருக்குதம்மா அழகானநற்பவளம்

கொண்டுவருவார்களிங்கே உண்டானல் நீரனுப்பும்
என்றதுகேட்டு எதுரைப்பாளல்லியரும்
என்னுடையசபைதனிலே இருக்கின்றராஜர்களே
தீவாந்திரம்போகிற தீரருண்டோஇச்சபையில்
போகிறதுரைகளுண்டோ புறப்படுங்களிச்சபையில்
தாம்பூலம்வாங்குங்கள் சமர்த்துள்ளராஜர்களே
மீசையுள்ளராஜாக்காள் வெளிப்பட்டுவாங்களென்ருள்
நாடுதருவேன் ராச்சியமும் நான்தருவேன்
பூமிதருவேன் புதுப்பட்டங்கட்டிவைப்பேன்
என்னைப்போல்ராஜா யினியபட்டங்கட்டிவைப்பேன்
வல்லமையுண்டானல் வாங்குங்கள்தாம்பூலம்
என்றதுகேட்டவுடன் இயலானமந்திரிகள்
பட்டத்துமந்திரிகள் பார்வேந்தரேதுரைப்பார்
அல்லிப்பெருமாளே ஆச்சியரே நீர்கேளும்
மதுரைப்படைத்தலைவர் மந்திரிகளேதுரைப்பார்
பிறந்தோமதுரையிலே வளர்ந்தோமதுரையிலே
மதுரைக்குஅப்பாலே வனமொன்றுநாமறியோம்
அறிந்துபொய்சொன்னலே ஆக்கினைகள்செய்திடுவாய்
உன்-ஆக்கினைக்குத்தான்பயந்து ஆச்சியரேபோனலும்
பவளம்விளைகின்ற பாங்கான அக்காட்டில்
ஆனைத்தலைபோலே அனேகவண்டுதானிருக்கும்
சிங்கத்தலைபோ லிருக்குமாஞ்செங்குளவி
குதிரைத்தலைபோ லிருக்குங்கருங்குளவி
காதாலேகேட்டதுண்டு கண்ணலேபார்த்ததில்லை
தீவுக்குப்போனவர்கள் திரும்பிவந்துசேர்ந்ததில்லை
என்றதுகேட்டிருப்போம் இனியொன்றுநாமறியோம்
எங்களால்முடியாது என்ருர்கள்மந்திரிகள்
இன்னமொருவார்த்தை இயம்புவோமாச்சியரே
ஆனலழகுமன்னன் அர்ச்சுனராஜதுரை
அவரைப்போற்சூரரிங்கே ஆருமொருவரில்லை
சீமைசீமைதேசமெல்லாந் திரிந்துவந்ததேர்விசையன்

எந்தெந்தராஜாக்கள் எதிர்ப்பாரொருவரில்லை
அவருக்குமிஞ்சின ராண்மையுள்ளாராருமில்லை
ராசாக்களானாலும் ராக்ஷதர்களானாலும்
எதிர்த்துவந்தபேர்களை இருதுண்டாய்ப்போட்டிடுவார்
அவரையழைத்துநீ அனுகூலம்பண்ணாலே
மைந்தனுக்குப்பவளத்தேர் வந்துவிடுமப்போது
மற்றொருவர்தன்னாலே யாகாதுமாதாவே
என்றதுகேட்டாளாம் எரிபறந்துகண்சிவந்து
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்கோபமானாள்
ஆரூதகோபமது ஆனது அல்லியர்க்கு
கொல்லுங்குருவியைப்போல் கோபித்துக்கண்சிவந்து
மந்திரிகளாகையினால் மனம்பொறுத்தேனிப்போது
மற்றொருவராலாக்கால் வயிரமுடிகொய்திடுவேன்
தனிப்பட்டங்கட்டியே தனியரசாண்டேனே
பெண்பட்டங்கட்டியே பூமியரசாண்டேனே
மடலூர்ந்துஎன்னை மாலையிட்டார்வாள்விசையன்
மன்னன்புலந்திரனார் பிறந்தபிறகாக
அப்போதுவாள்விசையன் அர்ச்சுனனாரிங்கேவந்தார்
எங்குவந்தீரென்றுநான் கேட்டேனேஅப்போது
அதுவேயொருகுற்றமதாய் ஆயாசப்பட்டவரும்
என்னை-கும்பிட்டுப்போனாரேகுலவிசையனருச்சுனனும்
மைந்தன்பிறந்துமே வயதுமேழந்தாச்சு
இத்தனைநாள்வரைக்கும் இங்கேவந்தாராருமில்லை
வாராதஅருச்சுனரை வணங்குவேனோமந்திரியே
நாடாளும்ராசாத்தி நானோவணங்குவது
என்றதுதான்கேட்டு எதுரைப்பார்மந்திரிகள்
புருஷனுக்குந்தேவிக்கும் பெரும்பகைகளுண்டாமோ
அரிசிகுறைவுமில்லை ஆளன்பகையுமில்லை
வரிசையுடன்வணங்கி வரவழைத்தீராமானால்
கணவனுக்குவணங்கினால் கனமோசமொன்றுமில்லை
இதனாற்பழுதுமில்லை என்றார்கள்மந்திரிகள்

அவ்வார்த்தைதான்கேட்டு அல்லியருமேதுரைப்பாள்
ஐந்துவருஷமாய் அவரைமறந்திருந்தேன்
மறந்திருந்தஅர்ச்சுனரை வரவழைத்தேனானலே
ஆசையினாலே வரவழைத்தேனென்பார்கள்
ஊரிலேஉள்ளவர்கள் உலகாண்டராசாக்கள்
நாட்டிலேஉள்ளவர்கள் நகைப்பார்களிப்போது
கண்டார்சிரிப்பார்கள் கலியுகத்தாரேசுவார்கள்
பார்த்தார்நகைப்பார்கள் பார்லோகமேசுவார்கள்
எப்படியானழைப்பேன் இயலானஅர்ச்சுனரை
என்றதுகேட்டவுடன் மந்திரிகளேதுசொல்வார்
தந்தையார்பெருமை யுண்டானால்தார்குழலே
பெற்றார்பெருமை யுண்டானால்மாதாவே
வளர்த்தார்பெருமை உண்டானால்தாயாரே
கொண்டார்பெருமை வேண்டாமோகொம்பனையே
கணவன்பெருமை வேண்டாமோகாரிழையே
ஆளன்பெருமையது வேண்டாமோ ஆரணங்கே
ஆனைகுதிரைகளை அரண்மனையில்கட்டிவைத்து
குதிரைகளைக்கட்டியே கொடிகொண்டுவாழ்ந்தாலும்
ஆளனிருந்து ஆளாதரசுமுண்டோ
புருஷனுமில்லாமல் பெருமைகள்செய்வாரோ
காவலர்கள்கோவிலிலே கைபெண்டீரென்பார்கள்
மன்னவர்கள்கோவிலிலே வாழாப்பெண்டென்பார்கள்
கொண்டார்பெருமை வேண்டாமோபொற்கொடியே
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்தான்கேட்டு
வம்பரவரர்ச்சுனர்க்கு விண்ணப்பஞ்செய்வதில்லை
ஆரடாதூதுவரே அழையுங்கணக்கர்களை
நாட்டுக்கணக்கெழுதும் நலமானமந்திரிகள்
சீமைக்கணக்குத் தெரிந்தெழுதும்மந்திரிகள்
கோட்டைக்கணக்குக் குறித்தெழுதும்மந்திரிகள்
ஊர்கணக்குப்பிள்ளைகளை ஓடியழையுமென்றாள்
அவ்வார்த்தைதான்கேட்டு ஆங்காரதூதுவர்கள்

ஓட்டம்நடையுமாக ஓடிவந்தார் தூதுவர்கள்
அவ்வார்த்தைகேட்டவுடன் அன்பாக்கணக்கரெல்லாம்
கடுகப்பயந்தார்கள் கணக்குச்சுமையெடுத்தார்கள்
எக்கிலெழுத்தாணி இடதுகையில்சுருளோலை
வண்ணக்குருத்தோலை வரிசையுடன்கைபிடித்து
உச்சிகொண்டைபோட்டார்கள் உதறிநடந்தார்கள்
சிங்காதனத்துக்கு முன்னாகவந்துநின்று
அல்லிப்பெருமாட்கு அடிபணிந்துதெண்டனிட்டார்
வந்தகணக்கருக்கு வட்டமணைபோட்டார்கள்
மண்தடுக்குபோட்டார்கள் வந்திருங்களப்பாவென்றாள்
தர்மாபுரமாளும் தர்மலிங்கராயருக்கும்
ஐவர்பஞ்சபாண்டவர்கள் அத்தையார்குந்தியற்கும்
வண்ணமிட்டவோலையிலே வக்கணையாயெழுதவேணும்
என்னவென்றாலோலையிலே எழுதுகிறீராலே
சோலைமலருடைய சொக்கர்திருவருளால்
ஸ்ரீரங்கநாதர் திருமால்கிருபையினால்
மதுரைமீனாட்சியம்மை மாதர்கிருபையினால்
அல்லியின்மேலே ஆரணங்குபெண்பிறந்தேன்
பெண்ணாய்ப்பிறந்து பெருமாள்முடிசூடி
அன்னம்போல்மண்ணாண்டேன் ஐம்பத்தாறுகாதவழி
திருமால்திருவுளத்தால் தரணிபதியாண்டிருந்தேன்
இன்னாள்வரைக்கும் ஏதுகுறையில்லாமல்
வையகத்தையாண்டிருந்தேன் மனக்குறைகளில்லாமல்
உங்கள்-செல்வக்குழந்தையது தேவேந்திரன்போன்
ஐந்துபிராயமையா அழகாய்வளர்த்தபிள்ளை
செண்டடித்துப்பந்தடித்து தெருவில்விளையாடி
பொன்னின்தேரோட்டியே போதவிளையாடி
வெப்பலாய்க்காய்ந்து விழுந்துபடுக்கையிட்டான்
பல்லைக்கடிக்கிறதும் பதறிவாய்பினத்துறதும்
பார்த்துபரிகாரி பண்டிதர்பணிக்கர்களும்
தோஷித்துப்போச்சுதென்று சொன்னார்களெந்தனுக்கு

கைதப்பிகாணுதென்று கற்பித்தாரென்னோடே
என்னமோஏதோவென்று இருக்குதுஎன்மனதில்
பொய்சொன்னேனென்று எண்ணுதீர்புண்ணியரே
ஓலைகண்ட நாழிகைக்கு வரவேணுமுத்தமனே
கண்ணாலேபார்க்குகைக்கு கடுகெனவேவந்திடுங்கள்
என்றதுசொல்லியே எழுதுங்கள்ஓலையென்றாள்
சீர்கணக்கப்பிள்ளைகளும் சொல்வசனந்தான்கேட்டு
சேமக்குருத்தோலை சிக்கெனவேதான்வாரி
அல்லியம்மாள்சொற்படிக்கு அவ்வோலைதானெழுதி
ஓலைச்சுருள்மடித்து செந்திருக்கைதான்போட்டார்
சீர்நல்லமுத்திரை திருவகுப்பின்கீழ்போட்டார்
அவ்வோலைதானெடுத்து ஆனந்தவாழ்மாரி
காற்றிலதிகமுள்ள கடுந்தூதரையழைத்து
நாழிகைக்குகாதவழி நடந்தோடுந்தூதுவரே
தருமருக்குக்கொண்டுபோய்கொடுமென்றாள் தையலரும்
மாலையோடே தலைகொடுக்கு மன்னரெழுந்திருந்து
ஓலைச்சுருள்வாங்கி ஓங்கிநடக்கலுற்றார்
மதுரைத்தெருக்கடந்து வைகைக்கரைநடந்து
சில்லென்றுபூத்த செடியும்வனங்கடந்து
புல்லென்றுபூத்த புலியின்வனங்கடந்து
ஓங்கிவளர்ந்ததொரு மூங்கில்வனங்கடந்து
பாதிரிமுல்லை பருத்தவனங்கடந்து
தருமரிடகோவிலுக்குத் தான்வந்துநின்றார்கள்
ஓலைச்சுருளைவைத்து வுத்தமனைத்தெண்டனிட்டார்
ஆர்பணிதூதா நீ அறியஉரையுமென்றார்
மதுராபுரித்துரையாள் வாழ்வரசியல்லியம்மாள்
அனுப்பியதூதரென்று அடிவணங்கிதெண்டனிட்டார்
அல்லிபணியென்ன அதிகமனமகிழ்ந்து
ஓலைச்சுருளவிழ்த்தார் உத்தமனார்தருமலிங்கம்
அதிலிருக்குமர்மமெல்லா மறிந்தாரேதருமலிங்கம்
நம்மைமதித்தாளோ நாடாளும்ராஜாத்தி

ஐயோமகனேயென்று அழுதுபுலம்புகிறார்
சம்போசிவனேயென்று தரையிற்புரண்டழுதார்
தம்பிதனஞ்சயற்குத் தனயனெனவந்தவனே
மதுரைநகராளுகைக்கு மைந்தனென்றுநானிருந்தேன்
தீர்ந்துதோஉன்னுசை சிவலோகம்போராயோ
சிவனாரிடபாதம் சேருகைக்குநாளாச்சோ
ஐக்கியமாய்ப்போகவே ஆச்சுதோவுன்சீவன்
பொன்னுமணியே புலந்திராஜாவே
அல்லிமகனே அழகுபுலந்திரனே
கட்டிமகனே கைலாசம்போராயோ
பொன்னுங்குடமேநீ புஷ்பமேபோராயோ
ஐயகோவென்று அலறிப்புலம்பலுற்றார்
வெற்றிமதயானை வீமனவன்கேட்டு
தானுமழுதானே தருமருடனுக
நகுலசகாதேவ ராசர்புலம்பலுற்றார்
தோராவடிவழகி துரோபதைபுலம்பலுற்றாள்
மந்தாரக்குந்தியரும் மாதுபுலம்பலுற்றாள்
சங்கோதியாள்கூடத் தானும்புலம்பலுற்றாள்
அந்நகருநாடும் அரசுமிகத்தயங்க
தக்கபுகழுடைய தர்மரவரேதுசெய்தார்
வில்லாளிபார்த்தன் விஜயனெங்கேசென்றானோ
அர்ச்சுனனைக்கண்டுநான் ஐந்தாறுநாளாச்சு
எங்கேயிருப்பிடமோ ஒன்றுமறியோமே
ஆடாதாதுவரே அழையுங்கள்தோட்டிதன்னை
தமுக்கடிக்குந்தோட்டியை தானழைத்துவாருமென்றார்
என்றசொல்தான்கேட்டு எழுந்தோடிதூதுவர்கள்
பறையறையுஞ்சாம்புவனை பார்த்தழைத்துவந்தார்கள்
தர்மரண்டைவந்தவனும் சாஷ்டாங்கதெண்டனிட்டு
என்னையழைத்தது ஏதுகருமமென்றான்
அப்போதுதருமலிங்கம் ஆணழகரேதுசொல்வார்
பாராளுந்தருமருக்குப் பாக்கதுசொக்கிற்றென்று

மெத்தவேபல்லிக்கை காணுதுவேந்தருக்கு
விஜயர்முகத்திலே விழிக்கவென்றாரிப்போது
களைதாங்கிப்போச்சுது கட்டழகர்தருமருக்கு
விஜயர்பெருமாளை வைத்திருந்தால்விட்டிடுங்கள்
தருமாபுரமெல்லாந் தமுக்கடித்துவாருமென்றார்
வீதிபதினாயிரமும் வீரமுரசடியுமென்றார்
இவ்வார்த்தைகேட்டவனும் எழுந்தானேசாம்புவனும்
ஆனையேறிமாலைசூட்டி அடித்தான்பறையோசை
தருபாபுரவீதியெல்லாந் தமுக்கடித்துவாராணும்
என்னசொல்லிதமுக்கடித்தான் இயலானசாம்புவனும்
பாராளுந்தருமருக்குப் பாக்கதுசொக்கிற்று
களைதாங்கிப்போச்சு கட்டழகர்தருமருக்கு
பேச்சுமூச்சில்லாமற் பிணம்போல்விழுந்துவிட்டார்
அனைவோருமங்கே அழுதுபுலம்புகிறார்
அர்ச்சுனராஜாவை ஆர்வைத்திருந்தாலும்
கண்டவர்கள்விட்டிடுங்கள் கடுகியெழுப்பிடுங்கள்
என்றுஅடித்தானே இயலானதமுக்கோசை
செப்பியடித்தானே தேர்விஜயன்தான்கேட்க
தேவதாசிதெருவுகளும் தெருவுபதினாயிரமும்
அந்தத்தெருப்பெண்கள் அனைவோருமேதுசொல்வார்
காளையருச்சுனரைக் கண்ணாலேகண்டதில்லை
எங்களிடவீதியிலே எழில்விஜயன்வாரதில்லை
மாயர்தங்கைசுபத்திரையாள் மச்சினியார்வீதியிலே
அங்கேயிருப்பார்காண் அர்ச்சுனவீரியனார்
தனஞ்சயரென்றுசொல்லிச் சாமத்திற்கண்டதுண்டு
உத்தமரென்றுசொல்லி ஓமத்திற்கண்டதுண்டு
ஓமப்புகையிலேதான் உடனிருந்தபாவமுண்டு
கலியாணப்பந்தலுக்குள் கைகோர்த்துநின்றதுண்டு
அம்மிமிதித்ததுண்டு அருந்ததிபார்த்ததுண்டு
ஆளனிவனென்று அனைவோருஞ்சொல்வார்கள்
இவ்விடம்வாராரே எழில்விஜயனர்ச்சுனரும்

இடைச்சியுடமாளிகையில் இருப்பாரெனக்கேட்டு
அந்தத்தெருக்கடந்து அப்பாலேபோகலுற்ருன்
சுபத்திரையாள்வீதியிலே சொல்லித்தமுக்கடித்தான்
தருமருக்குவந்ததொரு தாழ்வெலாஞ்சொல்லலுற்ருன்
அடித்ததமுக்கோசை அர்ச்சுனருங்கேட்டுவிட்டார்
தேர்விஜயன்கோமானுந் திடுக்கிட்டுத்தானெழுந்தார்
பஞ்சணையைவிட்டுமெவர் பதறியெழுந்திருந்தார்
சுபத்திரையாள்கண்ணை விழித்தவளுமேதுசொல்வாள்
ஆசாரவாசல்செல்ல எழுந்தீர்காணுணழகா
எவளிடவாசல்செல்ல எழுந்தீர்காணெழில்விஜயா
வயிற்றிற்பிறந்தவளை சிந்தையில்நினைத்தீரோ
மின்னொளியாள்வாசலுக்கு மேவநினைத்தீரோ
போகவதிசிந்தை நினைத்தீரோபோர்விஜயா
நாககன்னிவாசலுக்குப் போகநினைத்தீரோ
மதுரைதுரையல்லியரை மனதில்நினைத்தீரோ
மற்றொருவர்சிந்தை நினைத்தீரோமன்னவனே
ஆர்மேலே ஆசைகொண்டு ஆணழகா நீயெழுந்தாய்
எசுறதுகேட்டவுடன் எழில்விஜயனேதுசொல்வான்
அல்லகாண்பெண்ணரசே ஆரணங்கே நீகேளாய்
பராளுந்தருமருக்குப் பாக்கதுசொக்குனதாம்
மெத்தவும்பல்லிக்கை தோணுதாம்வேந்தருக்கு
அதிகஇளப்பாக இருக்குதாம்அண்ணனுக்கு
முகத்தில்முழிக்கஎன்னை மொய்குழலேதேடுகிருர்
அது-என்னகருமமென்று அறிந்தோடிநான்வாரேன்
துழாய்மவுலிதங்கையவள் சுபத்திரையேதுசொல்வாள்
தருமரிடவாசலல்லால் தையல்மார்வீடுசென்ருல்
மற்றொருத்திவீடுநீ சென்ருலேவாள்விஜயா
ஒருகவளஅன்னமது உண்ணேனேபாலமிர்தம்
திருப்பிவருமளவுந் தின்னேனிலையடக்காய்
என்றதுதான்கேட்டு எழில்விஜயனேதுசொல்வான்
உன்னைத்தவிறவிட்டு உலகளந்தான்தங்கையரே

பின்னொருவாசலுக்கும் போவேனென்றெண்ணாதே
அண்ணனைத்தான்பார்த்து அரைக்ஷணத்தில்வாரேனடி
பாலடிசலுண்டுநீ பாங்காயமுதுசெய்து
வாசங்களுண்டு மகிழ்ந்திருங்காண்மங்கையரே
வாடாமல்நீயிருங்காண் மாதரிளங்கொடியே
போகச்சிலவருளும்போய்வாரேன்பெண்ணேயென்றார்
மாயாசுபத்திரையாள் வாய்திறந்தேதுரைப்பாள்
ஆகிலும்உம்மைநான் அடையாளஞ்செய்திடுவேன்
அடையாளங்குறையாமல் அர்ச்சுனரேவாருமென்றாள்
வைத்தஅடையாளம் மாறாமல்வாருமென்றாள்
சந்தனங்குங்குமமும் சவ்வாதுந்தான்குழைத்து
அர்ச்சுனன்மார்பிலே அள்ளியறைந்தாளே
சந்தனத்தாலே சதுராய்ப்படமெழுதி
குங்குமத்தாலே குறிப்பாய்ப்படமெழுதி
மூத்திரைமோதிரத்தால்மூண்மார்பிற்குறியும்வைத்தாள்
குறியுங்குறையாமல் கொப்பெனவேவாருமென்றாள்
ஆணழகுமன்னன் அர்ச்சுனனேதுசொல்வான்
மாதரிடவாசலுக்கு மயிலணையேபோனுக்கால்
உன்-குறிவந்துகூப்பிடுமோ கொம்பேரிடையாளே
உன்-ஆணைவந்துகூப்பிடுமோ ஆனந்தவாழ்மாரி
இருமென்றுசொல்லி எழில்விஜயன்போய்நடந்தான்
நீண்டிடுங்கால்களுக்கு நெரிஞ்சிப்பூச்சல்லடமாம்
மண்டியிடுங்கால்களுக்கு மாதளம்பூச்சல்லடமாம்
குந்தியிடுங்கால்களுக்கு குறிஞ்சிப்பூச்சல்லடமாம்
தூக்கிவைக்குங்கால்களுக்கு துத்திப்பூச்சல்லடமாம்
சந்திரகாந்திதட்டிகட்டி தாமரைப்பூச்சுங்குவிட்டு
சிங்காணிவில்பிடித்து தேர்விஜயன்போய்நடந்தான்
பொன்னிழைத்தப்பட்டா புவியிற்புரண்டுவா
பூங்காவனம்புகுந்து புஷ்பமலரெடுத்து
தருமரைப்பூசைபண்ணச் சம்பங்கிப்பூப்பறித்து
வாய்வேகமாகவே வந்துவிட்டானர்ச்சுனனும்

அங்காடிவீதிகளும் அரசர்தெருவுந்தாண்டி
தருமரிருக்கின்ற சாதிலிங்கமேடையிலே
சாந்தணிந்தமேடையிலே தருமரைத்தான்பார்த்து
தருமரிடபாதத்தில் சாஷ்டாங்கதெண்டனிட்டார்
கொண்டுவந்தபூமலரை குபுகுபென்றுதான்சொரிந்து
அண்ணாசரணமென்று அடிபணிந்துதெண்டனிட்டு
கைகட்டிநின்றுனே கட்டழகன் அர்ச்சுனனும்
வந்துபணிந்தவனை வாழ்த்தியெடுத்தணைத்து
வாழ்வாய்வளர்ந்திடுவாய் வையகத்திலென்னாளும்
நிற்பாய்நிலைதரிப்பாய் நிலையரசாண்டிருப்பாய்
கற்பதிந்ததூண்போலே கலங்காதரசாள்வாய்
பதினாறுகலையுடைய பார்த்தீபா நீகேளாய்
மதுராபுரித்துரையாள் வாழ்வரசியல்லிமகன்
பார்த்தீபாஉன்மகன்தான் பாலன்புலந்திரனார்
செண்டடித்துப்பந்தடித்துத் தெருவில்விளையாடி
கொட்டிவிளையாடி வீட்டில்வந்துபாலகனும்
களைத்தாற்போல்விழுந்தானும் காளைபுலந்திரனும்
காய்ச்சலாய்க்காய்கிறதும் கண்ணைச்சொருகிறதும்
வெப்பலாய்க்காய்கிறதும் மெத்தவாய்பினத்துறதும்
நயனங்கள்பஞ்சடைந்து நாக்கைவறட்டுறதும்
தோஷித்துப்போனதாய்த் தோணுதாமைந்தனுக்கு
பண்டிதர்பணிக்கர்களும் பார்த்தவயித்தியரும்
கைவிட்டுப்போனாராங் கட்டழகாஉன்மகனை
முகத்தில்விழிக்கவென்று மூடிபுனைந்தராஜாத்தி
ஓலையெழுதியே வரவிட்டாளுத்தமனே
தூரத்துச்செய்தி சுருளோலைவந்திருக்க
போகாதிருந்தாக்கால் பிழைவந்துநேர்ந்துவிடும்
ஆகையினால்தம்பியரே அர்ச்சுனரேபோய்வாரும்
அச்சுதானந்த ஐயரை நீர்கூட்டிப்போம்
அவள்—ஆங்காரிகன்னியென அறிவோமவள்குணத்தை
மண்ணாளும்ராஜாத்தி வலக்காரமுள்ளவள்காண்

அவன்-வார்த்தைக்குவார்த்தை மறுவார்த்தைபேசாதே
பாலன்புலந்திரர்க்குப் பல்லிக்கைதீரளவும்
உடம்புதெளிந்து உலாவித்திரியளவும்
வாழ்மதுரைராஜ்ஜியத்தில் மன்னுதனித்திருந்து
மைந்தன்புலந்திரனை மன்னுவரவழைத்து
குமாரனைக்கூட்டிவந்து குருநாடுசேருமென்றார்
என்வார்த்தைதள்ளாமல் இப்போநடவுமென்றார்
போய்வாருமென்றுசொல்லிப் புத்திமிகவுரைத்தார்
அப்போதர்ச்சுனனும் அப்படியேநல்லதென்றான்
குந்தியம்மாள்தன்பாதம்கொப்பெனவேதெண்டனிட்டு
தாயாரிடபாதஞ் சாஷ்டாங்கதெண்டனிட்டான்
மதுரைக்குப்போய்வாரேன் மாதாசெலவருளும்
போய்வாருமர்ச்சுனரே யென்றாளேபொற்கொடியாள்
வெற்றிமதயானை வீமாசெலவருளும்
அத்தண்டபேரும் அனைவோருஞ்செலவருள
முகத்திலேசீலையிட்டு முடிமன்னர்தானழுதார்
ஏதுக்கழுகிறீர் ஈஸ்வரன் துணையிருப்பார்
மைந்தன்புலந்திரற்கு வாட்டமொருக்காலுமில்லை
மாயன் துணையிருப்பார் மன்னவரேபோய்வாரும்
சொக்கர் துணையிருப்பார் சுந்தரரேபோய்வாரும்
என்றதுகேட்டு எழுந்தாரருச்சுனனும்
அச்சுதானந்த ரையருந்தானுமாய்
தோழனுந்தானுமாய்த் துரிதமாய்ந்தானடந்தார்
கோட்டைகடந்து கொத்தளமுந்தான்கடந்து
தருமாபுரங்கடந்து தானடந்தாரர்ச்சுனனும்
காடுகடந்து கரியமலைதான்கடந்து
ஆறுகடந்து அரியசுனைகடந்து
சில்லென்றகாடுஞ் செடியும்வனங்கடந்து
வைகைக்கரையேறி மதுராபுரிதேடி
தோழனுந்தானுமாய் துரிதமுடன்தானடந்தார்
மதுரையிலுள்ளவரைக் கண்டானேவாள்விஜயன்

அச்சுதானந்த ரையர்முகம்நோக்கி
மைந்தன்புலந்திரற்கு வாட்டங்களுண்டானல்
கம்மாதோநாடு கலங்காதோராஜ்ஜியங்கள்
என்னைக்கண்டபோதே எல்லாம்புலம்பாதோ
மைந்தன்புலந்திரற்கு வாட்டங்களொன்றுமில்லை
ஏதைநினைத்தாளோ இராஜாத்தியல்லியரும்
முன்னதுபூசல் முதலைநினைத்தாளோ
ஆங்காரக்கன்னியென்று அறிவோமவள்குணத்தை
அச்சுதானந்த ரையருங்கூறிடுவார்
வார்த்தைக்குவார்த்தை மறுவார்த்தைபேசாதே
சொல்லுக்குச்சொல்லு வில்லங்கம்பேசாதே
நீர்-முன்னேநடவுமென்று முகப்பணியிலுட்கார்ந்தார்
வாள்விஜயனர்ச்சுனனும் வந்தானரண்மனைக்கு
அங்கிருக்குந்தூதுவர்கள் அருச்சுனரைத்தொழுதார்
உங்கள்துரையெங்கேயென்றார் உலகாளும்ராஜாத்தி
ஆயிரங்கால்மண்டபத்தில் அங்கேயிருக்கின்றார்கள்
என்றதுகேட்டு எழில்விஜயன்போய்நடந்தான்
மாணிக்கமண்டபத்தில் வாள்விஜயன்போய்நடந்தான்
கொம்பனைக்குமுன்வந்து கும்பிட்டான்வாள்விஜயன்
கையெடுத்துக்கும்பிட்டான் காளையந்தஅர்ச்சுனனும்
வணங்கின அருச்சுனனை வாவென்றுதானழையாள்
என்னென்றுகேளாளாம் ஏறமுகங்கடுத்துவிழ
இருகால்கடுத்துவிழ ஈரிரண்டுநாழிநின்றார்
ஆணலழகுமன்னன் அர்ச்சுனனுமேதுசொல்வான்
ஒரு-ஆளடிமையென்றாலும் அரசதுரைநாயகமே
வந்தவராரென்று வாய்திறந்துபேசாரோ
எங்குவந்தீரென்ணுரோ அரசகுலப்பெண்பெருமாள்
என்றதுதான்கேட்டு இளங்கொடியல்லியரும்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்தான்கேட்டு
மன்னவரருச்சுனர்மேல் மர்மந்தொடுத்தோமென்றால்
மைந்தனுக்குப்பவளத்தேர் வாராதேஎன்றுசொல்லி

அண்ணாந்துபார்த்தாளே அர்ச்சுனராஜாவை
கண்டாளருச்சுனரை கனதியுள்ளமன்னவரை
முகத்தில்விழிக்கவென்று விதித்ததோஎந்தனுக்கு
உன்னைக்-கண்ணாலேகாண விதித்ததோஎந்தனுக்கு
தம்பிபுலந்திரனுந் தங்கத்தேர்கேளாமல்
மாணிக்கத்தேர்வேண்டி கேளாமல்மன்னவரே
பாண்டிவளநாட்டானும் பவளத்தேர்கேட்டதினால்
கண்ணாலேகாணக் கிடைத்ததோஎந்தனுக்கு
கண்ணானமைந்தனுக்கு திருஷ்டிகழித்துவிட்டேன்
என்றதுகேட்டு எழில்விஜயனேதுசொல்வான்
பாண்டிவளநாட்டார்க்கு பவளத்தேர்வேணுமென்றால்
ஒரு-ஆளோடேசொல்லி அனுப்பிவைத்தீரானாலே
பவளத்தேர்செப்பனிட்டு அனுப்பிவைத்தீரானாலே
மைந்தன்புலந்திரற்கு வாட்டங்கள்வந்ததென்று
தோஷித்துப்போச்சுதென்று சொல்லியனுப்பலாமோ
தருமருந்தான்கேட்டு தயங்கியழுதாரே
வீமரதைக்கேட்டு விம்மியழுதாரே
ஈரல்புகுந்ததொரு இரட்டையர்கள்தானழுதார்
மந்தாரக்குந்தியரும் மாதுபுலம்பிவிட்டாள்
தீயிற்பிறந்தவளுந் திகைத்துபுலம்பிவிட்டாள்
அந்நகரும்நாடு அரசுந்தளும்பினது
தருமாபுரத்திலுள்ளார் தவித்துப்புலம்பலுற்றார்
இப்படிக்குஓலை யெழுதுவதுஞாயமாமோ
பூமியரசாண்டவர்கள் பொய்யோலையெழுதலாமோ
அவ்வார்த்தைகேட்டுமவள் அல்லியருமேதுரைப்பாள்
பாராளும்வேந்தனவன் பவளத்தேர்வேணுமென்று
உண்ணேன்குளியேன் உறங்கேனேபஞ்சணையில்
சாவேன்மடிவேனென்றான் சமர்த்துள்ளபுத்திரனும்
பாலமுதமுண்ணேன் பள்ளிக்குப்போகேனென்றான்
உண்மைகளைச்சொல்லி ஓலையெழுதினாக்கால்
மாலைமுடியானே வருவதொருக்காலுமில்லை

சித்தாயன் தங்கையவள் சிறுக்கிசுபத்திரையாள்
சோரவள் நங்கை சுபத்திரை நாயகியாள்
அல்லும்பகலும் அறுபதுநாழிகையும்
அவள்மயக்கமெத்தவல்லோ ஆணழகாவுந்தனுக்கு
தேவடியாள்வீதியெல்லாந் திட்டுண்டுதிரிகிறவர்
வருவீரோவாரீரோ யென்றெண்ணிமன்னவனே
கூத்திமேலாசையுண்டோகுழந்தைமேலாசையுண்டோ
உந்தன்மனமறிய யெழுதினேனேலையென்ருள்
மெய்யென்றுசொல்லியே வந்தீரேவாள்விஜயா
பவளத்தேர்கொண்டுவந்து தருவீரோபார்த்தீபா
ஆமென்ருற்சொல்லு மல்லவென்ருல்தள்ளுமென்ருள்
மதுராபுரியாளே மகுடத்துரைச்சியரே
தீவாந்தரத்திற்போய்த் தேடியேகொண்டுவாரேன்
எங்கேயிருந்தாலும் இக்ஷணமேகொண்டுவாரேன்
பாங்கானபுலந்திரற்கு பவளத்தேர்கொண்டுவாரேன்
எத்தனை நாளையிலே எனக்குத்தேர் தந்தருள்வீர்
பொய்வசனஞ்சொல்லாமல் போர்விஜயா நீருரையும்
மூன்றுநாளைக்குள் முடித்துநான்வாரேனென்ருன்
ஒன்பதுநாளையிலே உனக்குத்தேர் கொண்டுவாரேன்
பவளம்வெட்டப்போமிடத்தில்பார்த்திபா அர்ச்சுனரே
தேர்வேண்டிப்போமிடத்தில் தேர்விஜயா அர்ச்சுனரே
கானகத்திற்கன்னியரைக் கண்டுமயங்காதே
பல்லைத்திறந்திடுவாய் பரிகாசஞ்செய்திடுவாய்
மர்மங்களாகவே இருப்பீரோமன்னவரே
அப்படிஏதேனு மிருந்ததேயுண்டானல்
எமலோகம்போனலும் இட்டுவந்துசங்கரிப்பேன்
பாதாளம்போனலும் பார்த்துவந்துசங்கரிப்பேன்
வாள்விஜயனர்ச்சுனனும் மறுவார்த்தையேதுரைப்பார்
ஐந்துபிராயம் அழகுள்ளபுலந்திரனர்
மைந்தன்மேலாணையது மச்சுரதங்கொண்டுவாரேன்
மைந்தன்மேலாணையிடப் போதமனம்வந்ததோ

ஏதாய்துணிந்தது என்மகன்மேலாணையிட
இருவருமாகவே இருந்தங்கே பேசுகையில்
அச்சுதானந்த ரையரும்வந்துவிட்டார்
குருக்கள்மகனுரைக் கொப்பெனவேதான்பார்த்து
வாருமென்றுதானழைத்தாள் மகுடமுடியல்லியவள்
வைகைவளநாடறிந்து வந்தீரோமன்னவனே
வாழ்மதுரை நாடுவழியுந்தெரிந்ததோ
மதுரைக்கொருபயணம் வாராதிருந்ததென்ன
என்னைச்சிறைவைத்தானே எழில்விஜயகோமானும்
என்னைமறந்து இருந்தானெழில்விஜயன்
அவர்தான்வருகாமற் போனாலுமச்சுதரே
நீர்தானொருபயணம் நேர்ந்துவரலாகாதோ
வாள்விஜயனில்லாதே வரவுஞ்செலவுமில்லை
நல்விஜயனில்லாதே நல்லபெருமையில்லை
நல்விஜயனில்லாமல் நான்தான்வருவேனோ
ஆனாற்கேளையாவே அச்சுதானந்தரே
பாலன்புலந்திரனும் பவளத்தேர்சேட்டதினுல்
ஆகையினாலே அழைப்பித்தேனருச்சுனரை
மாலையிட்டநாள்முதலாய் வணங்காதகன்னிகைநான்
மைந்தனுக்காகவே வணங்கினேனர்ச்சுனரை
பாண்டிவளநாட்டுப் பவளத்தேர்செப்பனிட்டு
மூன்றுநாளைக்குள் முடித்துநான்வாரேனென்று
மைந்தன்மேலாணையிட்டு மன்னவனும்வாரார்காண்
அண்ணாவே நீரும் அறிந்திடுமிதனையென்றாள்
இப்படியாகவேதான் இருக்கிறவேளையிலே

பாண்டியர்கள் அர்ச்சுனரைக் காணவருதல்.

அர்ச்சுனர்வந்தசேதி யறிந்தந்தப்பாண்டியர்கள்
மருமகனைக்காணுகைக்கு வாரார்கள்பாண்டியர்கள்
மகமேருபருவதம்போல் மகிழ்ச்சியுடன்வந்தார்கள்

பொன்னுமலைநாடாளும் போர்எழுதியார்கூட
அல்லியின் தன்னருகே அனைவோரும்வந்தமர்ந்தார்
மகுடத்துரையாளும் வணங்கினளப்போது
வாருமிருங்களென்று மரியாதைபண்ணினாள்
அர்ச்சுனரைத்தான்பார்த்து ஆறுயிரம்பாண்டியரும்
மதுரைக்குவரவுமக்கு வழியுந்தெரிந்துதோ
வைகைவளநாடு வழியுந்தெரிந்துதோ
மதுரைக்கொருபயணம் வாராதிருந்ததென்ன
வாராமல் நீரிருக்க வைராக்கியங்களுண்டோ
ஆத்திமரம்பூத்ததுபோல் அதிசயமாய்த்தோணுகுது
பிறவாமுடிதரித்த பெண்பெருமாளேதுசொல்வாள்
பாண்டிவளநாட்டானும் பவுளத்தேர்கேட்டதினால்
ஆகையினாலே அழைத்தேனிவரையிங்கு
சீக்கிரமாய்த்தீவுக்குப் போங்காணுந்தேர்விஜயா
ஆறுயிரவர் அணிதிரளாம்பாண்டியர்கள்
வந்தக்காலாறவில்லை மாதுகுலப்பெண்பெருமாள்
இன்றொருநாள்போக்கி இனியொருநாளாகாதோ
பசியோடிருக்கிறார் பாலமுதஞ்செய்யுமென்றார்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்தான்கேட்டு
பாண்டிவளநாட்டார்க்குப் பவளத்தேர்வந்தபின்பு
விருந்துசமைக்கிறதும் வெகுமானம்பண்ணுவதும்
சீக்கிரமாய்த்தீவுக்குச்சென்றுநடவுமென்றாள்
காண்டாவனமெரித்த காளையவன்தான்கேட்டு
மைந்தன்புலந்திரற்கு வாட்டமுண்டாச்சுதென்று
மாதினுடவுத்தாரம் வந்தவுடனேநான்
சிவபூசைபண்ணவில்லை சலபாணஞ்செய்யவில்லை
நான்-காலால்நடவாமல் காற்றாய்ப்பறந்துவந்தேன்
இன்றுபகலைக்கு இருந்துநான்போரேனென்றான்

## அருச்சுனனுக்கு விருந்திடல்.

பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்தான்கேட்டு
தனக்குத்தொழில்செய்யுந் தாதிமுகம்நோக்கி

அடிசில்சமையுமென்றுள் ஆனந்தவாழ்மாரி
அப்போதுதாதியர்கள் ஆரணங்குதானெழுந்து
பத்துவிதக்கறியும் பதினெட்டுப்பச்சடியும்
நல்லபொறிக்கறியும் ராஜாக்கள்போஜனமும்
பொரித்தபொறிக்கறியும் பொன்போல்பருப்புகளும்
பச்சென்றகீரையும் பவளம்போல்நற்கறியும்
போதச்சமைத்தார்கள் பொற்கொடிமாதரெல்லாம்
அடிசில்சமைத்தோமென் றல்லியர்க்குத்தெண்டனிட்டு
அரண்மனையைத்தான்பெருக்கி அனைவர்க்குமனைபோட
அமுதுண் ணுஞ்சாலையிலே அல்லியரும்அர்ச்சுனரும்
மாயன்பெருமாளும் வந்தஅரசர்களும்
போஜனங்களுண்டு புண்ணியருங்கையலம்பி
சிங்காதனத்திலே சேரவேவந்திருந்தார்
அப்போது அல்லியரும் அந்தப்புரந்தானெழுந்து
காச்சாக்களிப்பாக்கும் கம்மாறுவெற்றிலையும்
ஆரங்கிப்பாக்குகளும் மோரங்கிவெற்றிலையும்
வாகாயிலைச்சுருளும் வர்ணத்துவர்பாக்கும்
கோவையிலைச்சுருளும் கொத்துத்துலாபாக்கும்
அள்ளிக்கொடுத்தாளே ஆணலழகனுக்கு
அந்தச்சமயத்திலே அர்ச்சுனராஜாவும்
வம்புபரியாசஞ் செய்தானேவாள்விஜயன்
அப்போது அல்லியம்மா ளாரணங்கேதுசொல்வாள்
ஐந்துவருஷமாக ஆர்ந்திருந்தகருமமதை
இன்றெழுந்தநாழிகையில் நினைத்திருக்ககர்மமுண்டோ
என்னுலேயாகாது என்றாளே அல்லியம்மாள்
அப்போதருச்சுனனும் ஆணழகனேதுசொல்வான்
பன்னிருகாதவழி பவளவனம்போறேனுன்
மனஸ்தாபம்பண்ணாதே மாலைமுடியாளே
மனஸ்தாபமென்னலுமே மாதுதலைகுனிந்தாள்
தலைகுனிந்தஜாடைதனைக் கண்டந்தத்தாதியர்கள்
தென்புறம்பள்ளியறை தேன்மொழிக்குத்தான்திறந்து

வடபுறம்பள்ளியறை மயிலனைக்குத்தான் திறந்து
கட்டிலின்மெத்தைகளைக் கனக்கவிரித்துதறி
காம்பரிந்தமல்லிகைப்பூ கட்டிலின்மேல்பரப்பி
பன்னீரும்கச்சாயம் பைங்கிளிக்குவைத்தாரே
கண்டந்த அல்லியரும் கடுகெநடந்தாளே
மஞ்சத்தின்மேலாக மாதுகுதித்தேற
அர்ச்சுனன்பின்தொடர்ந்து அல்லிபக்கந்தானிருந்து
தக்கோலந்தின்று தனித்துவிளையாடி
வெற்றிலைதின்று விரும்பிவிளையாடி
கச்சாயந்தின்று கலந்துவிளையாடி
காமக்கடலிலவர் கலந்துதெளிந்தார்கள்
மோகக்கடலிலவர் முழுகித்தெளிந்தார்கள்
தீராதஆசையெல்லாம் தீர்த்தானேதேர்விஜயன்
ஆராதஆசையெல்லாம் ஆரிணனருச்சுனனும்
மஞ்சத்தைவிட்டிறங்கி வந்தாரிருவருமாய்
மஞ்சணீர்சாலையிலே வந்துபுகுந்தார்கள்
காலோடுகையுங் கனிவாயுஞ்சுத்திசெய்து
மார்போடுதோளும் மதிமுகமுஞ்சுத்திசெய்து
அலங்காரமண்டபத்தில் அமர்ந்தாரிருவருமாய்
தாமமுடியார்கள் சதுரங்கமாடலுற்றார்
அந்தச்சமயத்தில் அழகுபுலந்திரனும்

புலந்திரன் தகப்பனிடத்தில் வருதல்.

வீதிவிலாசமது விளையாடிவேல்வேந்தன்
பந்தடித்துச்செண்டடித்துப் பாலன்விளையாடி
தாயாரருகாகந் தார்வேந்தனோடிவந்தான்
மகனுரைக்காணவே வாரியெடுத்தணைத்து
உச்சிமுகந்தாளே உள்ளங்கால்முத்தமிட்டாள்
உங்கள்-ஐயர்மடிமேலே செல்லுமென்றுளாரணங்கு
அப்போபுலந்திரனும் அர்ச்சுனர்க்குமுன்னேவந்தான்
வாரியெடுத்தாரே மகனார்புலந்திரனை

அப்பாவருகவென் னழகுள்ளபுத்திரனே
பொன்னுங்குடமே புலந்திரனேவாருமென்ருன்
தார்விஜயனர்ச்சுனரும் தன்மடியில்வைத்திருந்தார்
அப்போபுலந்திரனும் அர்ச்சுனருக்கேதுசொல்வான்
ஐயாவே நீர்கேளும் ஆண்மையுள்ள அர்ச்சுனரே
தங்கத்தேர்தந்தார்கள் தார்வேந்தரென்பாட்டன்
செம்பொன்தேர்தந்தாரே சீருடையஎன்மாமன்
மாணிக்கத்தேர்தந்தாரே மண்டலத்துராஜாக்கள்
முத்துத்தேர்தந்தாரே முடிமன்னராஜாக்கள்
சித்திரவீதிகளுந் தெருவுபதிணுயிரமும்
மட்டில்லாவீதி மதுரைக்குஓட்டிவைக்க
பாண்டிப்பெருமாளைப் பவளத்தேர்நான்கேட்டேன்
தன்ஞலேயாகாதென்று உன்னைவரவழைத்தாள்
பார்த்தீபாஎந்தனுக்குப் பவளத்தேர்வேணுமென்ருர்
அப்படியேநான்தருவேன் அஞ்சாதேயென்மகனே
தீவுக்குப்போரேநான் தீவிரமாய்க்கொண்டுவாரேன்
எங்கேயிருந்தாலும் இக்ஷணமேகொண்டுவாரேன்
எத்தனைநாளையிலே எனக்குத்தேர்கொண்டுவாரீர்
மைந்தரவர்கேட்க மனமுந்தெளியாமல்
மூன்ருறுபொழுதிலேநான் முடித்துவாரேனென்ருர்
ஒன்பதுநாளையிலே உனக்குத்தேர்கொண்டுவாரேன்
இருமிருமென்றுசொல்லி எழுந்திருந்தார்மன்னவனுர்
அச்சுதானந்த ரையருந்தானுமாய்
இருவருமப்போது எழுந்துநடந்தாரே
கூடநடந்தாளே கொம்பனையாளன்னம்போல்
யானைசேனைபரிவாரம் அனுப்பவோராஜாவே
சேனைபரிவாரந் திரளணியுங்கூட்டுவனோ
இருவரும்போரீரோ எந்தனுக்குச்சொல்லுமென
யானையுஞ்சேனையும் அனுப்பவும்வேண்டாங்காண்
இருவரும்போய்வாரோம் என்றுவழிநடந்தார்
மன்னரிருவருமாய் மந்திரவாள்கைபிடித்து

வைகைக்கரைகடந்து மதுராபுரியைவிட்டு
எல்லைகடந்து இளந்தோப்புத்தான்விட்டு
காடுகடந்து கரியமலைதான்தாண்டி
வேங்கையடர்ந்தவனம் வெங்களாப்பூத்தவனம்
எட்டடிவேங்கை இருக்கும்வனம்விட்டு
பத்தடிவேங்கை பருத்தவனத்தைவிட்டு
அண்டரறியாத தண்டவனந்தாண்டி
வேந்தரறியாத வெளிக்காட்டைதான்கடந்து
சிங்கமுறங்குவனம் சிறுபுலிகள் தூங்கும்வனம்
ஆளியுறங்குவனம் அன்னப்பட்சிதூங்கும்வனம்
ஒருநாரைக்கிருநாரை உயர்ந்தவனத்தைவிட்டு
கருநாரைக்கிரைதேடுங் கதலிவனத்தைவிட்டார்
பவளம்விளைகின்ற பாங்கானகாடுகண்டார்
காடுதீப்பட்டாற்போல் காணுவதைக்கண்டார்கள்
அச்சுதானந்தா ஐயரேயென்தோழா
நான்-போகாதகாடுமில்லை ஆடாததீர்த்தமில்லை
பார்த்தாரிருவருமாய்ப் பவளக்காடுள் நுழைந்தார்
கயிரேறுகொம்பு கலந்தகொழுந்துகளும்
ஓடிப்படர்கிறதும் உயர்கொம்பாய் நிற்கிறதும்
தாவிப்படர்கிறதும் சன்னல்பின்னலாகிறதும்
வேரிற்பவளமது மின்னுகிறகாந்திகளும்
பார்க்கமுடிகூடாது பவளம்விளைகிறது
பவளப்புதுமைகளைப் பார்த்துத்திகைத்துநின்றார்
அக்காட்டில்தானிருக்கும் ஆங்காரக்கதண்டுகளும்
ஆனைத்தலையை அறியுங்கதண்டுகள்தான்
குதிரைத்தலைபோ லிருக்குங்கருங்குளவி
சிங்கத்தலைபோ லிருக்குமாஞ்செங்குளவி
வேகமாய்முழமுழவாய் வெளிப்பட்டுவந்தது
வாள்விஜயனைக்கொல்ல வந்தகதண்டுகளும்
மன்னரர்ச்சுனரின் மட்சரேகையைப்பார்த்து
தேவாதிபிண்டமவன் தேர்விஜயனர்ச்சுனன்காண்

பேரால்புகழ்பெற்ற பெருமாளிவர்காணும்
இவரைக்கொன்றேமேயானால் குடிகேடுவந்துவிடும்
நமது-கூட்டமழிந்துவிடும் குலக்கேடுவந்துவிடும்
என்றுபயந்து எழும்பிக்கதண்டுகளும்
அஞ்சிப்பயந்து அடவியிற்சென்றதுகாண்
ஆணுலழகனவன் அர்ச்சுனனுமேதுசொல்வான்
அச்சுதானந்த ஐயரேயென்தோழா
நாம்-தேவாதிபிண்டமென்று தெரிந்ததுகதண்டுகட்கு
நம்மைக்கண்டபோதே நடுநடுங்கிச்சென்றதுகாண்
என்றவர்கள்சொல்லி இருக்குமந்தவேளையிலே
கானகவேடுவர்கள் கனவேட்டையாடியவர்
அக்காட்டுவேடுவர்கள் அவ்வழியேவாரார்கள்
அர்ச்சுனரைமாயவரை அறியவேவேடுவர்கள்
மெத்தப்பயந்தவர்கள் விடவிடென்றுவேடுவர்கள்
கண்டுபயந்தவர்கள் கடுகிவந்துதெண்டனிட்டார்
வேடுவரோ நீங்களென்று விஜயனுர்கேட்கலுற்ருர்
ஆமையாநாங்கள் ஆரணியவேடரென்ருர்
இக்காட்டுக்குள்ளே இருக்குங்கதண்டுகளும்
உங்களைக்கொல்லாதோ உத்தமரேசொல்லுமென்ருர்
கதண்டுகள்கொட்டாதோ காவலரேயுங்களையும்
தென்னுட்டுப்பேர்களைத் தீண்டாதுகதண்டுகளும்
முகமறியாப்பேர்களை முறித்துக்கிடத்திவிடும்
பவளம்வெட்டவந்தவரைப் பரலோகஞ்சேர்த்துவிடும்
கதண்டுகொட்டிச்செத்தவர்கள் கணக்குமிதங்களில்லை
எங்கள் துரைபவளக்கொடி யெழுப்பினதனந்தமுண்டு
செத்துமடிந்தவரைச் சீவனேடெழுப்பிடுவாள்
என்றுமவர்சொல்ல ஏதுசொல்வாருச்சுனரும்
எங்கள் துரையென்றீரே உங்கள் துரைபேருமென்ன
ஆருடையராஜ்ஜியங்கள் அறியஉரையுமென்ருர்
பங்கயஞ்சீர்கண்ணுள் பவளக்கொடிராஜ்ஜியங்கள்
பெண்ணரசுதானேடாபுண்ணியனேசொல்லுமென்ருர்

அந்தவரலாற்றை அன்பாகச்சொல்லுமென்றார்
ஆனாற்கேளையாவே அடியேனுரைத்திடுவேன்
சேராம்பூராஜாக்கள் ஜெகமெய்த்தோரைம்பதுபேர்
ஐம்பதுபேர்ராஜருக்கு ஆணுமில்லைபெண்ணுமில்லை
பவளக்கொடிராஜ்ஜியத்தை ஆளுகைக்குப்பாலனில்லை
கண்டகண்டகோவிலெல்லாம் கையெடுத்துகும்பிடுவார்
காணாதகோவிலுக்குக் காணிக்கையனுப்பிவைத்தார்
இலையிலேசாதமுண்டால் என்னதவமென்றுசொல்லி
தரையையவர்மெழுகி சாதங்களுண்டார்கள்
பாலடைக்குப்பால்கொடுப்பார் பசித்தார்முகம்பார்ப்பார்
தவித்துவந்தயோர்களுக்கும் தண்ணிர்கொடுப்பார்கள்
சாலைகள்போட்டுவைத்தார் சத்திரங்கட்டிவைத்தார்
நல்லதண்ணீர்க்கிணறுகளும் நடபாதைகட்டிவைத்தார்
அந்தணர்பிராமணர்க்கு அக்ராரங்கட்டிவைத்தார்
தேசபரதேசிகட்குத் திருமடங்கட்டிவைத்தார்
குளங்களைவெட்டிவைத்தார் கோபுரங்கட்டிவைத்தார்
என்னதவம்பண்ணாலும் எதினாலும்பிள்ளையில்லை
பெருமையாய்ப்பத்தாண்டு பேய்ந்தபெருமழைக்கு
தெப்பலாய்நின்று மிதந்துதவம்பண்ணார்கள்
மைந்தனைவேண்டியல்லோ மாடிமறந்தார்கள்
புத்திரனைவேண்டியல்லோ பூமிமறந்தார்கள்
அவர்மேல்-ஆலம்விழுதோடி அறுகுமுளைத்திடவும்
அரகராவென்றுசொல்லி அகோரதவம்பண்ணார்கள்
அரகராவென்றசத்தம் அலைகடலொப்பனைபோல்
சிவசிவாவென்றசத்தம் தெய்வலோகந்தான்கேட்கும்
பண்ணுந்தவப்பயனை அறிந்துமல்லோஈஸ்வரனும்
ஈஸ்வரனும்பார்வதியும் இடபத்திலேறிவந்து
சேராம்புராஜரிடம் சிவன்வந்துமேதுசொல்வார்
கூலிகுறைத்தவர்கள் குறைமரக்கால்போட்டவர்கள்
அங்காடிக்கூடையை அதிரவிலையிட்டவர்கள்
பட்டரைநெல்லுதனிற் பதரைக்கலந்தவர்கள்

குளமடைத்துமேகுருவிக் கூண்டைக்கலைத்தவர்கள்
நந்தவனமழித்தவர்கள் நற்பெண்டைக்கெடுத்தவர்கள்
பாலடைக்குப்பால்வாரார் பசித்தார்முகம்பாரார்
நீங்கள்-எதுதவம்பண்ணுலும் எதினுலும்பிள்ளையில்லை
இந்தப்பிறப்பிலேயும் எழுபிறப்பும்பிள்ளையில்லை
என்றதுகேட்டு இராஜாக்களேதுசொல்வார்
என்னபாவம்பண்ணுலும் ஏதுதோஷஞ்செய்தாலும்
பாவத்தைத்தீர்த்துவிட்டுப் பாலகனைத்தாருமையா
என்றவர்துதிக்கையிலே யீசர்மனமிரங்கி
பவளத்தின்கொடிமேலே பாலகியையுண்டாக்கி
குவ்வாகுவ்வாவென்று குழந்தையழுகுதடா
ஆணுமதுபெண்ணுமது அழகாய்வளர்த்திடுங்கள்
செம்மையாயிருங்களென்று செப்பிநடந்தார்கள்
தவழ்ந்தாள்தவழ்ந்தாளே கன்னியிளமயிலும்
ஒருவயதுமிருவயது ஒன்றிரண்டுமூன்ருச்சு
ஐந்தாம்பிராயத்திலே அந்நாள்பலகலைகள்
பவளக்கொடியாளென்று பார்லோகமாளுகிருள்
பட்டந்தரித்தலவோ பவனிமுழுதாளுகிருள்
ஆணரசாண்டாலே அழிந்துபோகுஞ்சீமையென்று
பெண்ணரசாளுகிருள் பேடைமயிலணங்கு
என்றதுகேட்டானே இளவிஜயனருச்சுனனும்
வாலைப்பிராயமோ வயதுமெத்தச்சென்றவளோ
பதினுறுவயதாச்சு பைங்கொடிமாதருக்கு
கொஞ்சப்பிராயம் கொழுந்தெல்லாம்பிஞ்சலவோ
பாதிப்பிராயம் பக்கமெல்லாய்பிஞ்சலவோ
காய்க்கும்பிராயமையா கனியுதிருந்தற்காலம்
பூர்க்கும்பிராயமையா பிஞ்சுவிடுங்காலமிது
தன்வயதுந்தானறியாள் தையலிளங்கொடியாள்
ஆனுலும்வேடுவனே அவளழகைச்சொல்லுமென்ருன்

## வேடன் பவளக்கொடியாள் அழகைச்சொல்லியது.

ஏதென்றுசொல்வேனையா இளங்கொடிதன்னழகை
பார்க்கமுடியாதே பத்தினியாள் தன்னழகை
நீர்முட்டைபோலிருக்கும் நேரிழையாள் தன்னழகை
சேல்கண்டைபோலிருக்கும் தேன்மொழிதன்விழிகள்
மேற்புருவந்தன்னழகோ வேப்பிலைச்சாயலைப்போல்
மயிரழகும்பாவனையும் வண்டுமுதுகதுபோல்
ஈச்சம்பழத்திலே யிருண்டகறுப்புமுண்டு
நாவற்பழத்திலே நல்லகறுப்புமுண்டு
அவள்-மயிரேகறுப்பொழிய மற்றகறுப்புமில்லை
அவள்புருவங்கருப்பொழிய பின்னேகறுப்புமில்லை
தேய்பிறைச்சாயலைப்போல் திருநெற்றிதன்னழகும்
சீரியமூக்கழகும் சிவந்தமுகத்தழகும்
முத்துப்போல்பல்வரிசை முறுக்கிதழ்போல்செவ்வுதடு
வள்ளைத்தண்டுபோலே வளர்காதிரண்டழகும்
கழுத்தழகும்பாவனையும் கமுகுகுலைந்தாற்போல்
அகண்டபுஜமழகும் ஆலிலைபோல்தன்வயிறும்
முளைத்தெழுந்தமூங்கிற்போல் மொழ்குழளின்புஜமும்
பத்துவிரலழகும் பயிற்றங்காய்நெற்றதுபோல்
சிங்கத்திடைபோலோ சீரானஇடையழகும்
இருதுடையிரண்டழகும் இளவாழைத்தண்டதுபோல்
முத்துச்சிப்பிதைத்தாற்போல் முழங்காலிரண்டழகும்
பாம்பின்படம்போலே பாதத்திரண்டழகும்
புத்தகஞ்சேர்த்தாற்போல் புறங்காலின்பின்னழகும்
அவளுக்குஒப்பானர் ஆருமில்லைவையகத்தில்
சுவரிலெழுதலாம் சித்திரம்போல்பார்க்கலாம்
படத்திலெழுதலாம் பதுமைபோற்பார்க்கலாம்
சந்திரனைப்போலே துலங்குகிருள்தோகையரும்
சூரியனைப்போலே துலங்குகிருள்தோகையரும்
ஈயத்தைக்காய்ச்சி யிலையிலேயிட்டாற்போல்
பொன்னையுருக்கிப் பூமியிலேவிட்டாற்போல்

நீறுபூத்ததீயதனை ஊதிப்பார்த்தநிறம்போலே
ஆயிரமின்னலிலே சோதிமின்னற்பிறந்தாற்போல்
பார்க்கமுடியாது பத்தினியாள்தன்னழகை
அவ்வார்த்தைகேட்டு அருச்சுனனுமேதுசொல்வார்
அவளை-மண்டலத்துராஜாக்கள் மாலைதரித்தாரோ
கன்னியிளங்கொடிக்குக் கலியாணஞ்செய்தாரோ
விஜயனுங்கேட்கையிலே வேடுவனுமேதுசொல்வான்
நாலுலட்சங்கோடியுண்டு நாயகியைத்தேடிவந்தோர்
பத்துலட்சங்கோடியுண்டு பத்தினியைக்கேட்டவர்கள்
வண்ணலட்சங்கோடியுண்டு மாதனைக்கேட்டவர்கள்.
கைநீட்டிமாலையிட்டா ரில்லையேகன்னியரை
நித்தியகன்னியாக இருக்கிருள்நேரிழையும்
நல்லதுவேடுவனே நாயகிமாதவளும்
கன்னியிளங்கொடியும் கனவேட்டையாடுவளோ
வேட்டைக்குவாரதுண்டோ வேடுவனேசொல்லுமென
மாதரந்தகன்னியரும் வாராளேவேட்டைமுகம்
ஆனாற்கேளையாவே அடியேனொருவார்த்தை
மாதமொருபயணம் வனவேட்டைவாரதுண்டு
திங்களொருபயணம் வருவாளேதேன்மொழியாள்
மற்றொருநாளையிலே வருகிறதில்லையென்றார்
ஆனாற்கேள்வேடுவனே அடியேனொருவார்த்தை
காட்டுக்குவந்தாலே கன்னியிளங்கொடியும்
பவளக்கொடியாரும் பரிவேட்டைவந்தாலே
இந்தவனந்தனிலே யிருக்குமிருகங்களில்
எந்தமிருகத்தின்மேல் இச்சையுண்டுமாதருக்கு
ஆசைகொண்டமிருகமெது ஆணழகாசொல்லுமென
ஆனாற்கேளையாவே அடியேனொருவிண்ணப்பம்
எந்தமிருகமது எதிர்பட்டுவந்தாலும்
கண்டமிருகமதைக் கண்டிப்பாள்தப்பாமல்
அன்னத்தைக்கண்டாலே ஆசையாய்விட்டிடுவாள்
மற்றொருமிருகமெல்லாம் வாரிப்போரிட்டிடுவாள்

எந்திழையாள்கோட்டையது எத்தனை தூரமுண்டு
பன்னிருகாதம் பவளம்விளைகிறது
நடுவாயிருக்கிறது நாயகியாள்கோட்டையது
புகழாயிருக்கிறது பொற்கொடியாள்கோட்டையது
ஆனால் நீபோய்வாரும் அன்புள்ளவேடுவனே

அர்ச்சுனன் பவளக்கோடியாள்மேல் மோகித்தது.

வேடுவனும்போனபின்பு விஜயனுமேதுரைப்பான்
அச்சுதானந்த ரையரேயென்தோழா
ஆரணங்குவார்த்தைகளை அன்பாகக்கேட்கையிலே
மன்மதபாணமது மார்புருகிப்போகிறதே
சித்தசன்விட்டகணை சிறுமார்புறுகிறதே
மாரனவனெய்தகணை மார்பைப்பிளக்கிறதே
அவளை-கண்ணாலேகண்டாலே காமக்களைதீரும்
பார்த்தேனேயாமாகில் பசிதாபந்தீருமென்றான்
என்றைக்குக்காண்பேனோ ஏலப்பசுங்கிளியை
மாலைதரியாமல் வருவதில்லையென்தோழா
பாவையைக்கலியாணம் பண்ணாமல்வருவதில்லை
அவளழகைப்பார்ப்பதெப்போ ஆசைதெளிவதெப்போ
கொம்பனையாளுடைய குரலோசைகேட்பதெப்போ
பவளக்கொடிமாதைப் பார்த்துமகிழ்வதெப்போ
அச்சுதானந்த ரையருமேதுசொல்வார்
ஏன்காணும்வாள்விஜயா இந்தமதியுந்தனுக்கு
மகுடத்துரச்சியவள் வாழ்வரசி அல்லியற்கு
போய்மூன்றுநாளாறு பொழுதிலேவாரேனென்று
மைந்தன்மேலாணையிட்டு வந்தீரேமன்னவனே
மைந்தன்மேலாணை மறந்தீரோமன்னவனே
மற்றொருகன்னியரை மணமாலைசூட்டினால்
மகுடத்துரையல்லியரும் மங்கையவள்பொல்லாதாள்
வாழ்பாண்டிநாடுடையாள் வீருவாளேபடைகூட்டி
சொல்லுக்குமஞ்சாளே தொடர்ந்துபடையெடுப்பாள்

வெட்டித்துணித்திடுவாள் வீரமணிவாளாலே
வேண்டாங்காணென்தோழா வெறுத்துவிடுமிக்கருமம்
ஆணலழகுமன்னன் அர்ச்சுனனுமேதுசொல்வான்
நீர்-என்னதான்சொன்னாலு மென்செவியிலேறுது
மாதாந்தக்கன்னியரை மணமாலைசூட்டினக்கால்
சித்தசன்விகாரமது தெளியுங்காணென்தோழா
நான்-செத்துமடிந்து செலவழிந்துபோனாலும்
மாண்டுமடிந்து வைகுந்தம்போனாலும்
செத்தவிடந்தனிலே செங்கழுநீர்பூப்பேன்
குடமல்லியாய்ப்பிறந்து கொண்டையிலேயிருப்பேன்
கொண்டையிற்பூவாவேன் கொய்வனத்திற்பையாவேன்
கண்ணுக்குமையாவேன் காலுக்குமெட்டாவேன்
நாயகியாள்நெற்றியிலே நற்சாந்துப்பொட்டாவேன்
மூந்தாணித்தொங்கலிலே தொத்தியமுள்ளாவேன்
என்றுதெளியுமோ எக்காலஞ்செல்லுமோ
கைசோர்ந்துமெய்சோர்ந்து கனத்தமுடிசோர்ந்து
கலகலத்துகிலுகிலுத்து காலன்வந்துமேலோடி
நேமங்கெட்டுமதிகுலைந்து நினைவுதடுமாறி
மயங்கிவிழுந்தானே மாதர்மேல் நினைவாகி

## பவளக்கொடியாள் வேட்டைக்கு வருதல்.

அன்றையப்போதிலே ஆனந்தவாழ்மாரி
பங்கயஞ்சீர்கண்ணாள் பவளக்கொடியாளும்
வேல்பொருதுங்கண்ணாளும் வெளியேபுறப்பட்டாள்
ஈட்டிபிடிமன்னவர்கள் ஏழுலட்சம்பத்துலட்சம்
கத்திபிடிமன்னவர்கள் கணக்குமிதங்களில்லை
பட்டயநேரிகளும் பாரியவில்சமுதாடும்
நிமிசாபெரியலகு நேரிசமாம்பெரியகத்தி
கூலிசமுஞ்சூலிசமும் குண்டுசுழல்துப்பாக்கி
எண்ணாத ஆயுதமும் எடுத்தறையிற்கட்டினார்கள்
பாராசாரிபுரவியின்மேல் பவளகன்னியேறினாளே

சுத்திகுடைபிடித்தார் சூரியனைத்தான்மறைக்க
ஆள்பேருஞ்சேவகரும் அனந்தங்கோடிசேவகரும்
தாதிகளும்மூப்பிகளுந் தையல்மார்சூழ்ந்துவர
பத்துலட்சஞ்சேனையுடன் பரிவேட்டைவாராளே
ஆனையின்மேல்பேரிகையும் குதிரையின்மேல்டங்காவும்
ஒட்டையின்மேல்நகபந்தும் ஓசைகிளம்புகுது
பேய்த்தாரையூதவே பெரியடமாடோலடிக்க
சின்னமுழங்கவே திருச்சின்னந்தான்முழங்க
ஐங்காதவழிதூரம் அலறுதுபேய்த்தாரை
பயணம்பயணமென்று பயணபேரியடிபடுது
அந்தவனங்களெல்லாம் அதிரவருகிறார்கள்
பொங்குகடல்போலே போய்ப்புகுந்தார்கானகத்தில்
மான்வேட்டையாடியே மயில்வேட்டைதானாடி
வக்காவும்கொக்குகளும் வருங்குருவிதாராவும்
அம்புக்கொருகுருவி ஆரணங்குஎய்துவிட்டாள்
தப்பாமற்கொன்று தள்ளிவிட்டாள்கானகத்தில்
வேட்டைகளாடியே விடாய்த்துத்தளர்ந்தாளாம்
கானகத்துமண்டபத்தில் கடுகவந்திறங்கினார்கள்
பஞ்சனைமெத்தையிலே பதியக்கொலுவிருந்தாள்
தாம்பூலமுண்டு தனியேகொலுவிருந்தாள்
வாசங்களுண்டு மகிழக்கொலுவிருந்தாள்
கேளிக்கைபார்த்திருந்தாள் கெம்பீரநாயகியாள்
சங்கீதம்பார்த்து இருக்கிறாள்தையனல்லாள்
அப்போவிஜயன் அர்ச்சுனனுந்தானெழுந்து
ஆச்சுதானந்த ரையர்முகம்பார்த்து
வந்தாளேவந்தாள்காண் மாதரிளங்கொடியாள்
பவளக்கொடியாளும் பைங்கிளியாள்வந்தாள்காண்
கானகத்துமண்டபத்தில் வந்தமர்ந்தாள்கன்னியரும்
மத்தளவோசையது கேட்குதுகாண்மாயவரே
என்னவடிவு எடுப்பேன்காணென்தோழா
என்னவடிவானாலும் எடுத்துக்கொள்ளும்போர்விஜயா

அர்ச்சுனரேஉன்னடக்கை அறிந்துமிருந்துநான்
அலைச்சல்படும்படியாய் அறியாமலுன்பின்வந்தேன்
கதண்டுகொட்டிமடிந்தாற்போல் இருக்கிறேன்காவிலே
நீ-கால்வேறுகைவேருய்க் கட்டிக்கிடத்திவைத்து
மாயவரேசுத்திவந்து மாரடித்துநீரழுங்காண்
என்னை நீர்சுத்திவந்து இழவுகொடுத்தழுங்காண்
பெண்ணய்வடிவெடுத்து போதவழுதிடுங்காண்
மாரிழவுகொடுத்தெனக்கு மயிரெழவு நீர்கொடுங்காண்
குரலோசை நீரெடுத்துக் கூவியழுதாலே
பெண்குரலைக்கேட்டுப் பொற்கொடியும்வந்திடுவாள்
ஆரென்றுபார்க்கவே வருவாள்காணரணங்கு
ஆரணங்கிங்குவந்து ஆரென்றுகேட்டாக்கால்
மாலையிட்டகணவனென்று மயிலணைக்கு நீருரையும்
யாத்திரைவந்தோமென்றுரையுங்காண்தேன்மொழிக்கு
ஆனந்தவாழ்மாரி அவளழகைநான்பார்ப்பேன்
கண்ணுக்குநன்ருனல் கனமாலைசூட்டுகிறேன்
அழகாயிருந்தாலே அவளைமணஞ்செய்திடுவேன்
வடிவுகள்மட்டானல் மதுரைக்குப்போய்விடுவோம்
என்றுசொல்லியர்ச்சுனரு மெம்பெருமாளை நினைத்து
பார்த்திபனருச்சுனரும் பரமனைத்தியானித்து

அர்ச்சுனன் கதண்டுகோட்டிச்செத்தவன்போலிருத்தல்.

பொந்தியைத்தானடக்கிப் பொட்டெனவேபூமியிலே
மூச்சையடக்கியே முடிசோர்ந்துகீழ்விழுந்தான்
செத்தவனைப்போலாக மன்னவன்கீழ்விழுந்தான்
மாண்டவனைப்போலாக மன்னவன்கீழ்விழுந்தான்
அச்சுதானந்த ரையாரவரேதுசெய்வார்
கால்கைகள்வேருகக் கட்டிக்கிடத்திவைத்து

ஸ்ரீகிருஷ்ணதேவர் பெண்வடிவெடுத்துப்புலம்பல்.

பெண்ணய்வடிவுகொண்டு போதப்புலம்புகிருள்
தன்னுடையதலைமயிரைத் தானும்விரித்துகொண்டு

மன்னவனைச்சுற்றிவந்து மாரடித்துத்தான்விழுந்தாள்
கொற்றவனைச்சுற்றிவந்து கோவென்றழுகலுற்றாள்
மலையேபருவதமே வாட்டமில்லையென்றிருந்தேன்
செம்மலைப்பருவதமே சேதமில்லையென்றிருந்தேன்
செத்துமடிந்தாயோ சிவலோகம்போனாயோ
மாளவோஇங்குவந்தாய் பாபாவிபட்டணத்தில்
சாகவோஇங்குவந்தீர் சண்டாளிசீமையிலே
உன்னைப்பறிகொடுத்து ஒருத்தியுமாய்ப்போவேனோ
மைத்துனருக்கென்னசொல்லமாமனாற்கென்னசொல்ல
மன்னவனைச்சுற்றிவந்து மாதுபுலம்பலுற்றாள்
அழுதகுரலோசை ஆரணங்குகேட்டுவிட்டாள்
பவளக்கொடியாளும் பத்தினியாள்கேட்டுவிட்டாள்
ஆடலும்பாடலும் அத்தனையுங்கையமர்த்தி
ஆரடாதூதுவரே அடர்ந்தவனந்தனிலே
அழுதகுரலேது ஆராய்ந்துபார்த்துவாரும்
பெண்குரல்கேட்கிறது போய்பார்த்துவாருமென்றாள்
மாதாசெலவருள வனத்திலொருதூதுவனும்
ஓடினான்தூதுவனும் ஒருநொடியில்போய்நுழைந்தான்
கதண்டுகள்கொட்டியே கானகத்தில்மாண்டவனை
கண்டொருத்திபுலம்புவகைக் கண்ணாலேதான்பார்த்து
ஓட்டம்நடையுடனே ஓடிவந்தான்தூதுவனும்
பவளக்கொடிமாதே பத்தினியேயென்னாச்சி
ஆரோவொருத்தியவன் ஆளனுந்தேவியுமாய்
புருஷன்மடிந்துவிட்டான் பெண்ணாள்புலம்புகிறாள்
கதண்டுகொட்டிமாண்டுவிட்டான் கதறிப்புலம்புகிறாள்
அவனையெழுப்பிவிட்டால் அனேகமானபுண்யமுண்டு

பவளக்கொடியாள் வந்து காண்பது,

இந்தமொழிகேட்டு எழுந்தாள்பவளகன்னி
முத்துநிரைபல்லக்கில் மொய்குழலுமேறினாளே
மாண்டவன்றன்னருகே வந்துமிறங்கினாள்காண்

அச்சுதானந்தரென்னு மையர்புலம்புகிருர்
யான்-ப்ராராதநாடுமில்லே பணியாதகோயிலில்லே
மிதியாதவனங்களில்லே மூழுகாததீர்த்தமில்லே
தேசம்பலபலவாய்த் தீர்த்தங்களாடிவந்தேன்
பூமிபலபலவாய்ப் பிரதட்சணஞ்செய்துவந்தேன்
பவளப்புதுமையிங்கே பார்க்கவந்தேன்மாதாவே
யானையின்மத்தகத்தை யரியுங்கதண்டுமிங்கே
குதிரைசிரசையரியுங் குளவியுண்டிவ்வனத்தில்
சிங்கந்தலேபிளக்குஞ் செங்குளவிகொன்றனவே
அறியாமலிங்குவந்தோம் அரும்பாவிபட்டணத்தில்
தெரியாமலிங்குவந்தோம் சென்மத்துரோகதேசமதில்
இப்படிவருங்கருமம் யாதொன்றும்நானறியேன்
மலேயேபருவதமே வாட்டமில்லாக்குஞ்சரமே
செம்மலேயேபருவதமே சேதமில்லாச்சுந்தரமே
கல்லான தூணைக் கரையானெரித்ததுவோ
இரும்பான தூணையுன்னே உலுவானெரித்ததுவோ
செம்பருந்துவந்துன்னேச் சிறகாலடித்ததுவோ
மோகிரக்கையதனே மூகத்தோடறைந்துகொண்டாள்
கோவென்றசத்தமுடன் குமுறியழுகலுற்ருள்
தரையிற்புரண்டழுதாள் தாணிபளந்தவரும்
பங்கயஞ்சீர்கண்ணுள் பவளத்தின்கன்னியரும்
ஆடிபெண்ணே நீ அழுதுபுலப்புவதேன்
எந்தவூரெந்ததேசம் எங்கிருந்திங்குவந்தீர்
மாண்டவர்யார்காணும் மாதே நீசொல்லுமென்ருள்

ஸ்ரீ கிருஷ்ணர் சொல்வது.

ஆனுல்கேளம்மா ஆரணங்கேசொல்லுகிறேன்
எங்களுக்குவூருமுண்டோ எங்களுக்குநாடுமுண்டோ
தேசந்திரிபவர்குச் சீமைகள்பூமியுண்டோ
நாடுவடக்கேயம்மா திருக்காஞ்சிநன்னகரம்
தீவுபலதிரிந்து தீர்த்தங்களாடிவந்தோம்

பூமியொருபுரமாய்ப் புண்ய தீர்த்தமாடிவந்தோம்
பவளப்புதுமையைப் பார்க்கவந்தோமென்தோழா
மாலையிட்டுக்கொண்ட மணவாளனிவர்காணும்
தாலிதரித்துக்கொண்ட தலைவனிவர்காணும்
மார்பளவாய்முகமளவாய் வந்ததுகதண்டுகளும்
மாலைமுடியானை மன்னவனைக்கொன்றுதம்மா
தாலிச்சரடிழந்து தலைவிரிக்கநாளாச்சு
எங்கேயோவானம் இடிந்ததுஎன்றிருந்தேன்
தப்பாதேவானந் தலையிலிடித்துதம்மா
அண்ணனில்லைதப்பியில்லை ஆதரிப்பாராருமில்லை
அள்ளியிடுவார்கள் அவனிதனிலாருமில்லை
இருவராய்வந்தோமே ஒருத்திநான்போவேனே
உன்-புண்ணியமாகுது பிழைக்கவழிபாருமென்றாள்
மங்கிலியப்பிச்சையது தாருமம்மாமாதாவே
உன்-தருமமாய்ப்போகுதம்மா தாயேமுகம்பாரும்
முந்தானையேந்திவந்து முன்னாலே நின்றழுதாள்
மடிப்பிச்சைதாருமென மடியேந்திநின்றாளே
பக்கத்தில்நின்றதொரு பாங்கியருமேதுசொல்வார்
பவளக்கொடியாளே பத்தினியேயென்றாச்சி
ஆரோவொருத்தன் அவனைக்கதண்டுகொட்டி
செத்துக்கிடக்கிறான் சேயிழையாள் அவனைச்சுற்றி
மாரிழவுதான்கொடுத்து மண்ணிலமுகிறாள்
அவனையெழுப்பினால் ஆச்சியரேபுண்யமுண்டு
வாலிபப்பிராயமம்மா வயதுபதினாறளவே
அவிந்தவிளக்கேற்றிவைத்தால் அனேகதர்மமுண்டு
பங்கயஞ்சேர்கண்ணாள் பவளக்கொடியாள்கேட்டு
மாதரசிகேட்டு மனதுமிகவிரங்கி
மேகமலைபோலே மெள்ளநடந்துவந்து
அவன்-காலைப்பிடித்துக் கரியமுடியசக்கி
பார்த்தன்திருமுகத்தைப் பார்த்தாள்பலகாலும்
மேலேயிருக்கிற மூக்காட்டைவாங்கியல்லோ

உற்றுற்றுப்பார்த்தாளே ஒளிபிறந்தகண்ணாலே
வானவர்பெண்டுகளை வலதழிக்குங்கள்ளனடி
மட்டிலாப்பெண்டுகளை வகைமோசஞ்செய்தவண்டி
தேசத்துமாதர்களைச் சிறையெடுக்குங்கள்ளனடி
பிரட்டுங்கள்தாதிகளே பின்னழகுபார்ப்போமென்றாள்
தாமக்கருங்குழலாள் தாதிபுரட்ட லுற்றாள்
மூன்னழகும்பின்னழகும் முதுகில்மட்சரேகைகளும்
தோளில்துளசிமாலை தொப்புளில்அமுதகலசம்
பல்லிற்பரசுவீணை பாதத்தில்செந்தாமரை
மீசைமுருக்கழகும் விழியின்திருவழகும்
நாவிலேநட்சத்திரம் நயனவிழிபாவனையும்
பதினெட்டுலட்சணமும் பார்த்தாளேபத்தினியாள்
தேவாதிபிண்டமடி சுவாமிக்குமைத்துனண்டி
போராற்பெரிய பெருமாளவர்மைத்துனண்டி
இவனையெழுப்பினால் எனக்குவருமோசமென்று
பவளக்கொடியறுத்துப் பார்த்திபனைக்கட்டுமென்றார்
பவளக்கொடியறுத்து பாங்கிமார்கட்ட லுற்றார்
அப்போதருச்சுனனும் ஆயனைத்தானினைந்து
வாழ்விஜயனர்ச்சுனனு மாயனைத்தானினைந்து
எப்படியோஉன்தயவு எம்பெருமாளேகவர்ண
ஆரைச்சதமென்பேன் அன்னியரைத்தஞ்சமென்பேன்
அரிராமமாயவரே அருகிருந்துகாருமென்றார்
கட்டினதேயுண்டானால் கழற்றவேபாருமென்றார்
மனதில்நினைந்தானே வாள்விஜயனருச்சுனனும்
பவளக்கொடியாலே பாங்கிமார்கட்டினார்கள்
கட்டுங்கொடிகளது கடுகவேயிற்றுதங்கே
ஆனைகட்டுஞ்சங்கிலியால் அருச்சுனனைக்கட்டினார்கள்
ஆயன்தயவாலே அரிராமர்கிருபையினால்
அதையும்மேவிம்மி அறுத்தானருச்சுனனும்
மார்பின்சரப்பள்ளியை வாங்கியவள்கொடுத்து
கெட்டியாய்க்கட்டுமென்று கிட்டவந்துநின்றாளே

மாணிக்கசரப்பளியால் வலித்திறுக்கிக்கட்டினார்கள்
அவன்-காலையசைக்கிற கால்சேஷ்டைமெத்தவுண்டு
கையையசைக்கிற கைசேஷ்டைமெத்தவுண்டு
இங்கேயிருந்தாலே எனக்குவருமோசமென்று
பங்கயஞ்சீர்கண்ணாள் பவளக்கொடியாளும்
பல்லக்கின்மீதேறிப் பாங்கியர்கள்சூழ்ந்துவர
எந்திழைமார்சூழவேவந் திறங்கினாள்மண்டபத்தில்
வாள்விஜயனர்ச்சுனனும் மாணிக்கச்சங்கிலியன்
கட்டையவிழ்த்தவனுங் கடுகவெழுந்தானே
அச்சுதானந்த ஐயரேயென்தோழா
ஆயிரந்தோழருக்கு அரியசிகாமணியே
கண்டீரேதோழா நீ கன்னியுடலட்சணத்தை
பார்த்தீரோயென்தோழா பவளக்கொடிலட்சணத்தை
இவளுக்குவப்பானோர் யாருமில்லைவையகத்தில்
ஈஸ்வரன்தேவி ஈஸ்வரியாளீடுமல்ல
இராமருடதேவி இலட்சுமியுமீடுமல்ல
சதுர்முகனுடதேவி சரஸ்வதியுமீடுமல்ல
எமனுடதேவி மோககன்னியீடுமல்ல
இந்திரன்தன்தேவி யிந்திராணியீடுமல்ல
சந்திரனார்தேவி ரோகணியுமீடுமல்ல
சூரியனார்தேவி சாயாதேவியீடுமல்ல
கந்தருடதேவி கனவள்ளியீடுமல்ல
மன்மதன்தேவி ரதிமாதுமீடுமல்ல
ஆருடையஅழகுக்கு ஒப்பிடுவேனாரணங்கை
வேரிற்பவளமது மின்னுகிறகாந்திகண்டாய்
ஆயிரமின்னலிலே சோதிமின்னல்தன்னொளியாம்
கண்ணாலேபார்க்க முடியவில்லைகன்னியரை
எப்படித்தான்மறந்து இவளைவிட்டுநான்போவேன்
இறப்புக்கும்பிறப்புக்கு மினியொருபெண்வேணுமோ
இவளை-மாலைதரியாமல் வருவதொருநாளுமில்லை
இவளாலேயென்னுயிரும் இறக்கிறது தப்பாமல்

அச்சுதானந்த ரையருந்தான்கேட்டு
ஏன்காணும்வாள்விஜயா இந்தமதியுந்தனுக்கு
தோணமாலைபோட்டதொரு தோழிமார்தங்களிலும்
பாஞ்சாலன்பெற்றபெண்ணை பத்தினியைமாலையிட்டீர்
அவளிலுமெத்த ஆரணங்கிவளழகோ
எந்தனதுதங்கை சுபத்திரையைமாலையிட்டீர்
அவளிலுமெத்த ஆரணங்கிவளழகோ
அகத்தியனார்பெற்றெடுத்த அருங்கிளியாள்போகவதி
அவளிலுமெத்த ஆரணங்கிவளழகோ
மேகம்பயின்றெடுத்த மின்னொளியைமாலையிட்டீர்
அவளிலுமிவளழகோ ஆனந்தவாழ்மார்பா
மதுரைதுரையல்லியரை மாலையிட்டீர்வாள்விசயா
அவளிலுமிவளழகோ ஆரணங்குபெண்ணரசாள்
மெல்லியரைப்பார்க்கிலும் மிச்சமுண்டோஇவளழகு
வேண்டாங்காண்வாள்விசயா வெறுத்துவிடுமவளாசை
ஏழுலட்சந்தேவிமா ரெல்லோருந்தானிருக்க
மாதொருத்திக்காகவே மயங்கியழுவானேன்
நீர்-என்னதான்சொன்னாலு மென்செவியிலேறாது
மாதந்தக்கன்னியரை மணமாலைசூட்டினாலே
என்னுடையசீவன் இருக்குங்காணென்தோழா
எண்ணப்படிமுடிக்க வேண்டுங்காணீஸ்பரரே
இருவருமாக இருக்கின்றவேளையிலே
பங்கயஞ்சீர்கண்ணாள் பவளக்கொடிநாயகமும்
பொழுதுசரிந்தது போகவேண்டுமாளிகைக்கு
மார்பின்சரப்பளியை வாங்கிவாதாதியென்றாள்
அப்போதுதாதிமார் அதிதுரிதமாகவந்து
ஆர்காணுமன்னவனே அழகானஐயாவே
ஆச்சியர்கட்டிவைத்த அழகுசரப்பளியை
கட்டிவைத்துப்போனதைக் கடுகவேதாருமென்றாள்
பொழுதுசரிந்தது போகவேணுமரண்மனைக்கு
மார்பின்சரப்பளியை மன்னாகொடுத்திடென்றாள்

திட்டென்றெழுந்திருந்து தேர்விஜனே துரைப்பான்
உங்கள்-கோட்டைகளேறி குதித்தேனோ-ஆரணங்கே
மதிலேறிக்குதித்தேனோ மாதுநல்லாள்கோட்டையிலே
பெட்டியெடுத்தேனோ பொக்கிஷந்திருடினேனோ
மாதவள்கையை வலியவந்துதொட்டேனோ
கள்ளன்திருடனைப்போல் கன்னமிட்டுப்போனேனோ
என்னகுற்றஞ்செய்தேனுன் என்னையவள்தானும்
கட்டழகிமாதவளுங் கட்டிவைத்துப்போனாளே
கள்ளனைப்போலாகக் கட்டவும்நியாயமுண்டோ
திருடனைப்போலாகச் சேர்த்துகட்ட நியாயமுண்டோ
கட்டினால்தீருமோ கன்னியவளாசை
கட்டியமாதுமென்னைக் காட்டில்விட்டுப்போகலாமோ
கூடவழைத்தலவோ போகவேணுங்கொம்பனையாள்
அரண்மனைக்குளென்னை அழைத்துப்போகலாகாதோ
என்னசுதந்தரத்தால் என்னையவள்கட்டிவைத்தாள்
அம்மான்மகனென்று ஆசையாய்கட்டினாளோ
அத்தைமகனென்று அன்பாகக்கட்டினாளோ
வாகானகன்னியென்று மணமாலைசூட்டினேனோ
வடிவானகன்னியென்று வாழ்மணஞ்செய்தேனோ
என்னசுதந்தரத்தால் என்னையவள்கட்டிவைத்தாள்
கையிலகப்பட்டதை விடுவேனோகன்னியரே
மார்பின்சரப்பளியை மாதேகொடுக்கேனடி
வலியவந்தபாக்கியத்தை விடுவேனோமாதரசே
சண்டைக்குவேண்டுமென்றால் சரியாகவாரேனடி
அவளுக்குஅஞ்சுவனோ ஆனந்தவாழ்மாரி
என்றதுகேட்டு ஏதுசொல்வார்தாதியர்கள்
உந்தனுக்குச்செய்த உத்தமமத்தனையும்
வேங்கைக்குச்செய்த விஷதாரியாச்சுதடா
செத்திடத்தில்செத்து செல்லூளுத்துப்போகாமல்
மாண்டிடத்தில்மாண்டு மண்ணூளுத்துப்போகாமல்
எழுப்பிவிட்டதோஷமோ இத்தனைபேசுகிறாய்

ஆகடியம்பேசுதற்கு அடுக்குமோஉந்தனுக்கு
என்றதுசொல்லியே நடந்தாளிளங்கொடியாள்
வாயுவேகமாகவே வந்தாளேமண்டபத்தில்
பவளக்கொடிமாதுக்குப் பாதத்தில்தெண்டனிட்டாள்
கைகட்டிவாய்புதைத்துங் கன்னியருமேதுரைப்பாள்
மார்பின்சரப்பளியை மன்னவனைப்போய்க்கேட்டேன்
என்னென்றுசொல்வேன் இடிவிழுவான்சொன்னது
பொழுதுசரிந்தது போகிறோமரண்மனைக்கு
மார்பின்சரப்பளியை மன்னவரேதாருமென்றேன்
வம்பானவார்த்தைகளும் இடும்பானபேச்சுகளும்
மூக்கரிவான்சொன்னசொல்லை மொய்குழற்குச்சொல்ல
அப்போதேசொன்னோம் தப்புவருமென்றுசொல்லி
அவனையெழுப்புவது ஆகாதுயென்றுசொன்னேன்
நமக்குவினையாச்சு யென்று நான்சொன்னேனே
பொன்சரப்பளியும் போனாலும்போகட்டும்
மாளிகைக்குநாம்போவோம் மாதேபயணமிடு
என்றதுசொன்னவுடன் இளவிசயனருச்சுனனும்
அச்சுதானந்த ரையர்முகம்நோக்கி
என்னவடிவு மெடுக்கலாமென்தோழா
அன்னத்தின்மேலே ஆசையுண்டுமாதருக்கு
வேடனைப்போலாக வேஷமெடுங்காணும்
என்னைவிலைகூறி யெடுத்துப்போம்ஏந்திழைமுன்
பார்த்தாசைபட்டலவோ பரிந்துவிலைகேட்பாள்
ஆயிரம்பொன்னென்று அவள்கையில்நீர்கொடுத்து
ஊருக்குநேர்கிழக்கே விநாயகர்கோவிலண்டை
அங்கேபோய்நீரிருங்காண் அச்சுதாநான்வாரேன்
மாயன்பெருமாளை மனதிலேதானினைந்து
ஆயன்பெருமாளை அப்போநினைத்தானே
எம்பெருமாளேகவர்ண ஏழுலகளந்தமாயா
முட்டையின்குஞ்சுகளை முகமரியாப்பாலகனை
பிட்டுவளர்ந்தீரே பிரபலியமாகவென்று

மூக்காலேமுள்பொறுக்கி மூழுமரத்தில்கூண்டுகட்டி
காக்கையின்குஞ்சுகளை கருதிவளர்த்தீரே
உன்னையேநம்பி உயிர்கொண்டுலாவுகிறேன்
மாதுபவளக்கொடியை மணமாலைசூட்டுகிறேன்
அன்னவடிவாக ஆண்டவரே நீர்கொடென்ருர்

ஸ்ரீகிருஷ்ணர் அர்ச்சுனனுக்கு அன்னவடிவுகோடுத்தல்

அர்ச்சுனன் தானினைக்க ஆயனதுவறிந்து
அன்னவடிவாக ஆயன்வரங்கொடுத்தார்
ஆணலழகுமன்னன் அன்னத்தைப்போலானன்
செட்டையழகென்ன சீருடையநெற்றியென்ன
காலினழகென்ன கழுத்தினழகென்ன
கண்ணினழகென்ன காதுவடிவழகே
மூக்கினழகென்ன மூனைமயிரும்பாவனையும்
கூவுங்குரலழகன் குலுங்கும்நடையழகன்
அர்ச்சுனராஜனவர் அன்னவடிவானர்

ஸ்ரீகிருஷ்ணதேவர் வேடவுருவேடுத்தல்.

அச்சுதானந்தரையர்பெருமாளும்
காட்டுக்கிழங்கெடுக்கும் கனவேடன்போலானர்
காற்செருப்புங்குல்லாவுங் கைதனிலேமான்வலையும்
பற்றிகுத்துபல்லயமும் பாரிசமுங்கைபிடித்து
கருநாயுஞ்சங்கிலியுங் கைதனிலேதான்பிடித்து
அன்னத்தையேந்திக்கொண்டு அவர்வாருர்கானகத்தில்
பவளக்கொடியாள் பத்தினியாள்தானிருக்கும்
மண்டபத்துவழியாக வருகிருன்வேடனவன்
ஆரணங்குதோழிமார் அன்னத்தைதான்பார்த்து
ஆரடாவேடுவனே அன்னத்தைவிற்கிறவன்
விற்பீரேயாமானல் வேண்டியபொன்தாரேனென்ருள்
அப்படியேநல்லதென்ரு னழகுள்ளவேடனவன்
ஓடியேவந்தார்கள் உத்தமிமுன்தாதியர்கள்
பவளக்கொடியாளின் பாதத்திற்போய்ப்பணிந்து

ஆரோவொருவேடன் அன்னத்தைவிற்கலுற்ருன்
அன்னத்தைப்பார்த்தா லழகாயிருக்குதம்மா .
கண்ணிட்டுப்பார்க்கவே காணமுடியாது
எங்கிலும்பார்த்ததில்லை இயலான அன்னமது
வைத்துவளர்க்கலாம் வாங்குமம்மா ஆச்சியென்ருள்
அவ்வார்த்தைதான்கேட்டு அன்னநடைமாது
அந்தநல்லவேடுவனை அழைத்தோடிவாருமென்ருள்
ஓடிஞள்தாதியரு மொருமெநாடியில்வேடனண்டை
ஆரடாவேடுவனே ஆச்சியழைக்கிருள்
அன்னத்தைக்கொண்டுவாடா அழகுள்ளவேடுவனே
என்றதுசொல்லையிலே இசைந்துவழிநடந்தார்
பவளக்கொடியாள் பத்தினியாள்முன்னேவந்தார்
கண்டாள்பவளக்கொடி கட்டழகியன்னமதை
என்னப்பாவேடுவனே என்னவிலையன்னமென்ருள்
ஆயிரம்பொன்கொடுத்தால் அன்னந்தருவேனென்ருர்
ஆரடிதாதிகளே அளந்துபொன்கொடுத்திடென்ருள்
அன்னத்தைவாங்கி அழகாய்மடியில்வைத்தாள்
மூக்கிஞலர்ச்சுனனு முன்மார்பில்குத்தலுற்ருன்
மார்பில்ஸ்தனத்தையவன் வாயால்பிடித்திழுப்பான்
முகத்தோடேமுகமணேவான் முத்தங்கொடுத்திடுவான்
பவளக்கொடியாளும் பத்தினியாளேதுசொல்வாள்
என்னடாவேடுவனே இப்படிமேல்விழுது
ஆரிழையாளென்தங்கை அவள்வளர்த்த அன்னமிது
பெண்டுகளென்ருல் பிரியமாய்மேல்விழுமே
ஆசையாய்முத்தமிட்டு அணைத்துவிளையாடும்
சீராய்வளர்த்திடென்று செப்பிவழிநடந்தான்
ஆரடிதாதிகளே அலங்காரச்செங்கமலம்
இந்தஅன்னமெப்போ திரைகளெடுத்ததுவோ
போசனங்கொண்டுவாடி யென்ருளேபொற்கொடியும்
மாம்பழம்பலாப்பழமும் மலைவாழைரஸ்தாளி
கரிவாழைசெவ்வாழை காட்டுவிளாம்பழமும்

கொண்டுவந்துவைத்தாளே கொம்பனையாள்முன்னே
அன்னமதற்கூட்டி ஆவல்தெளியவைத்து
ஆரடிதாதிகளே அழையுங்கள் தச்சனைத்தான்
ஈழத்துத்தச்சனை இக்ஷணமேயழையுமென்றார்
ஓடினார் தாதியர்கள் ஒருநொடியில் அழைத்துவந்தார்
வந்துபணிந்தானே வரிசையுள்ள தச்சனவன்
என்னையழைத்தது ஏதுகருமமென்றான்
அன்னமதுதானிருக்க அழகுகூண்டுபண்ணுமென்றாள்
சொன்னளவில்தச்சன் தெண்டனிட்டுபோய்நடந்தான்
சோடித்துவைத்தவன் தெண்டனிட்டுபோய்நடந்தான்
அன்னத்தைத்தானெடுத்து ஆவலுடன்முத்தமிட்டு
கூண்டிலடைத்தவளும் கொப்பனவேதானெழுந்தாள்
ஏறினாள்பல்லக்கில் எடுத்தார்நெடுங்குடைகள்
பக்கநிறைந்தார்கள் பாங்கிகளுந்தோழிகளும்
சுற்றிநிறைந்தார்கள் தோழிகளும்மூப்பிகளும்
யானைமேல்பேரிகை அடிபடுதுகோடிவகை
ஒட்டையின்நகபத்து ஓசைமுழங்கிறது
முழங்குதேமேளதாளம் மொய்குழலும்வாராளே
காடுகடந்து கரியமலைதான்கடந்து
வனமாய்வனங்கடந்து அரண்மனைக்குவாராளாம்
தெத்துக்கடந்தாள் தெருவீதிதான்கடந்தாள்
கடையுங்கடைத்தெருவும் கருமாரவீதிவிட்டு
அங்காடிவீதியது அரண்மனையுந்தான்கடந்து
மாடதெருவீதி மயிலணையுந்தான்கடந்து
கோபுரவாசலண்டை கொம்பனையாள்வந்துநின்று
மாளிகையில் நுழைந்து வந்தாள்கொலுமண்டபத்தில்
சிங்காரமண்டபத்தில் தேன்மொழிபோய்ச்சேர்ந்தாள்
அந்திகாலமாச்சுது ஆதித்தன்போய்மறைந்தான்
பொழுதுமறைந்தது போதவிருளாச்சு
ஆரடிதாதியரே அலங்காரத்தோழிகளே
அன்னத்தைக்கொண்டவிலை அறிவீர்கள்தாதியரே

மாடத்தில்கூடத்தில் கட்டாதமங்கையரே
நற்பவளத்தூணு நடுவாகக்கட்டுமென்றுள்
சலவைசப்ரமண்டபத்தில் தான்வைத்துக்கட்டலுற்றார்
பாரித்திருந்தானே பாரமெத்ததோணுகைக்கு
அடி-அக்கமாரே தங்கமாரே அன்னமெத்தபாரமடி
மஞ்சமலங்கரித்து மண்டபத்துச்சங்கிலியால்
வைத்திழுத்துக்கட்டினார் மன்னவரர்ச்சுனரை
பவளக்கொடியாளுடைய பஞ்சணைமேலாக
நற்பவளத்தூணிலே நலமாகக்கட்டினார்கள்
தீர்த்தங்கள்வாங்கியே திருவாயுங்கைகழுவி
போசனங்களுண்டு புனல்வார்த்துக்கை துவட்டி
பஞ்சணைச்சாலையது படுக்கையறைசோடியென்றாள்
கடுகவெழுந்தார்கள் கட்டழகிதாதியரும்
கண்மூன்றுடைய கனவயிரக்கட்டிலிட்டு
மெத்தைபடித்திட்டு மேலேயணைகோலி
காம்பரிந்தஜங்கலப்பூ கட்டிலின்மேல்பரப்பி
கால்கோட்டைகைகோட்டை இட்டந்தகாரிகைக்கு
ஒருதலையணையா மொய்யாரப்பஞ்சணையாம்
அன்னவூஞ்சல்மேலே அழகாகச்சோடித்தார்
அத்தர்புனுகுகளை அள்ளித்தெளித்தார்கள்
கதம்பகஸ்தூரிகளைக் கரைத்துத்தெளித்தார்கள்
சாம்பிராணிவாடைகளும் சந்தனப்புகைகொடுத்தார்
சந்தனமுங்குங்குமமும் சவ்வாதுந்தான்தெளித்து
சாம்பிராணிவாடைகளும் சந்தனப்புகைகொடுத்தார்
பஞ்சணைமெத்தையண்டை தம்பலந்தட்டில்வைத்தார்
காச்சாக்களிப்பாக்கும் கம்மாறுவெற்றிலையும்
ஆரங்கிப்பாக்குகளும் மோரங்கிவெற்றிலையும்
வாகாயிலைச்சுருளும் வர்னத்துவர்பாக்கும்
கொத்துத்துவர்பாக்கும் கோவையிலைச்சுருளும்
மூத்துசுட்டசுண்ணும்பு மொய்குழற்குவைத்தார்கள்
கெண்டியில்தீர்த்தமும் கொண்டுவந்துவைத்தார்கள்

குத்துவிளக்கும் குடவிளக்குமேற்றிவைத்தார்
மாடவிளக்கும் மயில்விளக்குமேற்றிவைத்தார்
ஆயிரம்பெருவிளக்கவ் வாசலிலேற்றிவைத்தார்
சோடித்தோமென்று சொல்லியேதெண்டனிட்டார்
பவளக்கொடியாளும் பத்தினியுந்தானெழுந்து
காவல்பதினெட்டுவாசல் கார்க்கிறதாதியர்கள்
பத்திரங்காவலென்று பஞ்சணையில்போயிருந்தாள்
பள்ளியறைச்சாலையிலே பைங்கிளியும்போயிருந்தாள்
காயாரக்காய்த்த கமுகினிளம்பாக்கும்
வாயாரத்தின்றவளும் மலரணையிற்பள்ளிகொண்டாள்
நிமிசாபெரியலகு நேரிசமாம்பெரியகத்தி
மந்திரவாளுருவி மார்மேலேசாத்திக்கொண்டாள்,
பவளக்கொடியாளும் பள்ளிகொண்டாளப்போது;
அங்கங்கேதாதிமார அனைவோரும்பள்ளிகொண்டார்

## அருச்சுனராஜன் அன்னவடிவை விட்டு மனிதருபமாகுதல்.

அனந்தல்நெடுநாழி சென்றபிறகாக
ஆணழகனருச்சுனனும் ஆயனைத்தானினைந்து
மாயன்பெருமாளை மனதிலேதானினைந்து
கூண்டைத்திறந்தவனும் கொப்பெனவேரூபமானான்
அன்னவடிவைவிட்டு ஆள்ரூபமானனே
பொல்லாதகாதல் புலம்புதுகெவுளியது
வன்குரலில்பல்லியது வலப்புறமாய்ச்சொல்லுகுது
எழும்பியகாதலை எண்ணியவள்பார்ப்பளவில்
ஆள்வரத்தாகவே அக்கெவுளிசொல்லுகுது
அடுத்தடுத்துச்சொல்லுவதும் ஆள்வரக்காணுவதும்
இத்தனைநாளாக இல்லாதகெவுளியது
ஒருநாளுஞ்சொல்லாது உச்சிதமாய்ச்சொல்லுதிப்போ
காட்டிலிருந்தவர்கள் கள்ளரோநானறியேன்
ஆரம்பம்பண்ணமல் அழுதாற்போலேயிருந்தாள்

பின்னுமரை நாழி பொறுத்தபிறகாக
பொல்லாதகாதல் எழும்பிற்றுபொற்கொடிக்கு
எழும்பியகாதலை எண்ணியவள்பார்ப்பளவில்
அடுத்தடுத்துச்சொல்லுவதும் ஆள்வரக்காணுவதும்
எண்ணிகலங்கி இளங்கொடியாளேதுசொல்வாள்
ஆரடிதாதிகளே அலங்காரச்செங்கமலம்
பஞ்சணைமேலாகப் பாங்கயரேபள்ளிகொண்டேன்
ஒருநாளுஞ்சொல்லாத உச்சிதகெவுளியது
வலப்புறத்துப்பல்லி வடபுறமாய்ச்சொல்லுதடி
கெவுளியின்சாஸ்திரத்தை ஆராய்ந்துபாரடி நீ
என்றதுகேட்டவுடன் இளங்கொடியாள் தாதியர்கள்
அவளறிந்தசாஸ்திரத்தை ஆராய்ந்துபார்க்கலுற்ருள்
ஆரோதெரியாது ஆள்வரத்தாய்க்காணுதென்ருள்
அவ்வார்த்தைகேட்டுமவள் ஆரணங்குஏதுரைப்பாள்
காவல்பதினெட்டுவாசல் காத்திடுங்கள்பைங்கொடியே
பத்திரமாகவே காத்திடுங்கள்பைங்கொடியே
எச்சரிக்கையாகவே யிருங்களடிகாவலிலே
தப்பிதமுண்டானால் தலையைத்தறித்திடுவேன்
காவலுடையவற்குக் கட்டுதிட்டம்பண்ணிவைத்தாள்
பவளக்கொடியாள் பத்தினியாள்சொற்படிக்கு
பதினெட்டுவாசலுள்ளார் பத்திரமாய்க்காக்கலுற்ருர்
அன்னவூஞ்சல்மேலாக ஆரணங்குபள்ளிகொண்டாள்
பின்னுமொருநாழி பொறுத்தபிறகாக
காண்டாவனமெரித்த காளையெழுந்திருந்து
எப்படிக்குயிவளுடனே இணங்கிமருகிடுவேன்
மூச்சுபிடித்தவனும் விளக்கையணைத்துவிட்டான்
கொம்பனைமெத்தையை கொப்பென்றசைத்தாரே
பஞ்சணைமெத்தையிலே மணிகளசைந்ததுகாண்
பொட்டெனவிழுத்துப் பொற்கொடியும்பார்த்தாளே
மந்திரவாளாலே வீசினுள்மாதுகன்னி
முன்லாகையாகாமல் பின்லாகையால்குதித்தான்

நற்பவளத்தூணு நடுவாகஇற்றதுகாண்
வெட்டுவிழுந்தது வீரமணுவாளாலே
பவளக்கொடியாளும் பத்தினியாளேதுசொல்வாள்
வானவர்கள்தேவர்களும் வந்தாரேவாசலுக்கு
வானவர்களானுக்கால் மாண்டுமடிந்திடுவார்
மனிதரூபமானுக்கால் மாண்டுமடிந்திடுவார்
என்றதுசொல்லி இளங்கொடியாள்தான்படுத்தாள்
பின்னுமொருநாழி பொறுத்தபிறகாக
ஆனந்தமார்பனவன் அர்ச்சுனராசதுரை
மஞ்சத்தைத்தான்பிடித்து மன்னனசக்கிவிட்டான்
அரைவடமும்கிண்கிணியு மசைந்துகிடுகிடென்ன
அன்னமும்பொன்மயிலும் ஆடிற்றுவோசையுடன்
மஞ்சம்பிரண்டது மணிகளசைந்ததுகாண்
வேல்பொருதுங்கண்ணாளும் வீசலுற்ருளந்நேரம்
வீசினவாளும் வேந்தரவரர்ச்சுனரும்
முன்லாகையாகாமல் பின்லாகையால்குதித்தார்
நற்பவளத்தூணு நடுவாகஇற்றதுகாண்
கண்விழித்துப்பார்த்தாளே கட்டழகிமாதுகன்னி
காட்டிலிருந்ததொரு கள்ளன்திருடனோ
வானவர்கள்தேவர்கள் வந்தாரோநானறியேன்
மஞ்சம்புரளுவதேன் மணிகளசைவானேன்
வானவர்களென்ருலென் வாள்முனைக்குத்தப்பிடுவார்
ஆள்ரூபமானுல் அவர்பிழைக்கப்போரதில்லை
ஏறெடுத்துப்பார்த்தாளே யிளங்கொடியாளர்ச்சுனரை
மன்னன்முதுகிலே மட்சரேகைகண்டாளே
அப்போவிஜயன் அர்ச்சுனனுமேதுரைப்பான்
உன்-வாசலுக்குவானவர்கள் தேவர்களும்வாராரோ
நான்-தேவாதிதண்டமடி தேர்விஜயனர்ச்சுனனும்
மாயனெம்பெருமாளுக்கு மைத்துனன்நான்தாண்டி
பல்லொளியைக்காட்டினன் பவளக்கொடியாட்கு
பல்லொளியைக்காட்டி பார்த்துநகைத்துவிட்டான்

பல்லொளிகண்டவுடன் பவளக்கொடிசோர்ந்தாளே
சோர்ந்துமயங்கியவள் சொரணேதப்பிக்கீழ்விழுந்தாள்
ஆணுலழகுமன்னன் அர்ச்சுனன்தானெழுந்து
சாயமணிக்கவுரி சந்தனத்தாலூதுவத்தி
வீசக்களேதெளிய வெண்சாமரைகவுரி
வீசக்களேதெளிந்து மெல்லியருங்கண்விழித்து
கற்பழியாக்கன்னியரும் கற்பழிந்துபோனுளே
கற்பழிந்துபோனேனென்று கன்னிபுலம்புகிருள்
அப்போவிஜயன் அர்ச்சுனனுமேதுசொல்வான்
நீதானேகற்பழிந்தாய் நேரிழைநாயகமே
கற்பழிந்தமாதர்களேக் கன்னியரேசொல்கிறேன்கேள்
தீயிற்பிறந்தவளும் தென்னுடன்பாவையரும்
மேகம்பயின்றெடுத்த மின்னுடன்பாவையரும்
நாகம்பயின்றெடுத்த நறுநுதலாள்கன்னியரும்
அச்சுதன்தங்கையவள் ஆரணங்குசுபத்திரையாள்
மகுடத்துரைச்சியவள் வாழ்வரசியல்லியரும்
நான்-கற்பழித்தமாதர்கள் கணக்குமிதங்களில்லே
என்றதுகேட்டு இளங்கொடியாளேதுசொல்வாள்
எத்தேசகாலமும் இதுவேதொழில்தானே
எப்போதுமெந்தனுக்கு இதுவேதொழில்தாண்டி
குருகுலவம்மிசத்தில் குந்திவயிற்றிலே
ஐவருடன்பிறந்தேன் ஆனந்தவாழ்மாரி
அவனிமுழுவதும் ஆளுகிருர்தர்மலிங்கம்
நான்-தேவியைக்கொள்கிறதுஞ் செல்வரையீனுறதும்
இதுவேதொழிலாக இருக்கின்றேனேந்திழையே
மன்னவருந்தேவியரும் மனதுறவானபின்பு
உன்மேல்மயலாகி உந்தனேச்சேரவென்று
அன்னவடிவதுநான் கொண்டேனே ஆரணங்கே
வேடனூர்கைதனிலே விலேயாகக்கொண்டாயே
அத்தாலுஞ்சாடை அறியாமற்போனேயடி
என்-மூக்கிளுல்மார்பை குத்தினேன்மங்கையரே

உன்-மார்சதையைக்குத்தி வலித்தேனடிமங்கையரே
அத்தாலுஞ்சாடை அறியாமற்போனையடி
ஆளனுந்தேவியுமாய் அக்காட்டில்நானிருந்தேன்
கதண்டுகொட்டிசெத்தவனைப் போலாகநானிருந்தேன்
பவளக்கொடியறுத்துக் கட்டிவைத்தாய்பத்தினியே
கட்டுங்கொடியை அறுத்தேனடிகன்னியரே
அத்தாலுஞ்சாடை அறியாமற்பேனையடி
யானைகட்டுஞ்சங்கிலியால் ஆரணங்கேகட்டிவைத்தாய்
சங்கிலியைநானறுத்துப் போட்டேனேதையலரே
அத்தாலுஞ்சாடை அறியாமற்போனையடி
மார்பின்சரப்பளியால் வரிந்தென்னைக்கட்டிவைத்தாய்
உன்-தாதியரை நீயனுப்பி வாங்கிவரச்சொன்னாயே
சொல்லாதவார்த்தையெல்லாஞ் சொல்லியனுப்பினனே
உன்னை-திட்டியனுப்பினண்டி தீங்காகச்சொன்னேனே
அத்தாலுஞ்சாடை யறியாமற்போனையடி
அன்னவடிவு எடுத்தேனே ஆரணங்கே
வேடனார்கொண்டுவர விலைகொடுத்துவாங்கினையே
உன்-முத்துஸ்தனத்தை நான்குத்திவலித்தேனே
அத்தாலுஞ்சாடை அறியாமற்போனையடி
வேடனைப்போலாக வந்தவனுமென்தோழன்
அன்னத்தைத்தாதியர்க ளரண்மனையிற்கட்டிவைத்தார்
பவளக்கால்மண்டபத்தில் பத்தினியேகட்டிவைத்தாய்
அன்னவடிவைவிட்டு ஆள்ரூபமானேனண்டி
பஞ்சணைமெத்தையை அசைத்தேன்மணியசைய
அத்தாலுஞ்சாடை அறியாமற்போனையடி
உனக்கு அழகேபெரிதுகண்டாய்ஆண்மைகள்போதாது
மகுடத்துரைச்சியவள் வாழ்வரசியல்லிநல்லாள்
அல்லியவளுடைய ஆண்மையுனக்கில்லையடி
இவைகளெல்லாஞ்சொல்லியே சிரித்தானிளவிஜயன்
பவளக்கொடிமாது பத்தினியுமேதுசொல்வாள்
தோழரும்நீருமாய் வந்தேனென்றீர்சுந்தரரே

அருகேவந்ததோழரவர் ஆணழகாஎங்கேயென்ருள்
ஊருக்குஅப்பாலே பிள்ளையார்கோவிலண்டை
பிள்ளையார்கோவிலண்டை யிருக்கிருரென்தோழன்
இட்டுவரச்சொன்னுலே இக்ஷணமேநாழைப்பேன்
ஆனுலழைத்துவா ஆணழகாதோழனைத்தான்

பவளக்கொடியாள் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியை அழைத்துவர
அர்ச்சுனராசனை அனுப்புதல்.

என்றதுகேட்டு இளவிஜயனேதுசொல்வான்
எந்தவழியாக இளங்கொடியேநான்போவேன்
சுரங்கத்துக்குள்ளாகச் சுருக்காய்நடவுமென்ருள்
அப்படியேநல்லதென்று •அர்ச்சுனனுந்தானெழுந்து
சுரங்கத்துக்குள்ளாகச் சுறுக்காய்நடந்தானே
கோட்டைகடந்தானே கொத்தளமூந்தான்கடந்து
பிள்ளையார்கோவிலண்டை போரானேவாள்விஜயன்

ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி அர்ச்சுனராசனை நினைத்துப் புலம்பல்.

அச்சுதானந்த ஐயர்புலம்புகிருர்
ஆருயிர்த்தோழனே அர்ச்சுனனேயென்செய்வேன்
உன்-அண்ணன்தருமருமே அனுப்பினுருன்பிறகே
இருவருமாகவே இங்குவந்தோம்தீவுதனில்
உன்னையிழந்துநான் ஊர்வழிபோவேனே
மாதர்மேலாசையாய் மயக்கமெடுத்தீரே
அன்னவடிவாக ஆசைகொண்டுபோமிடத்தே
அவளைக்கூடியணையயிலே கொம்பனைகண்டாளோ
பார்த்தீபாஉந்தன் பதட்டமறிவேனே
நீகட்டியணையயிலே காவலர்கள்கண்டாரோ
அவளைக்கூடிஎழுந்திருக்கக் கோடிபேர்வந்தாரோ
உன்னைக்கட்டிப்பிடித்தாரோ காவலில்வைத்தாரோ
வெட்டியெறிந்தாரோ வீரமணிவாளாலே
உத்தமவீரியனே உயிர்க்கழுவில்வைத்தாரோ
நீமாண்டுமடிந்தாயோ வயிரமுடிசிந்தினதோ

சந்தனவடிவழகர் தருமருக்கேதுசொல்வேன்
வெற்றிமதயானை வீமருக்கேதுசொல்வேன்
ஈரல்புகுந்த இரட்டையர்க்கேதுசொல்வேன்
தோராவடிவழகி துரோபதைக்கென்னசொல்வேன்
மந்தாரகுந்தியர்க்கு மாதருக்கென்னசொல்வேன்
அவர் அங்கம்பிழையாதே ஆணழகாஎன்னசொல்வேன்
காணவும்போரேனோ காண்டீபங்கொண்டவனை
பாண்டிப்பெருமாளை பார்க்கவும்போரேனோ
என்றுசொல்லிமாயவரும் ஏசிப்புலம்பலுற்றார்
அந்தச்சமயத்திலே அங்குவந்தான்வாள்விஜயன்
ஏன்காணுமச்சுதரே ஏங்கிப்புலம்புகிறீர்
என் சமர்த்துகளுஞ்சேவகமும் தாழ்வாகப்போரதில்லை
எந்தவிதத்தாலும் ஈடழித்துநான்வருவேன்
என்றதுகேட்டுமப்போ வதுசொல்வாரச்சுதரும்
என்னவடிவாக இருந்தாயவளுடனே
அன்னவடிவாக அவளுடனேசேர்ந்தீரோ
ஆள்ரூபமாகி அவளுடனேசேர்ந்தீரோ
மனிதரூபமாகி மாதரைச்சேர்ந்தீரோ
என்னவடிவாக இருந்தீரிவளுடனே

அருச்சுனன் பவளக்கொடியாள் சேதியைச் சொல்லல்.

என்றதுகேட்டுமப்போ இளவிஜயனேதுசொல்வான்
அல்லகாணச்சுதரே ஆயர்பெருமாளே
அன்னவடிவாக இருந்தேனவளிடத்தில்
பவளக்கால்தூணடுவே பத்தினியாள்கட்டிவைத்தாள்
பஞ்சணைமெத்தையிலே பள்ளிகொண்டாள்பத்தினியும்
அர்த்தராத்திரிவேளையிலே நானெழுந்தேனச்சுதரே
அவள் நித்திரைசோதித்து நினைவறியவேணுமென்று
அன்னவூஞ்சல்தன்னை அசைத்துவிட்டேனப்போது
அசைத்துவிட்டேனப்போது அவள்கையில்வாளுருவி
வீசினாளன்னேரம் வீரமணிவாளாலே

முன்லாகையாகாமல் பின்லாகையாக்குதித்தேன்
மனிதருபமானுக்கால் வாள்முனைக்குத்தப்பார்கள்
தெய்வருபமானுக்கால் திரும்பிப்பிழைத்திடுவார்
வந்தவராரென்று வாய்மொழியுங்கேட்கலுற்ருள்
நான்தேவாதிபிண்டமடி. தேர்விஜயனருச்சுனண்டி
பேரால்புகழ்பெற்ற பெருமாளவர்மைத்துனண்டி
மாயன்பெருமாளுக்கு மைத்துனனும்நான்தாண்டி
இவ்வார்த்தைநான்சொன்னேன்இளங்கொடிமாதருக்கு
பல்லொளிநான்காட்டிப் பார்த்துநகைத்துவிட்டேன்
கண்டுமயங்கிவிட்டாள் கட்டழகிகன்னியவள்
கோபித்துகண்சிவந்து கோதையிளங்கொடியாள்
கூடிமருவினேன் குங்குமச்சாலையிலே
மருவிப்பிரிந்தேனே மாதருறவானேன்
உம்மையழையுமென்று உத்தாரம்பண்ணிவிட்டாள்
அவள்மாளிகைக்குப்போக வாருங்காணச்சுதரே
அப்படியேஅச்சுதரும் ஆணழகரிருவருமாய்
சல்லடந்தான்தொடுத்துத் தட்டிவரிந்துகட்டி
தட்டிமேலொட்டியாணம் சதுரமாய்வரிந்துகட்டி
முத்தினுருமாலை முகமிலங்கக்கட்டினுர்கள்
சட்டைதமானுகளும் தரித்தாரழகுபெற
பொன்முத்துப்பட்டாடை போர்த்தினுர்பட்டாடை
அப்போதருச்சுனனும் ஆணழகனேதுசொல்வான்
அச்சுதானந்த ஐயரேஎன்தோழா
சரப்பளியும்பொன்னுந் தானெடுத்துவாருமென்ருர்
அப்படியேஅச்சுதனும் அழகுமூட்டைதானெடுத்து
இருவருமாகவே இசைந்துவழிநடந்தார்
சுரங்கத்துவழியாகத் துரிதமாப்போய்ப்புகுந்தார்
பவளக்கொடியாள் பத்தினியாள்கோட்டையிலே
உள்வாசல்போய்நுழைந்தார் உத்தமவீரியர்கள்
அவள்-சிங்காதனத்துக்கு முன்பாகவந்து-நின்ருர்
வந்தவரைக்கண்டாளே மாதுஇளங்கொடியாள்

வாருவாருமென்று வணங்கினாள்மாதிவளும்
பத்தியுடன்புத்தியுடன் பாதஞ்சரணமென்றாள்
கொண்டுவந்தமுட்டையைக் கொற்றவர்கீழேவைத்தார்
கொம்பனைக்கெதிர்வந்து கொற்றவர்கள்தானமர்ந்தார்
பங்கயச்சீர்கண்ணாள் பவளக்கொடியாளும்
வேல்பொருதுங்கண்ணாளும் வேந்தர்களைப்பார்த்து
உங்களிருவருக்கும் இதுதான்தொழிலோவென்றாள்
எங்களிருவருக்கும் இதுவேதொழில்களென்றார்
மூட்டையென்னவென்று கேட்டாளிளங்கொடியாள்
அப்போ-அச்சுதானந்த ஐயருமேதுசொல்வார்
அர்ச்சனருமுன்னாலே அன்னவடிவெடுக்க
அவர்-ஆடலும்பாடலும் அதிசயத்தை நீபார்க்க
உன்-கொலுமூகச்சாவடியிற்கொண்டுவந்தேன்முன்பாக
அன்னமென்றுசொல்லி ஆரணங்கேநான்பிடித்து
வேடனுமாக விலைகூறிவந்தேனே
என்னவிலையென்று இளங்கொடியே நீகேட்க
ஆயிரம்பொன்னென்று ஆரணங்கேசொன்னேனே
நீ-அன்னமொருதட்டும் பொன்னுமொருதட்டும்
பொற்கொடியே நீகொடுத்த பொன்மூட்டையம்மாவிது
காண்டீபனருச்சுனனைக் கானகத்தில்கட்டிவைத்த
உன்-மார்பின்சரப்பளி மாதாவேஇந்தாவென்று
கருநீலப்பூங்குழலாள் கையிலேதான்கொடுத்தார்
அப்போதுபெண்மயிலும் அவள்கையில்தான்வாங்கி
பொங்கிமனங்குளிர்ந்து பொற்கொடியாளப்போது
மெத்தஇளைப்பா யிருக்கிறீர்வேந்தர்களே
எங்கேயுண்டபோசனமோ என்றாளிளங்கொடியும்
அப்போ-ஆயன்பெருமாளும் அரிராமர்தான்கேட்டு
அல்லியிடத்தில் அங்கேபொசித்ததுதான்
மூன்றுநாளாச்சுது மெல்லியரேநான்புசித்து

## பவளக்கொடியாள் ஸ்ரீகிருஷ்ணமூர்த்திக்கும் அர்ச்சுனராசனுக்கும் விருந்திடல்.

இவ்வார்த்தைகேட்டு இளங்கொடியாள் தானெழுந்து
அவள்-ஆக்கபதமறியாள் அரிசிபதந்தானறியாள்
அப்படிப்பட்ட ஆரணங்குமப்போது
பட்டாடைதான்வாங்கிப் பாவாடையுள்ளுடுத்தி
அடிசில்சமைக்க ஆரணங்குதானினைந்து
பாண்டத்தைக்கழுவி பனிநீருதான்வார்த்து
சன்னசம்பாதன்னரிசி தீட்டியுலையிலிட்டாள்
முத்துப்போல்சாதம் வடித்தாளிளங்கொடியாள்
நந்தியென்னும்பூசனிக்காய் நாலுவிதங்கறிசமைத்தாள்
வாழைக்காய்பொரியலிட்டாள் வழுதலங்காய்குழம்பு
பீக்கங்காய்ப்பொரியலிட்டாள் புடலங்காய்தான்குழம்பு
கத்தரிக்காய்தான்பொரியல் கருணைபுளிக்குழம்பு
கொத்தவரைக்காய்கள் குலையோடேபொரியலிட்டாள்
பாவக்காய்பச்சடியும் பயிற்றங்காய்தான்பொரியல்
அத்திவிறகொடித்து தித்திக்கப்பால்காய்ச்சி
புத்துருக்குநல்லநெய்யும் பொன்போல்பருப்புகளும்
அதிரசமுந்தேன்குழம்பும் அறுசுவைபதார்த்தங்களும்
பத்துவிதக்கறியும் பதினெட்டுப்பச்சடியும்
எட்டுவிதக்கறியும் இயலானபோசனமும்
ஆயிரத்தெட்டு அரிக்கறியும்மொர்க்கறியும்
கடுகச்சமயலிட்டாள் கன்னியிளமயிலும்
ஆச்சுதுபோசனங்க ளமுதுண்ணவாருமென்றாள்
பாளையுமோலையும் பக்குவமாய்க்கைகொடுத்தாள்
பாளைகொண்டுபல்விளக்கி ஓலைகொண்டுநாவழித்து
தீர்த்தநீர்வாங்கி திருமுகஞ்சுத்திபண்ணி
வசந்தநீர்வாங்கி மதிமுகமுஞ்சுத்திபண்ணி
பூசையின்மண்டபத்தில் புண்ணியர்கள்வந்துநின்றார்
வாழையிலைமேலே வழித்திட்டார்வெண்ணீறு

கோவையிழைபோலே குழைத்திட்டார்திருநீறு
போசனமண்டபத்தில் புண்ணியர்கள்வந்தார்கள்
வட்டமனைபோட்டாள் வந்தவரிருவருக்கும்
வட்டமனைமீது வந்தமர்ந்தாரிருவருமாய்
வாழையிலைபோட்டு வடித்தாள்சாதமது
சுத்திக்கறியைவைத்தாள் தோகையிளங்கொடியாள்
அள்ளிப்பருப்பையிட்டாளது கொண்டுநெய்வார்த்தாள்
குளிர்ந்தசலவெண்ணீரும் கொண்டுவந்துவைத்தாளே
கனிவர்க்கமுஞ்சிலது கச்சாயமுஞ்சிலது
இத்தனையுந்தான்படைத்தாள் ஏந்திழையாளப்போது
உண்ணுங்களென்று உபசரணைசெய்யலுற்ருள்
போசனங்களுண்டு புண்ணியருங்கையலம்பி
சிங்காதனத்திலே தேர்விசயன்வீற்றிருந்தார்
மாயன்பெருமாளும் வந்தாசனத்திருந்தார்
காச்சாக்களிப்பாக்கும் கம்மாறுவெற்றிலையும்
ஆரங்கிப்பாக்கும் மோரங்கிவெற்றிலையும்
அள்ளிக்கொடுத்தாளே ஆரணங்கிருவருக்கும்
பவளக்கொடிமாது பத்தினியாளேதுரைப்பாள்
அச்சுதானந்தரே அண்ணுவே நீர்கேளும்
சேராம்பூராசாக்கள் செய்தபெருந்தவத்தால்
பவளக்கொடிமேலே பத்தினியாள்பெண்பிறந்தேன்
பதினறுவருஷமாய்ப் பட்டமரசாண்டேன்
கொள்ளவருவார்கள் கோடானகோடியுண்டு
மாலையிடவந்தவர்கள் வன்னலட்சங்கோடியுண்டு
நான்-மாலைதரியாமல் மணமாலைசூட்டாமல்
நித்யகன்னியாகவே இருந்தேனின்னுள்வரைக்கும்
அர்ச்சுனர்தன்னுலே அழிந்துதேஎன்தவங்கள்
பத்தினிதாபமது பாழாய்முடிந்ததுவே
எந்தன்விதிப்பயனை ஏதென்றெடுத்துரைப்பேன்
கதியைத்துலைக்கவல்லேன் காவேரிநீந்தவல்லேன்
என்-விதியைத்துலைக்குகைக்கு வெல்லவகையறியேன்

சேராம்பூராசருக்குத் தேன்மொழிநானென்சொல்ல
இப்படியாக இளங்கொடியாள்தான்பார்த்து
அச்சுதானந்தரும் ஆரணங்கைத்தான்பார்த்து
என்னென்றுசொல்லி எடுத்துரைப்பார்மங்கையற்கு

## ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி பவளக்கோடியாளுக்கு கனவு சோல்லுதல்.

பவளக்கொடிமாதே பத்தினியேசொல்வதைக்கேள்
என்னைப்பிறப்பித்த ஈஸ்வரனுமீஸ்வரியும்
அக்கினியாற்றுக்கு அருகாகத்தான்வந்து
சூலமொருகையிலே கபாலமொருகையிலே
மானுமொருகையிலே மழுவுமொருகையிலே
விரித்தசடையும் வெண்புலித்தோலாசனமும்
பக்கங்கொலுவிருக்கும் பார்வதிநாயகமும்
கங்காபவானியரும் கவுரிதரித்தவரும்
திருக்கண்ணுடையவருந் திருநீறுதானணிந்து
வெள்ளைரிஷபமேறி வித்தகரும்தந்தார்கள்
நான்-கண்டுபயந்து கடுகச்சரணமிட்டேன்
பங்கயஞ்சீர்கண்ணுளே பவளக்கொடிமாதே
சேராம்பூராசாக்கள் செய்ததவத்தாலே
பவளக்கொடிமேலே பாலகியையுண்டுபண்ணேன்
பதினறுபிராயமட்டும் பட்டந்தரித்தாளுமென்றேன்
மாலைதரியாமல் மணமாலைசூட்டாமல்
இருந்தீரேயாமானல் எரித்திடுவேன்பட்டணத்தை
பட்டணத்தைநீருக்கிப் பதியையெரித்திடுவேன்
மெய்யாகக்கண்டேன் விழித்தேன்கனவாச்சு
இப்படிக்கனவுகண்டே னென்று நீசொல்லுமென்றார்
அப்படிக்குச்சம்மதித்தாள் ஆரணங்குமப்போது
போய்வாரோமென்றுசொன்னார்புண்ணியர்களிருவரும்
அப்படியேநல்லதென்றாள் ஆரணங்குபவளக்கொடி
அவ்வார்த்தைதான்கேட்டு அர்ச்சுனனுமாயவரும்

சுரங்கத்துக்குள்ளாக துரிசாய்நடந்துவந்து
சுரங்கத்தைவிட்டு வடகோடிகானகத்தில்
பிள்ளையார்கோவிலண்டை போயிருந்தாருத்தமர்கள்
அப்படிக்குத்தானிருக்க ஆரணங்குமங்கையவள்
சப்ரகூடமஞ்சத்தில் தையல்நித்திரைசெய்தாளே
அந்தச்சமயத்தில் ஆரணங்குதாதியர்கள்
அருகேபுடைசூழும் அரிவையர்கள்வந்துநின்று
தட்டியெழுப்பினார்கள் தாமக்குழலாளை
அலண்டுயெழுந்திருந்தாள் ஆரணங்குமங்கையவள்
மஞ்சத்தின்மேலிருந்த மல்லிகைப்புஷ்பமெல்லாம்
காம்பழுகிநிற்கக் கண்டார்கள்தாதியர்கள்
ஒருநாளுங்கருகாத மல்லிகைப்புஷ்பமெல்லாம்
காம்பழுகிநிற்பதென்ன காரணமோசொல்லுமென்றார்

## பவளக்கோடியாள் கண்ட கனவைத் தாதிகளுக்குச் சோல்லுதல்.

பங்கயஞ்சீர்கண்ணாள் பவளக்கொடிசொல்லுகிறாள்
மஞ்சத்தின்மேலேநான் மாதர்களேநித்ரைசெய்தேன்
அந்தநல்லவேளையிலே ஆதிசிவனிங்கேவந்து
என்னை-தட்டியெழுப்பினார் தாமக்குழலாளே
அலண்டுஎழுந்திருந்து ஆரென்றுநான்கேட்டேன்
உன்னைப்பிறப்பித்த எம்பிரான்வந்தேனென்றார்
எங்கேவந்தீரென்று இளங்கொடியேநான்கேட்டேன்
பதினாறுவயதளவும் பட்டமரசாண்டாய்
கேட்டவரம்நான்கொடுத்தேன் கிளிமொழியிப்போது
மணமாலைசூடுமென வாழ்த்திமறைந்தாரே
மாலையிட்டுக்கொண்டதாக மங்கையரேகனவுகண்டேன்
மஞ்சத்தின்மேலேநான் மருவியிருந்தேனடி
நான்-கண்டகனவாலே கருகிற்றுபுட்பமெல்லாம்
மாதர்களேஎன்கனவு மற்றொன்றும்நானறியேன்
என்றுஇளங்கொடியாள் எடுத்துரைக்கஅப்போது

தாய்போல்வளர்த்தெடுத்த தாதியர்கள்தான்கேட்டு
மணமாலைசூட்டுதற்கு மனமுண்டோமங்கையரே
அப்படியேசம்மதந்தா னரிவையிளங்கொடியே
இவ்வார்த்தைதான்கேட்டு எழுந்தாரே தாதியர்கள்

### பவளக்கோடியாள் கண்ட கனவைக்கேட்டு தாதிகள்போய்ச் சேராம்பூ ராஜாக்களுக்குச் சோல்லுதல்.

சேராம்பூராஜரண்டை தீவிரமாயோடிவந்து
மூக்காலடிவணங்கி மூவிருகால்தெண்டனிட்டார்
தெண்டனிட்டமாதர்களைக் கண்டார்கள்ராசாக்கள்
என்னைப்பணிந்ததென்ன ஏந்திழையேசொல்லுமென
கைகட்டிவாய்புதைத்துக் கன்னியர்கள்சொல்லுகிறார்
பங்கயஞ்சீர்கண்ணாள் பவளக்கொடி நாயகியாள்
பதினாறுவயதளவும் பட்டங்கட்டியாண்டிருந்தாள்
பட்டங்கட்டியாண்டிருந்தாள் பாருலகமத்தனையும்
இன்றையதினத்திலே இளங்கொடியாள்கோட்டையில்
கண்டவதிசயத்தைக் கன்னியர்கள்சொல்லுகிறார்
பார்த்தவதிசயத்தைப் பாவையர்கள்சொல்லுகிறோம்
என்னவென்றுசொல்லி எடுத்துரைப்போமன்னர்களே
மஞ்சத்தின்மேலிருந்த மலர்கள்கருகிற்று
இது-என்னென்றுகேட்டோம் இளங்கொடிநாயகியை
பங்கயஞ்சீர்கண்ணாள் பவளக்கொடிசொல்வாள்
என்னைப்பிறப்பித்த ஈஸ்வரரும்வந்துநின்று
சொற்பனஞ்சாதித்தார் தோகையிளங்கொடிக்கு
பதினாறுவயதளவும் பட்டமரசாண்டாய்
கேட்டவரங்கொடுத்தேன் கிளிமொழியேயுந்தனுக்கு
இனி-மணமாலைசூட்டிக்கொண்டு வாழ்ந்திருவையகத்து
என்றுஉரைத்தாராம் ஈஸ்வரனாரப்போது
இப்படிக்கண்டேனென்று ஏந்திழைதானுரைத்தாள்
மணமாலைசூட்டுதற்கு மனதாச்சுமங்கையற்கு

என்றுஉரைத்தார்கள் ஏந்திழைமார் தாதியர்கள்
இவ்வசனங்கேட்டார்கள் இன்பமுடன்ராசாக்கள்
சந்தோஷமானார்கள் சரீரங்கள்பூரித்தார்
இன்பங்குளிர்ந்தாரே இருதோளும்பூரித்தார்
வற்றிக்கிடந்ததொரு மாபெரியகாவேரி
முட்டப்பெருகி முழுஆறுவந்ததுபோல்
சந்தோஷப்பட்டார்கள் தரணியாளும்ராசாக்கள்
சேராம்பூராசாக்கள் துரைகளவரேதுசொல்வார்
எங்கள்மனதி லிருந்தபடியாச்சுதம்மா
மாலையிடவல்லோ வருந்தினோம்காலமெல்லாம்
எங்கள்தபசுபலன் ஈடேறிப்போச்சுதம்மா
பண்ணும்தபசுபலன் பலித்ததம்மாபத்தினியே
கன்னிதுலையாதார் காசினியிலாருமில்லை
அப்படியேநீயு மழகுமணிமாலையிடும்
சிந்தைகுளிர்ந்தாரே சேராம்பூராசாக்கள்

### சேராம்பூராசாக்கள் மந்திரிகளையனுப்பித் தமுக்கடிக்கும் பறையனை அழைத்துவரச் சொல்லல்.

ஆராடாமந்திரியே அறிவுள்ளவீரியனே
இன்றையப்போதையிலே என்றன்மகள் தனக்கு
மணமாலைசூட்டவேணும் மங்கையிளங்கொடிக்கு
தோட்டிதனையழைத்து தமுக்கோசைபோடவேணும்
வெட்டியானைத்தானழைத்து வீரமுரசறையவிடும்
மண்டலராஜாக்களை வரவழைக்கச்சொல்லுமென்றார்
ஆராடாதூதுவனே அழையடாசாம்புவனை
ஓடியழைத்தவனை ஒருநொடியில்வாருமென்று
சொன்னதைகேட்டுத் துரிதமாய்த்தூதுவனும்
ஓடியழைத்தவனை ஒருநொடியில்வாங்களென்றான்
என்னையழைத்தவகை யேதுகருமமென்றான்
ஐம்பதுபேர்ராஜாக்கள் ஐயமாரேதுசொல்லார்
பவளக்கொடிமாது பணிமாலைசூட்டுகிறாள்

பட்டத்துராஜாக்கள் பலபேருந்தானறிய
முரசறைந்துவாருமென்றார் முடிமன்னர்மந்திரியும்
நல்லதென அப்படியே நடந்தானேசாம்புவனும்
வெள்ளானைமேலாக விருதுகளைக்கட்டினான்
வெள்ளித்தமுக்கடித்தான் வெண்கலகொம்பெடுத்தான்
ஆனையேறிமாலைசூடி அடித்தான்பறையோசை
என்னசொல்லித்தானடித்தான் ராஜாக்கள்தான்கேட்க
சேராம்பூராஜாக்கள் செய்ததவத்தாலே
பவளக்கொடிமேலே பிறந்தபதிவிரதை
பதினாறுவருஷமாய்ப் பட்டமரசாண்டாள்
மணமாலைசூட்டுதற்கு மாது நினைவானாள்
கொம்பனையைகேட்டவர்கள் கோடானகோடியுண்டு
மாலையிடவந்தவர்கள் வையகத்தில்கோடியுண்டு
மாதிதுநாள்வரைக்கும் மணமாலைசூட்டாமல்
நித்தியகன்னியாகவே நீணிலத்தையாண்டிருந்தாள்
திங்கட்கிழமையிலே திகழ்புனர்பூசத்தில்
இருபதுநாழிகையில் எழில்மாலைசூட்டுகின்றாள்
மனதுள்ளராஜாக்கள் வந்திடுங்கள்பந்தலுக்கு
மண்டலத்துராஜாக்கள் வந்திடுங்கள்பந்தலுக்கு
அனைவோருமறியவென்று அடித்தான்பறையோசை
அடித்தான்பறையோசை அந்நகரந்தான்கேட்டு
மண்டலத்துராஜாக்கள் மந்திரிகள்தான்கேட்டார்
திக்கிலுள்ளராஜாக்கள் துரைகளெல்லாங்கேட்டார்கள்
பிள்ளையார்கோவிலண்டை இருந்ததொருபோர்விஜயன்
அடித்தபரையோசை ஆணழகன்கேட்டுவிட்டான்
சந்தோஷப்பட்டலவோ சரீரங்கள்பூரித்து
என்னவடிவாகப் போவோமவள்பந்தலுக்கு
ஆரை நினைக்கலுற்றான் அளவற்றசிந்தையிலே
மாயன்பெருமாளை மனதிலேதானினைந்து
அடியளந்தமாயவனே ஐயாசரணமையா
காக்குங்குலதெய்வமே கரியமால்மைத்துனரே

வெண்ணெயுண்டசெவ்வாயா வெற்றிகொடுக்குந்தூயா
கண்ணுக்குள் நிமைபோலகாக்கிறேனென்றுசொன்னீர்
இதுவேளையிதுசமயம் ஏழையைக்காருமையா
பவளக்கொடியாளை பணிமாலைசூட்டுதற்கு
மாலைவந்துமார்பில்விழ வரநதாருமெந்தனுக்கு
மூக்காலேமுள்பொறிக்கி மூனைமரத்தில்கூண்டுகட்டி
காக்காயின்குஞ்சுபோல கடுகிவளர்த்தவரே
மூட்டையின்குஞ்சுகளை முகமறியாப்பாலகரை
பிட்டுவளர்த்தீரே பிரபல்யங்காணவென்று
உந்தன்தயவாலே உயிர்கொண்டுலாவுகிறேன்
பங்கயஞ்சீர்கண்ணாள் பவளக்கொடியாளை
மணமாலைசூட்டுதற்கு வடிவெனக்குத்தாருமென்றான்

## ஸ்ரீகிருஷ்ணதேவர் அருச்சுனராஜனுக்குக் கிழப்பிராமணவடிவங் கொடுத்தல்.

அந்தச்சமயத்தில் அருச்சுனராஜதுரை
பிராமணரூபமது எடுத்தாரேபுண்ணியரும்
தொண்ணூறும்பத்துஞ்சென்ற துவண்டகிழவனானார்
நாற்பதும்பத்துஞ்சென்ற நரைத்தகிழவனானார்
தும்பைப்பூப்போலே துவண்டகிழவனானார்
நாணற்பூப்போலே நரைத்தகிழவனானார்
பண்ணப்பூப்போலே பழுத்தகிழவனானார்
பரந்தமுகத்துடனே திரைந்தநரையானார்
குஷ்டரோகிப்பிராமணனுக் கொற்றவரும்ரூபமானார்
வெள்ளரிப்பழம்போலே வெடித்ததுதேகமெல்லாம்
வெடித்தரணத்திலே புழுக்கள்நெளியுது
சீழுஞ்சலமுந் சிந்துதேதேகமெல்லாம்
ஒருகண்ணும்பொட்டை ஒருகாலுநொண்டியானார்
ஒட்டைத்தலையொன்று ஒடிந்ததெண்டாயுதமும்
செல்லெரித்தபுத்தகத்தை சேரவேகைதொடுத்தார்
பட்டயம்போலாகப் பரந்ததிருநாமமிட்டார்

அச்சுதானந்தரவர் அறியாதபிள்ளையானூர்
பிராமணரூபமது எடுத்தாரேபுண்ணியரும்
பிள்ளையார்கோவிலண்டை இருந்தாரிருவருமாய்

### சேராம்புராஜாக்கள் கலியாணஞ்செய்வதற்குப் பந்தலலங்கரித்தல்.

அந்தச்சமயத்தில் சேராம்புராஜாக்கள்
வாசலலங்கரிப்பார் மணமாலைசூட்டுதற்கு
முத்தைப்பிளந்தார்கள் மூன்றுங்காலிட்டார்கள்
பவளம்பிளந்தார்கள் பந்தக்கால்நட்டார்கள்
வெள்ளியால்கால்நிறுத்தி வெற்றிலையால்பந்தலிட்டார்
கரும்பாலேகால்நிறுத்தி அரும்பாலேபந்தலிட்டார்
ஈக்குப்பிளந்தார்கள் இருகாதம்பந்தலிட்டார்
மூங்கில்பிளந்தார்கள் முக்காதம்பந்தலிட்டார்
நாணல்பிளந்தார்கள் நாற்காதம்பந்தலிட்டார்
வன்னிமரம்பிளந்து வாசலலங்கரித்தார்
மாவிலைதோரணமும் மகுடநல்லதோரணமும்
அரசிலைத்தோரணமும் அலங்காரம்பண்ணூர்கள்
கண்ணாடிசல்லிகட்டி கவரிமான்சுங்குவிட்டார்
பச்சைக்கிளிகளைப் பந்தலிலேதூக்கிவிட்டார்
வெட்டிவேர்குருவேரும் விதம்விதமாய்த்தூக்கினூர்
பட்டாலலங்கரித்து பாளையாலொப்பமிட்டார்
கோர்த்தமுத்தைத்தூக்கிகொலுமுன்புதொங்கவிட்டார்
மற்றமுத்தைபந்தலிலே மாணிக்கமாய்வைத்திழைத்து
வாழைமரம்கமுகுமரம் வாசலெங்கும்கட்டினூர்கள்
தென்னைபலாக்காயும் தெருக்களெங்குங்கட்டினூர்கள்
எங்கெங்குந்தோரணமும் எங்கெங்குந்திருவிளக்கு
ஜன்னல்கள்தோருஞ் சரங்கள்மிகக்கட்டினூர்கள்
அத்தர்புனுகுகளை அள்ளித்தெளித்தார்கள்
சந்தனமுங்குங்குமமும் சவ்வாதுந்தான்தெளித்தார்
திலக்கோலமிட்டார்கள் நிலத்தின்மேல்பூதெளித்தார்

பந்தலலங்கரித்து பட்டுரத்னப்பாய்போட்டார்
தங்கப்பாய்போட்டார்கள் சரிகைதலையணைகளிட்டார்
ஆயிரமணங்குபெற்ற ஆராட்சிமணியெடுத்து
கற்பகப்பந்தலிலே கட்டியேதூக்கினார்கள்
இரும்புநல்லசங்கிலியால் இயல்பெறவேகட்டினார்கள்
ஆராட்சிமணியை அடித்தார்களோசைபெற
ஆராட்சிமணிசத்தம் அந்நகரில்கேட்டிடுமாம்

## ஐம்பத்தாறுதேசத்து இராஜாக்கள் வருதல்.

அடித்தபறையோசை அல்லவருங்கேள்வியுற்று
ஐம்பத்தாறுதேசத்து அரசர்களும்வாரார்கள்
ஓரணியாம்பச்சைவில்லு ஒன்றுநூறுயிரமாம்
இரண்டணியாம்பச்சைவில்லுஇரண்டாயிரம்சேனை
யானையேறுந்துரைகளெல்லாம் யானையேறிவந்தார்கள்
குதிரையேறுந்துரைஎல்லாம் குதிரையேறிவந்தார்கள்
ஒட்டையேறுந்துரைகளெல்லாம் ஒருகோடிவாரார்கள்
கண்டவிடங்களெல்லாம் கருமலைபோல்யானைகளாம்
பார்த்தவிடங்களெல்லாம் பருவதம்போல்தோணிகள்
கண்கொள்ளாகடுஞ்சேனை மண்கொள்ளாமகாதனங்கள்
ஏகமாய்த்திரண்டு யெல்லோரும்வாரார்கள்
பூமியதிருதங்கே பூலோகம்நெக்கிடவே
வாரார்கள்ராஜாக்கள் மகம்மேருகுலுங்கிடவே
பிள்ளையார்கோவில் ஓரமாய்வாரார்கள்
காளையருச்சுனனார் கண்டானே துரைகள்தன்னை
அச்சுதானந்த ரையரே நீர்கேளும்
இத்தண்டராஜாக்கள் இச்சையுடன்வாரார்கள்
பவளக்கொடியாளை பணிமாலைசூட்டுதற்கு
அனந்தங்கோடிராஜாக்கள் ஆசையுடன்வாரார்கள்
மாயன்தயவாலேநான் மணமாலைசூட்டினால்
இத்தண்டராஜாக்கள் இஞ்சிதின்றகுரங்காவார்
ஏக்கத்துப்போவாரே இருந்தவிடஞ்சொல்லாதே

என்றுநகைத்தவரும் எல்லோருடன்நடந்தார்
பார்ப்பான்வருகிறதைப் பார்த்தார் துரைகளெல்லாம்
ஈழக்கிழவனிவன் ஏதுக்குவாரான்காண்
தோலும்நரம்புகளும் தொங்குதுகிழவனுக்கு
அங்கம்சதைகளெல்லாம் ஆடுதுகிழவனுக்கு
இந்தக்கிழவன் ஏதுக்குவாரான்காண்
என்றுசிரித்தார்கள் இயலானராஜாக்கள்
கோவிந்தாவென்று கொற்றவனும்கீழ்விழுந்தான்
தள்ளாடித்தடியூன்றி தான்வருவான்மெள்ளமெள்ள
கொக்கென்றிரும்புவான் கோழைவந்துமாரடைக்க
வப்புவாய்கொட்டிவர வாய்நீருசொள்ளொழுக
தூக்கியடிவைப்பாராம் சுழன்றுவிழுவாராம்
எடுத்தடிவைப்பாராம் இடறிவிழுவாராம்
அறுகம்புல்தட்டினல் அறுபதடிவிழுவாராம்
மூங்கில்வேர்தட்டினல் மூப்பதிடம்விழுவார்
இப்படியாக இருக்கின்றவேளையிலே
இவனைக்-காணுதேயல்லோ கலங்கிருள்பவளகன்னி
நெடுநாள்தவமிருந்து நித்திரையும்வாராமல்
கண்கெட்டபாப்பானைக் கலியாணம்பண்ணவென்று
மாலையிடத்தேடியே மயங்குகிருள்மங்கையரும்
காணுதேதேடியல்லோ கலங்குகிருளென்றுசொல்லி
பரியாசம்பண்ணியே பலபேரும்போய்நடந்தார்
சேராம்பூராஜாக்கள் துரைகளுடபந்தலிலே
வாகனங்கள்விட்டிறங்கி வந்தமர்ந்தார்மன்னர்களும்
மணக்கோலப்பந்தலிலே மன்னவரும்வந்தமர்ந்தார்
ஆரியகிழவனும் அர்ச்சுனனும்வந்தமர்ந்தார்

பவளக்கோடியாளை ஸ்நானஞ் செய்வித்து
ஆபரணங்களை அலங்கரித்தல்.

பங்கயஞ்சீர்கண்ணாள் பவளக்கொடியாளை
ஆயிரந்தாதிமார் ஆரணங்குமோடிவந்து

சலவைக்கல்மண்டபத்தில் தையலருமோடிவந்து
பூமணைமண்டபத்தில் பொற்கொடியைக்கூட்டிவந்து
தண்டையசைய சதங்கைதகுதியென
கொண்டையசைய குயில்வந்துகூத்தாட
வட்டமணைமேலே மாதரையிருக்கவைத்து
நல்லெண்ணை கொண்டுவந்து நலங்கிட்டார்பந்தலுக்கு
சம்பங்கியெண்ணெய்கொண்டு தடவிநலங்கிட்டார்கள்
குங்குமப்பூஎண்ணெய்கொண்டு கூந்தல்தனக்கிட்டார்
மூந்நூறுசுமங்கிலிகள் மூன்றுநலுங்கிட்டார்கள்
ஐந்நூறுசுமங்கிலிகள் ஐந்துநலங்கிட்டார்கள்
மங்களம்பாடியே மாதர்நலங்கிட்டார்கள்
சோபனங்கள்பாடியே தோழியர்நலங்குமிட்டார்
ஆலாத்திசுற்றியே அபிஷேகமாட்டலுற்றார்
மஞ்சனச்சாலையிலே மஞ்சனீராட்டிவைத்தார்
ஓட்டுமஞ்சள்பூசியே ஒளிபவளநீராட்டி
ஸ்நானங்கள்பண்ணியே தாமக்கருங்குழலாள்
நீர்காட்டிவூதியே நெருப்பில்தலைசாய்த்து
ஈரத்துகில்களைந்து இழைசேர்ந்தபட்டுடுத்தி
நனைந்ததுகில்களைந்து நாகரீகப்பட்டுடுத்தி
பாவாடைஉள்ளுடுத்தி பட்டாடைமேல்சாத்தி
ஆனந்தமாரியரை அலங்காரம்பண்ணலுற்றார்
பூவாழைஎண்ணெய்தொட்டு போதமயிர்கோதி
சீவியேசிக்கறுத்து சிமிழ்போலேகொண்டையிட்டு
வாரிமுடித்தார்கள் மாணிக்ககொண்டையிட்டார்
ஒவ்வோர்மயிர்களுக்கு எவ்வேழுபொன்னிதழாம்
பொன்னிதழும்விதமும் போதமுடித்தகொண்டை
சுத்திமுடித்துவைத்த கொண்டைவந்துதோளசைய
தட்டிமுடித்துவைத்த கொண்டைவந்துதானசைய
ஆயிரம்பொன்பெற்ற அன்பானசவுரிவைத்து
கொண்டைசடைபில்லை குப்பியலங்கரித்து
ஆண்மயிலும்பெண்மயிலும் அணிந்தாரழகுபெற

சந்திரபிறைசூரியபிறை சடைநாகந்தானணிந்தார்
நெற்றிக்குச்சுட்டிகட்டி நேர்விழிக்குமையெழுதி
கண்ணுக்குமையெழுதி கஸ்தூரிபொட்டுமிட்டார்
மூத்தானபொட்டுமிட்டு முன்னாலேதொங்கலிட்டார்
அன்னகொப்புவன்னகொப்பு அருகுசொருகுவாளி
மாணிக்கவாளி மயிர்கீழேகோதிவிட
கமலக்கல்வைடூரியங் காதிலணிந்தார்கள்
இருதலைப்பட்சிகளும் இசைந்தபட்டுப்பூச்சிகளும்
பக்கம்பகடிகளும் பச்சைக்கல்முருகுகளும்
முத்தணிந்தமூக்குத்தி நத்துமணிந்தார்கள்
ஒற்றைச்சரடுகளும் ஒருபுரமாம்பொற்சரிகை
முத்துச்சரப்பளியாம் மோகனமாலைகளாம்
வட்டச்சரப்பளியாம் வராகன்பூமாலைகளாம்
கொத்துச்சரப்பளியாம் கோர்த்தமணித்தாவடமாம்
சந்திராரங்கிள்ளட்டிகை தரித்தார்களப்போது
ரவையட்டிகைதனையும தடுக்கழுத்திற்றான்தரித்து
தோள்வந்திகைவந்தி தொடுத்தார்கள்கைவளையல்
கடகஞ்சரிபவளங் கைநிறைந்தபொன்வளையல்
உத்திரசஞ்சமது போட்டார்களுந்தமிக்கு
எட்டுவிரலுக்கும் இசைந்தகணையாழி
பத்துவிரலுக்கும் பதிந்தகணையாழி
அரைக்கிசைந்தஒட்டியாணம் அணிந்தாரிடைதனிலே
தண்டைகொலுசுடனே சதங்கையும்பாடகமாய்
காலாழிகல்லணையாம் பீலாழிபில்லணையாம்
அஷ்டாபரணமெல்லாம் அலங்கரித்தாரந்நேரம்
பட்டுப்பளபளென்ன பாடகக்காலசைய
முத்துமினுமினென்ன முந்தாணிபொன்னுதிர
திருநீற்றுக்காப்பு திருச்சாந்துபொட்டுமிட்டார்
அஞ்சனக்கண்ணுக்கு அழகாகமையுமிட்டார்
மல்லிகைமாலை மாதவளின்கழுத்திலிட்டார்
சந்தனமும்பன்னீருஞ் சாந்துசவ்வாதுகளும்

குங்குமமும்பன்னீருங் குழைத்தல்லோபூசினர்
பங்கயஞ்சீர்கண்ணள் பவளக்கொடியாளும்
அப்போ-ஆரை நினைத்தாள் அளவற்றசிந்தையிலே
ஆலவாய்ச்சொக்கரை அடிபணிந்துதெண்டனிட்டு
மாயன்பெருமாளை மனதிலேதானிந்தாள்
சுவாமிபெருமாளே துணைவாருமெந்தனுக்கு
பரமசிவனருளால் பார்வதிகிருபையினல்
பவளக்கொடிமேல்பிறந்த பதிவிரதைமெய்யானல்
ஆதிசிவன்பூமாலை அனுப்புங்களெந்தனுக்கு
ஈஸ்வரியாள்பூமாலை வரவேணுமெந்தனுக்கு
கோதைபவளக்கொடியுங் கும்பிட்டுநின்றுளே
சிவனர்மனமகிழ்ந்து சிந்தைமிகக்குளிர்ந்து
ஆலவாய்ச்சொக்கரும் அம்மன்மீனுட்சியும்
திருமாலைசந்தனமும் திருநீறுந்தானெடுத்து
அணங்குஅரண்மனைக்கு அந்தாமாயனுப்பிவிட்டார்
வந்தபூமாலையை மாதவளுங்கைப்பிடித்தாள்
மாணிக்கத்தேர்தனிலே வந்துமெள்ளஏறினள்
ஏறினபோதே எடுத்தார்நெடுங்குடைகள்
சுத்திகுடைபிடித்துச் சூரியனைக்காணுமல்
பக்கங்குடைபிடித்தார் பகவானைக்காணுமல்
கவிந்துகுடைபிடித்தார் கதிரோனைக்காணுமல்
முந்நூறுதேங்காயை மூடியோடேசூரையிட்டார்
ஐந்நூறுதேங்காயை அடித்தொடைத்துசூரையிட்டார்
முழங்குதுவாத்தியங்கள் மும்மண்டலமசைய
அடிபடுதுபேரிகை அந்நகர்தத்தளிக்க
பேரிகைசத்தம் பெரிதாய்முழங்குதங்கே
ஐங்காதவழிதூரம் அடிபடுதுபேரிகையும்
நாற்காதவழிதூரம் நாகசின்னந்தான்கேட்க
முக்காதவழிதூரம் மூரசுமுழங்கிவர
மச்சுரதமேறி வாராளாம்மாதுகன்னி
அங்கிருந்தராஜாக்கள் அனைவோரும்பார்த்துரைப்பார்

ஒருவர்க்கொருவர் உகந்துகந்துபேசுகிறார்
நீறுபூத்தோர்நெருப்பை ஊதிப்பார்த்தநிறம்போலே
ஆயிரம்மின்னலிலே சோதிமின்னல்மின்னுப்போல்
தங்கத்தைக்காய்ச்சியே தரையிலேவிட்டாற்போல்
ஈயத்தைக்காய்ச்சியே யிலையிலேவிட்டாற்போல்
பொன்னையுருக்கிப் பூமியிலேவிட்டாற்போல்
சந்திரனைப்போலாகத் தளுப்புகிறாள்தோகையரும்
சூரியனைப்போலாகத் துலங்குகிறாள்தோகையரும்
யார்க்கிவள்கிட்டுவ்ளோ அண்ணமாரேநாமறியோம்
எவர்க்குக்கிடைக்குமோ இந்தநல்லபாக்கியங்கள்
தாங்களேசொல்லியே தலையெடுத்துப்பார்த்திருந்தார்
ஆனந்தவாழ்மாரி அவள்தேர்வருகிறுது
பார்மன்னன்சபைநடுவே பவளக்கொடிதேர்வருது
அரசர்சபைநடுவே ஆரணங்குதேர்நிறுத்தி
எண்ணுதுமெண்ணுகிறாள் ஏலப்பசுங்கிளியாள்
ஆணுலழகுமன்னன் அர்ச்சுனராஜாவை
வடிவோடேவாருமென்று மன்னவனைச்சொன்னதில்லை
என்னவடிவாக இருக்கிறாரோஎன்றறியேன்
இவளைப்போல்மங்கை எங்குங்கிடையாதோ
நாட்டிலமையாதோ நாயகியாள்தன்போலே
என்றுமனதில் இசைந்துவழிபோனாரோ
தருமாபுரிக்கலவோ தானடந்துபோனாரோ
என்செய்வேன்ஈஸ்வரனே யேதுமறியேனே
கிழக்குமுகம்நோக்கிக் கிளிமொழியாள்பார்த்தாளே
பக்கத்தில்நின்றதொரு பாங்கியவளேதுசொல்வாள்
முத்துமுடிதரித்த முடிமன்னராஜாக்கள்
பவளமுடிதரித்த பாராளும்ராஜாக்கள்
அங்கவங்கங்கலிங்கம் அவந்தியாசூரம்மா
செல்வமாய்ப்பெண்பிறந்து சீரழியநாளாச்சோ
அருமையாய்ப்பெண்பிறந்து அம்பலமானீரோ
சிங்களங்கொங்கணம் தெங்கணராசரம்மா

மாளவஞ்சாலவ மாகதமச்சராஜரம்மா
இப்பக்குத்தாதிசொல்ல இளங்கொடியாள் தான்கேட்டு
தெற்குமுகமாகத் திரும்பினாள் ராஜாத்தி
பக்கமிருந்ததொரு பாங்கியவளேதுசொல்வாள்
வச்சிரமுடிதரித்த மந்திரிகள் ராஜரம்மா
அருணங்கிராடம் யவனங்குருகவ்வீரம்
குருகுகொல்லமசூரசேனம் கோசலஞ்சிந்துசீனல்
மண்டலத்தையாளுகின்ற மகாராஜராஜரம்மா
மாலைசுழற்றியே மன்னர்மேல்போடுமென்றார்
மேற்குமுகமாக மெல்லிதிரும்பிப்பார்த்தாள்
பல்லவம்பாஞ்சாலம் பப்பரங்காந்தாரம்
தேசத்தையாளுகிற தீரரிவர்களம்மா
மாலையைச்சுழற்றியே மன்னவர்மேல்போடுமம்மா
வடக்குமுகமாகத் திரும்பினாள்மாதுகன்னி
பக்கத்திருந்ததொரு பாங்கியவளேதுசொல்வாள்
துஷ்டர்தனையடக்குந் துரைகளிவர்களம்மா
வடதேசராஜாக்கள் மன்னவரிவர்களம்மா
எந்திழையேஉனழகுக் கேற்றபுருஷரம்மா
உன்-மனதுக்கிசைந்த மணவாளன்தானிருப்பான்
மாலைசுழற்றுமென்றார் மாதரிளங்கொடியை

பவளக்கோடியாள் அர்ச்சுனனை மாலைதரித்தல்.

பங்கயஞ்சீர்கண்ணாள் பவளக்கொடியாளும்
அப்போ-ஆரை நினைத்தாளே அளவற்றசிந்தையிலே
எவரை நினைத்தாளே எண்ணமற்றசிந்தையிலே
ஆகாயவாணிதுர்க்கை அம்மன்பிடாரிகளே
மஞ்சளழகிகளே மடிச்சேலைக்காரிகளே
பொங்கநயினாரே பொற்கொடியாண்டவனே
இல்லறத்துதேவதைக ளெல்லோருந்துணையிருங்கள்
ஆலலாய்ச்சொக்கரே அங்கயக்கண்மீனாட்சி
மதுரைமீனாட்சியம்மாள் வந்துதுணையிருங்கள்

என்னைப்பிறப்பித்த ஈஸ்வரரே துணையிருங்கள்
மாயன்பெருமாளே மங்கைநல்லாள்லட்சுமியே
ஆயன்பெருமாளென் னருகே துணையிருங்கள்
முப்பத்துமுக்கோடி முனிவரெல்லாங்காத்திருங்கள்
வதிஷ்டாருந்துதியும் மணிமாலைகாத்திருங்கள்
நான்- ஆகாயம்விட்டமாலை அருச்சுனனார்தன்கழுத்தில்
சுழட்டிவிட்டமாலையது சுரேந்திரன்மகன்கழுத்தில்
அருச்சுனனார்தன்கழுத்தில் அழகுமாலைவிழவேணும்
என்னவடிவாக இருக்கிறரோ நானறியேன்
சுவாமியைத்தானினைந்து சுழற்றினுள்மாலைதன்னை
விரலால்சுழற்றியே வீசினுள்மாலைதன்னை
சுழற்றிவிட்டமாலையது சுரர்லோகம்போகிறது
சூரியமண்டலத்தைச் சுத்தியுலாவுகுது
எதிர்ப்பட்டதேவர்களெல்லவரைப்பார்த்துவரும்
நாலுபக்கஞ்சூழ்ந்திருக்கும் ராஜர்களைச்சுற்றிவரும்
தேடியேபார்க்குதே தேர்விஜயனர்ச்சுனரை
ஆரியனைப்போலாக இருந்ததோரர்ச்சுனர்மேல்
வாள்விஜயன்தோள்மேலே வந்துவிழுந்தது
வேதியன்தன்கழுத்தில் விழுந்ததுபூமாலை
தேவதுந்துமிமுழங்கத் தேவர்பூமாரிபெய்ய
ஆகாயபேரிகைதான் அடிபடுதுதிமிதிமென்று
பூவருஷந்தான்பொழிந்தார் பொன்னுலகுதேவர்வர்
ஆலாட்சிமணிகளும் அடித்ததுவோசையுடன்
சேராம்புராஜாக்கள் தீரர்களும்வந்துவிட்டார்
அத்தண்டராஜாக்கள் மந்திரிகள்வந்திருக்க
விருதனுடதோள்மேலே விழுந்ததென்னபாவமிது
வேதியன்கழுத்திலே விழுந்ததென்னபாவமிது
ஆரியனைமாலையிடப் பிறந்தாளோ ஆரணங்கு
வேதியற்குமாலையிட விதித்ததோ என்மகளே
செல்வமாய்ப்பெண்பிறந்து சீரழியநாளாச்சோ
அருமையாய்ப்பெண்பிறந்து அம்பலமானீரோ

பிச்சையிறந்துண்ணும் பிராமணர்க்குப்பெண்டாகி
கல்லெடுப்பரிசிக்குக் காத்திருக்கநாளாச்சோ
பாத்தாளியரிசிக்குப் பார்த்திருக்கநாளாச்சோ
இந்தக்கிழவனுக்கா இதுக்காநான்பெண்வளர்த்தேன்
குருட்டுக்கிழவனுக்கோ கோடிநாள்தபசுபண்ணேன்
நொண்டிக்கிழவனுக்கோ நோக்கித்தபசுபண்ணேன்
சண்டிக்கிழவனுக்கோ தனிமாலைசூட்டிவிட்டாள்
இந்தக்கிழவனுக்கு எவர்தான்வழிவிட்டார்கள்
பாவிகிழவனிவன் பந்தலுக்குள்ளேன்வந்தான்
ஆர்காண்பிராமணரே அழகுமாலைதாருமென்றார்
பெண்ணரசுதான்போட்ட பூமாலைதாருமென்றார்
அப்போதுவாள்விஜயன் ஆரியனுமேதுசொல்வான்
பங்கயஞ்சீர்கண்ணாள் பவளக்கொடியாட்கு
மாலைதரிக்கிறார் மன்னவர்களென்றுசொல்லி
பிச்சைக்குவந்தவிடத்தில் பெரும்பாம்புசுற்றியது
வேணுமென்றுவந்தேனோ மெல்லியரைமாலையிட
பிச்சைக்குவந்தவிடத்தில் பெரும்பாம்புசுற்றியது
இவளைநான்பெண்டுவைத்து என்னசெய்யப்போறேன்
தள்ளாதகிழவனுக்குத் தையலருமேன்காணும்
மாளுங்கிழவனுக்கு மாதர்களேன்காணும்
எனக்கிட்டமாலைதனை எடுத்துத்தரித்துகொள்ளும்
மாலைதரித்துக்கொண்டு மாங்கியஞ்சூட்டுகிறோம்
உங்களுக்குப்பெண்டிருக்க உலகத்திலுற்றபடி
வளர்த்துயெடுத்தீர்கள் மாலைதரித்திடுங்கள்
இந்தாருமாலையென்று ஈய்ந்தார்பிராமணரும்
அந்தசமயத்தில் ஆரணங்குதான்கேட்டு
பங்கயஞ்சீர்கண்ணாள் பவளக்கொடியோடிவந்து
என்னையும்பெற்றெடுத்த இயலானஐயாவே
மாளாக்கிழவனுடன் வார்த்தைகளேனுங்களுக்கு
என்தலைவிதிப்பயனை எவருமறியார்கள்
ஆதிசிவன்தன்னெழுத்தை ஆருமறியார்கள்

எல்லார் தலையிலும் ஈரெழுத்துஓரெழுத்து
பாவிதலையிலந்தப் பார்ப்பானை எழுதிவைத்தான்
கதியைத்துலைக்கவல்லேன் காவேரியை நீந்தவல்லேன்
என்விதியைத் துலைக்குகைக்கு வெல்லவகையறியேன்
அன்றெழுதுமாதிசிவன் அழித்தெழுதப்போரதில்லை
தலையிலெழுதியதைத் தள்ளிவைக்கப்போரதில்லை
தலையிலெழுதினது தவருதொருக்காலும்
ஒருவனுக்குமாலையிட்டு உலகத்தார்வாழ்வார்கள்
இருவருக்குப்பெண்டாக இருப்பேனோஎன்தகப்பா
வாருமையாவென்று வலதுகையைத்தான்பிடித்து
மாணிக்கவாசலிலே மறையவனைக்கொண்டுசென்ருள்
அந்தச்சமயத்திலே ஆயன்பெருமாளும்
செந்தும்பிபோலே ஸ்ரீராமர்வடிவெடுத்தார்
ஜிவ்வென்றுதான்பறந்து தேன்மொழிதன்செவியில்
வந்துநுழைந்தார் மயிலனையாள்தன்செவியில்
அஞ்சாதேயஞ்சாதே அருந்தங்கையஞ்சாதே
ஆணலழகுமன்னன் அர்ச்சுனராஜன்காண்
என்றுவுரைத்தார் இளங்கொடியாள்தன்செவியில்
அருஞ்செவியில்தானுரைத்து ஆயரும்போய்நடந்தார்
பங்கயஞ்சீர்கண்ணுள் பவளக்கொடியாளும்
வேடத்தைமாற்றி விஜயாவடிவெடென்ருள்
அர்ச்சுனர்வடிவுகளை அழகாகக்காட்டுமென்ருள்

## அர்ச்சுனராஜன் கிழப்பிராமணன் வடிவை விட்டுத் தன் சுயரூபமெடுத்தல்.

சேராம்புராஜாக்கள் சிந்தைகுளிந்துவிட
கண்டோர்பயந்துவிட கால்கைகள்தடுமாற
சிந்தைகுளிர்ந்துவிட தேர்விஜயன்வடிவெடுத்தான்
அங்கங்குளிந்துவிட அர்ச்சுனன்வடிவெடுத்தான்
முன்னழகும்பின்னழகும் முதுகிலேமச்சரேகை
பல்லிலேபரசவீணை பாதத்திற்செந்தாமரை

நாவிலே நட்சத்திரம் நயனவிழிசோதிவிட
மாயன் தயவாலே வாள்விஜயன்ரூபமானுன்
ஆயன் தயவாலே அர்ச்சுனன்ரூபமானுன்
கண்டவர்கள் தான்மயங்க காண்டீபன்வடிவெடுத்தான்
பார்த்தவர் தான்மயங்கப் பார்த்தீபன்வடிவெடுத்தான்
ஐந்துபிராயம் அறியாப்பிராயமென்றும்
பவளக்கொடியாள்மாது பார்த்துமகிழ்ந்துவிட்டாள்
சோராம்புராஜாக்கள் தேர்விஜயன் தன்னைக்கண்டு
கண்டுமகிழ்ந்தார்கள் காண்டீபனர்ச்சுனரை
பார்த்துமகிழ்ந்தார்கள் பார்த்தீபனர்ச்சுனரை
விஜயனழகுகண்டு மெத்தமனமகிழ்ந்தார்
மகள் தனக்கேத்ததொரு மணவாளன்வந்தீரே
அர்ச்சுனரைப்போலாக வாராமல் ஆணழகா
பிராமணவடிவாகப் பெண்கொள்ளவந்தீரோ
வந்தெனைப்பெண்கேட்டால் தந்திடோமென்றுரேமோ
ஈளக்கிழவனைப்போல் ஏங்காண்வடிவெடுத்தீர்
என்றுமனமகிழ்ந்தார் இயலான ராஜாக்கள்
அந்தச்சமயத்தில் அங்குவந்த துரைகளெல்லாம்
பங்கயஞ்சீர்கண்ணுள் பவளக்கொடிமாது
ஆரியனைமாலையிட்டு அழைத்தேகக்கண்டவர்கள்
இஞ்சிதின்றகுரங்கதுபோல் ஏக்கமுற்றுர்மன்னவர்கள்
விருத்தக்கிழவனுக்கு வேதியற்குவாய்த்ததென்று
இங்கிருந்தென்னபலன் என்றெண்ணிராஜாக்கள்
அவரவர்கள்மாளிகைக்கு அனைவோரும்போகலுற்றுர்
சோராம்புராஜாக்கள் தீரவரேதுசெய்தார்
வில்விஜயனர்ச்சுனனை வேந்தர்வரவழைத்து
நல்லவேளைதப்பாமல் ராகுகாலம்வாராமல்
வர்ச்சியங்கள் தியர்ச்சியங்கள் வாராதவேளைகண்டு
சேஷைமனைபோட்டுச் சீரானபந்தலிலே
செந்நெல்லரிசிகொண்டு தினகரற்கும்பொங்கலிட்டு
மாப்பிள்ளையும்பெண்ணையும் மனைமேலிருக்கவைத்து

முந்நூறுசுமங்கிலிகள் முகந்துமுளைதெளிக்க
ஐந்நூறுசுமங்கலிகள் அள்ளிமுளைதெளிக்க
சாலுங்கரகமும் சந்திரற்குமுன்பாக
அம்மிவலமாக அரசாணிமுன்பாக
வேதப்பிராமணர்கள் வேதங்களோதிவர
ஓமப்புகையெரிய உடனுகவேதஞ்சொல்ல
காப்பரிசிதான்வழங்கிக் கங்கணமுங்கட்டினர்
சேராப்புராஜாக்கள் நீரெழுந்திருந்து
மாவுங்கழுநூலும் மஞ்சளுடநெல்விதையும்
தாலியுங்கூறையுந் தான்கொண்டுவந்தார்கள்
குருகுலத்துராஜாவே குந்திமகனுரே
மந்தராச்சந்திரியரும் பெற்றமகனுரே
பங்கயஞ்சீர்கண்ணுள் பவளக்கொடியாளை
தந்தேனுனக்கீந்தேன் தாரைநீர்பிடியுமென்றூர்
காலுக்குமிஞ்சியிட்டார் கைக்குகணையாழியிட்டார்
தையலரைத்தான்கொடுத்து தாரைநீர்வார்த்தார்கள்
ஏந்திழையைத்தான்கொடுத்து இஷ்டநீர்வார்த்தவரும்
மாலைதரித்து மணமாலைசூட்டுமென்றூர்
அப்போதருச்சுனனு மாயனைத்தானினைந்து
தாலியைக்கட்டினன் தேர்விசயனருச்சுனனும்
பிர்மமுடிமூன்றுமுடி போட்டானேவாள்விஜையன்
காப்பரசிதான்வழங்கிக் கங்கணமுந்தானவிழ்த்தார்
அம்மிமிதித்து அரசாணிசுற்றிவந்து
பெரியோர்களெல்லோரும் பெருக்கமனமகிழ்ந்து
மன்னவனுந்தேவியுமாய் மாளிகையுட்புகுந்து
தங்கத்தின்மேடைமேல் தனஞ்சயனும்வீற்றிருந்தான்
ஐம்பதுபேரு மவர்களுடதேவிமாரும்
பொங்கிமனங்குளிர்ந்து பொற்கொடிமாதரெல்லாம்
தனஞ்செயற்கும்வேதியற்கும் சமமாகச்சேவையிட்டு
பாலும்பழமும் பரிவுடனேதான்கொடுத்தார்
பாலமிர்தமுண்டு பசியாறித்தானிருந்தார்

அப்பால்வந்தமனிதருக்கும் மகாபெரியசேனைகட்கும்
அத்தரும்பன்னீரும் அழகாகத்தான்தெளித்து
சந்தனமுங்கெந்தபொடி தாம்பூலந்தான்வழங்கி
பாரிசாதபுட்பம் பரிமளங்கள்தன்னுடனே
பூரிவெகுதானங் கொடுத்தார்பொரியோர்க்கு
தட்சணைதாம்பூலம் தார்வேந்தர்தான்கொடுத்தார்
வந்தமனிதர் மகாசேனையெல்லவர்க்கும்
கைக்குச்சலங்கொடுத்தார் கட்டழகரெல்லவர்க்கும்
பந்தியமர்த்தி பரிமாறிபோஜனங்கள்
பொரித்தபொரிக்கரியும் பொன்போல்பருப்புகளும்
பத்துவகைபச்சடியும் பசியாறியாவர்களும்
புத்துருக்குநெய்யுமாய்ப் போதமிகப்படைத்து
முப்பழஞ்சர்க்கரையும் அப்பளமுந்தான்படைத்து
ஆயாசந்தீரவே பாயாசந்தான்கொடுத்து
போஜனங்களுண்டு புகழ்வேந்தாயாவருந்தான்
கைகாலலம்பி கனமிகுந்தமன்னரெல்லாம்
வேடிக்கையாக வீற்றிருந்தார்பந்தலிலே
அப்போ-வெட்டியபாக்கும் மிகுமணக்குவெற்றிலையும்
சொர்னபுஷ்பமாலைகளும் சோடுசகலாத்துகளும்
வைத்துக்கொடுத்தார்கள் வரிசைவெகுமானம்
ஒட்டைகுதிரைகள் உத்தமர்கள்மொய்யெழுதி
உத்தமரெல்லோரும் உள்ளங்களிகூர்ந்து
காண்டீபனருச்சுனனும் கன்னியவள்பைங்கிளியும்
ஊர்கோலமானபின்பு உத்தமனுந்தேவியும்
பள்ளியறைமண்டபத்தில்பாங்குடனேபோகலுற்றார்
வந்திருந்தராஜாக்கள் மன்னவர்களெல்லோரும்
அவரவர்கள்ராச்சியத்தை ஆளுகைக்குப்போனார்கள்
வாள்விஜையன்கோமானும் மருவுண்டுதானிருந்தான்
பதினாறுநாளாச்சு பார்த்தன்வந்துமாலையிட்டு
இப்படியாக இருக்கின்றவேளையிலே
அல்லிப்பெருமாளும் ஆரணங்கேதுசெய்தாள்

மகுடத்துரைச்சியரும் வாழ்வரசியல்லியரும்
கொச்சித்துரைச்சி கொடிமதுரையல்லியரும்.
மச்சித்துரைச்சி வடமதுரையல்லியரும்
காலையில்தானெழுந்து கனிவாயைச்சுத்திபண்ணி
பாளைகொண்டுபல்விளக்கி ஓலைகொண்டுநாவழித்து
பொய்கையில்போயிரங்கி பொற்கிளியுமப்போது
ஈரத்துகில்களைந்து இழைசேர்ந்தபட்டுடுத்தி
நனைந்ததுகில்களைந்து நாகரீகபட்டுடுத்தி
சொக்காருளென்று திருநீற்றுக்காப்புமிட்டு
மதுரைமீனாட்சியரை மாதாவைத்தானினைந்து
அரன்பூசையரிபூசை அநுஷ்டானம்பண்ணியவள்
இங்கிதமானதொரு அலங்காரம்பண்ணலுற்றாள்
சல்லடந்தான்தொடுத்து தட்டிபிகுவெடுத்து
தட்டியின்மேலொட்டியாணம் சாதாவரிந்துகட்டி
சல்லடத்தின்மேலேயவள் தாமரைபூச்சுங்குவிட்டு
சங்குவைத்தாள்வெள்ளை சாதிலிங்கபொட்டுவைத்தாள்
வலப்புறத்துசுங்கிலே மாகாளியட்சாமும்
தென்புரத்துசுங்கிலே தெய்வகன்னியட்சாமும்
முத்துகபாயணிந்து முதுகெல்லாமங்கிபோட்டாள்
வச்சிரகபாயணிந்தாள் மார்நிறைய அங்கிபோட்டாள்
கிரீடபுஜகீர்த்தி கீர்த்திதானுறவணிந்தாள்
அங்கிகபாயணிந்தாள் அல்லிமலர்நாயகமும்
கேடயவல்லயமும் கிளிமொழியாள்தான்தரித்தாள்
மந்திரவாளெடுத்து வலதுகையில்தான்பிடித்தாள்
பதினெட்டு ஆயுதமும் பத்தினியாள்தான்தரித்தாள்
முத்துமிதியடியை தொட்டுநடந்துவந்து
வசந்தமணிமண்டபத்தில் மாதவளும்வந்தமர்ந்தாள்
கொலுகூடமண்டபத்தில்கொம்பனையும்வந்தமர்ந்தாள்
மந்திரிபவளசேனை மயிலனையும்வந்தமர்ந்தாள்
தாதிகளுந்தோழிகளுந் தையலரைச்சூழ்ந்தார்கள்
செங்கமலத்தாதி சேனாபதிபவளசேனை

வெண்சாமரைக்கவுரி வீசியவள்பக்கம்நின்ருள்
ஆலவட்டஞ்சாமரை அருங்கிளிமார்வீசிவர
மல்லிகைவிசிரிகளும் மயில்விசிரிதான்வீச
செண்டாடிப்பந்தாடி தேன்மொழிமார்சூழ்ந்துவர
கேளிக்கைபார்த்து இருக்கிருள்கொம்பனையாள்
சங்கீதம்பார்த்து இருக்கிருள்தையனல்லாள்
முத்துவிற்றவர்த்தகரும் வேனகணக்கர்களும்
கணக்குகட்டுதானெடுத்து கடுகவேவாரார்கள்
கொம்பனையாள்முன்னேவந்து கும்பிட்டுதெண்டனிட
கைகட்டிநின்ருர்கள் கட்டழகரெல்லவரும்
மகுடத்துரைச்சியவள் வாழ்வரசியேதுசொல்வாள்
முத்துகொடுத்ததும் விற்றகணக்குகளும்
அண்ணுடங்கணக்குகளென் அம்பலத்தேவாராமல்
எட்டுநாள்கணக்குகளும் எழுதிமுடியுமென்ருள்
எட்டுநாள்வாராமல் இருந்தவயணமென்ன
ஒருமுத்துகுறைந்தாலே உயிர்க்கழுவில்போட்டிடுவே
இருமுத்துகுறைந்தாலே ஈரல்பிளந்திடுவேன்
வாயால்பொறிபறக்க வலதுகண்ணுலனல்வீச
செந்தலைநாகம்போல் சீறியெறிபரந்தாள்
கண்ணுல்பொறிபறக்க காதங்களால்வீச
வாயாற்பொறிபறக்க வலதுகண்ணுலனல்வீச
ஈச்சம்பழம்போ லிருகண்ணுந்தான்சிவக்க
கோவைப்பழம்போலே கொள்ளிகொண்டுவீசுதுபார்
கண்டச்சதைகளைக் கடித்துமிழ்ந்தாளல்லியரும்
கணக்குக்கதிகாரி கைகால்நடுங்குவிட்டார்
எட்டுநாள்கணக்குகளும் எழுதிமுடிக்கலுற்ருர்
கணக்குமேல்கண்ணு யிருக்கிருள்கன்னியரும்
ஆராலுங்கூடியே ஆற்றவொண்ணுக்கோபமப்பா
அந்தச்சமயத்தில் அங்குவாரான்புலந்திரனும்
வீதிவிலாசமது விளையாடிவேல்வேந்தன்
தங்கத்தேரோட்டியே தனஞ்செயன்புத்திரனும்

பெம்பொன்தேரோட்டியே சித்திரவீதியெல்லாம்
முத்தின்தேரோட்டியே முடிமன்னர்வீதியெல்லாம்
மாணிக்கத்தேரோட்டி மதுரைத்தெருவீதியெல்லாம்
தண்டையசையவே சதங்கைத்தகதகென்ன
அரைவடமுங்கிண்கிணியும் அசைந்துநிழல்காட்ட
கணையாழிசோதியிட கண்டசரங்கள்மின்ன
வட்டமிற்றநெற்றியிலே வயிரதட்டிநின்றிலங்க
சருவாபரணங்களும் தாழ்வடமுந்தானசைய
சிங்காரமிதியடியாம் சிங்காணிவில்லுகளும்
பக்கமிருபுறமும் பட்டாசுழட்டிவர
கத்திகட்டுமன்னரெல்லாம் கைகட்டியேந்திவர
ஈட்டிபிடிமன்னரெல்லாம் இருபுரமுஞ்சூழ்ந்துவர
பொற்பரிசுமேலாகம் பிள்ளைவருகுதுபார்
வெகுசனங்கள்கூடி நெருங்கிடக்கொள்ளாமல்
அங்கேநெருங்கிவந்த அருமகனைக்கண்டுவிட்டாள்
அப்பாவருக ஆணழகாபுத்திரனே
வருகவருகவென் வாழ்வேவருகவென்முள்
திருவரும்பூவே தேனேவருகவென்முள்
கண்ணின்மணியேயே கருவிளமே நீவருக
கண்மூன்றுடைய கைலாசநாதரே
சொக்கர்திருவாசலுக்குத் தூண்டாமணிவிளக்கே
வைகைக்கரைதனக்கு மண்சுமந்தசொக்கரே
கப்பலுஞ்சோங்குங் கரைதுரையுள்ளவனே
அப்பாவருகவென்று ஆவலுடன்முத்தமிட்டாள்
வாரியெடுத்தாளே மதிமுகத்தில்முத்தமிட்டாள்
மைந்தனையேந்தி மடியிலேவைத்திருந்தாள்
போரஞ்சாமன்னன் புலந்திரனுங்கூறுவான்
போதும்போதுமென்னுச்சி பிள்ளையைகொஞ்சினது
மைந்தரைக்கொஞ்சினது போதுமம்மாமாதாவே
தங்கத்தேர்தந்தாரே தனஞ்செயனரென்பாட்டன்
செம்பொன்தேர்தந்தாரே திகழ்வேந்தரென்மாமன்

மாணிக்கத்தேர்தந்தார் வளநாட்டுராசாக்கள்
முத்துத்தேர்தந்தார்கள் முடிபுனைந்தராசாக்கள்
சித்திரவீதிமுதல் தெருக்கள்பதினாயிரமும்
மதுரைப்பெருந்தெருவும் மட்டில்லாவீதிகளும்
பவளத்தேரோட்டவென்று பத்தினியேநான்கேட்க
அவ்வார்த்தைகேட்டாளே அல்லிப்பெருமாளும்
அருச்சுனன்போனதொரு தேதியைப்பார்க்கலுற்ருள்
பதினாறுநாளாச்சு பார்த்திபன்போனதுவாம்
மூன்றுநாளாறு பொழுதிலேவாரமென்று
மைந்தன்மேலாணையிட்டு மாபாவிபோனானே
ஆணைமறந்தவனும் ஆர்மேலேஆசைகொண்டான்
எங்கேஉல்லாசமாக இருக்கிருரோவாள்விஜயன்
எமலோகம்போனாலும் இட்டுவந்துசங்கரிப்பேன்
பாதாளம்போனாலும் பார்த்திபனைக்கொன்றிடுவேன்
ஆகாயம்போனாலும் அதம்பண்ணிபோட்டிடுவேன்
என்று-சீறியேகண்சிவந்து சிங்கத்தின்குட்டிபோல்
கையைக்கடித்து கன்னியருந்தானுமிழ்ந்தாள்
உதிரமுஞ்சதையுமாய் உமிழ்ந்தாளேபூமியிலே
காட்டானைபோலாதகத் தேன்மொழியாளல்லியரும்
சிங்கத்தைப்போலாகத் தேன்மொழியாளல்லியரும்
உருட்டினாளிருகண்ணை ஒதுங்குகிருர்ராஜாக்கள்
ஆக்கரித்துப்பற்கடித்து அதட்டியெழுந்தாளே
ஆருலுங்கூடியே ஆற்றவொண்ணக்கோபமுடன்
பாண்டிவளநாடாளும் பஸ்பமாய்ப்பறக்குது
பகல்வத்திபோலாக எரியுதேயிருகண்ணும்
மைந்தனையிடுக்கி வளநாட்டாள்வாராளே
அறுபதுபேரெழுந்து அந்நேரமோடிவந்து
அம்மா-எந்தநாடென்று அறிவாயிளங்கொடியும்
எங்கேயிருந்தாலு மிட்டுவாரோமர்ச்சுனரை
இங்கேயிருமம்மா இராஜகுலநாயகமே
என்றதுகேட்டுமவ ளேதுசொல்வாளல்லியரும்

எனக்கெதிர்சொல்லாதே என்னுணையாவே
அரண்மனைதிறவுகோல் அண்ணரிடகைகொடுத்தாள்

## அல்லிஅரசாணி அருச்சுனன்மேல் படையெடுத்தது.

ஆரடாமந்திரியே அறிவுள்ளஐயாவே
ஆனைசேனைபரிவாரம் அடங்கலும்பயணமென்முள்
காலாளுஞ்சேனைகளுங் கடுகவேபயனமென்முள்
தேர்கொண்டுவாருமென்முள் துரிதமாய்ப்போகவென
சொன்னபொழுதிலே துரிதமாய்வந்தார்கள்
சித்திரத்தேர்தன்னைச் சோடித்தாரழகுபெற
ஆறுவண்டி நூறுசட்ட மழகானகுத்துக்கால்
குத்துக்கால்சொப்பனிட்டு கொங்கைதிரைவளைந்து
கும்பகலசமுங் குடைகளலங்கரித்து
அம்புருச்சீலையது அலங்காரம்பண்ணிஞர்கள்
பாராசாரிபுரவியொன்று பஞ்சகலியாணியொன்று
தேசியென்னும்புரவி தீவரத்திங்குதிரையொன்று
நாலுபுரவிகளை நலமாயலங்கரித்து
குதிரைகளைகொண்டுவந்துகொப்பெனவேகட்டிஞர்கள்
அலங்கரித்தோம்தேரையென்று அடிபணிந்துநின்முர்
பயணம்பயணமென்று பயணபேரிதானடித்தார்
இப்போதுபயணமென்று இயல்பாகத்தானடந்தார்
கானலுக்குத்தானெடுத்தார் கறுப்புநல்லகூடாரம்
வெய்யலுக்குத்தானெடுத்தார் வெள்ளைநல்லகூடாரம்
பனிகளுக்குத்தானெடுத்தார் பச்சைநல்லகூடாரம்
யானையின்மேல்டோாவுங் குதிரையின்மேல்டங்காவும்
கறுப்புநிசான்செகப்புநிசான் கலந்துபிடித்தார்கள்
யானைகளாறுகோடி அசுவங்களேழுகோடி
தேர்களொருகோடி தேரணிகள்முக்கோடி
அமரதருஞ்சமரதரும் ஆஸ்தானமாகதரும்
கலிங்கர்தெலுங்கர்களும் கன்னடியமராட்டர்களும்
ஈழத்துவங்கணரு மிளநாட்டுச்சோனகரும்

ஒளிவானபாகுகளும் ஒட்டியருஞ்சோனகரும்
சட்டைகழட்டாத சாமர்த்தியரானவரும்
குப்பாயம்வாங்காத குனமன்னரானவரும்
மட்டில்லாச்சேனைகளும் மன்னர்பயணமானர்
பட்டயமுஞ்சூரிகளும் பாங்கானகவுரிகளும்
நிமிசாபெரியலகு நேரிசமாம்பெரியகத்தி
கூலிசமுஞ்சூலிசமும் குண்டுதுப்பாக்கிகளும்
சக்கரமும்வேலுந் தடியுப்பெருமுலக்கை
உண்டைவில்லுசுண்டைவில்லு சிங்காணிபூச்சிவில்லு
எண்ணன்கு ஆயுதமு மெடுத்தரையிற்கட்டினர்கள்
பாளயங்களுள்ளதெல்லாம் பயணங்களாச்சுதம்மா
ஆனையின்மேல்பேரிகை அடிபடுதுகுமுகுமென்று
ஒட்டையின்மேல்நகபத்து ஓசைகிளப்புகுது
அண்டங்கிடுகிடென்ன ஆகாசம்நெக்குவிட
பூமிகிடுகிடென்ன பூலோகம்நெக்குவிட
அடங்காதகோபமுட னல்லிமலர்நாயகியாள்
அலங்கரித்ததேர்மேலே ஆரணங்கேறினளே
இடுக்கியபிள்ளையுட னேறினள்தேர்மேலே
மந்திரிபவளசேனை மங்கையவள்தானேறி
தேரைத்திருப்பினள் துரிதமாயட்சணமே
சுற்றிக்குடைபிடித்தார் சூரியனைத்தான்மறைக்க
பக்கங்குடைபிடித்தார் பகவானைத்தான்மறைக்க
கவிந்துகுடைபிடித்தார் கதிரோனைத்தான்மறைக்க
அடிபடுதுபேரிகை அந்நகரந்தானதிர
எட்டுத்திசைநடுங்க இளங்கொடியாள்தான்வாராள்
இரதகஜதுரகதமுடன் நாலுவகைசேனைகளும்
மாவணியும்மரவணியும் மற்றுமுள்ளராஜபலன்
வருகுதுவெகுஜனங்கள் மண்விண்ணுங்கொள்ளாது
செந்தூளெழும்புகுது சூரியனைகப்புதங்கே
கருந்தூளெழும்புகுது கதிரோனைக்கப்புதங்கே
அண்டாண்டந்தானதிர அடித்தார்கள்பேரிகையை

பூமிகிடுகிடென்ன பேரிகைதானடித்தார்
கடல் நீர்குவலுடவே காளசின்னந்தானடிக்க.
அஷ்டதிக்குமாட அதிரசின்னந்தான்முழங்க
அண்டங்கிடுகிடென்ன அடித்தான்பறையோசை
ஆனையணிநடக்க அரசுமன்னர்தானடக்க
குதிரையணிநடக்க குலசேகர்பின்னடக்க
தெத்துக்கடந்து தெருவீதிதான்கடந்து
அங்காடிவீதியது ஆயிரந்தெருகடந்து
குச்சிலியர்வீதி சூல்மன்னர்தான்கடந்து
பீங்கான்கடைத்தெருவும் பின்னிட்டுமுன்னடந்தார்
வைகைத்தரைநடந்து மதுராபுரிகடந்து
பட்டணத்தைவிட்டுப் பரிவாய்நடந்தார்கள்
கானஞ்செடிதாண்டி கரியமலைதான்தாண்டி
ஆறுசுனைதாண்டி அரியவனங்கடந்து
சில்லென்றுபூத்த செடிகள்வனங்கடந்து
புல்லென்றுபூத்த புலியின்வனங்கடந்து
வேங்கையிருந்தவனம் வெண்களாப்பூத்தவனம்
எட்டடிவேங்கை யிருக்கும்வனங்கடந்து
பத்தடிவேங்கை பருத்தவனங்கடந்து
அறுபதடிவேங்கை அடர்ந்தவனங்கடந்து
சிங்கமுலாவுவனம் சிறுபுலிதூங்குவனம்
ஆளியுலாவுவனம் அன்னபட்சிதூங்குவனம்
கெண்டவேரண்டங்கள் இருக்கும்வனங்கடந்தார்
பாதிரிமுல்லை பருத்தவனங்கடந்தார்
ஒருநாரைக்கிருநாரை உயர்ந்தகொம்பில்தானிருக்க
கருநாரைக்கிரைதேடும் கதலிவனங்கடந்தார்
மயிலோசைகேட்கும் மாந்தோப்புதானடந்தார்
ஈக்கள் நுழையாத இருண்டவனங்கடந்தார்
அண்டரறியாத அகண்டவனங்கடந்தார்
வேந்தரறியாத வெளிக்காடுதானடந்தார்
சந்திரர்கள் சூரியர்கள் காணுவனங்கடந்தார்

வெகுதூரம்வருகையில் வேல்பொருங்கண்ணாளும்
பவளம்விளைகின்ற பாங்கானகாடுகண்டாள்
தூரத்தில்கண்டவுடன் செல்வனுமேதுசொல்வான்
எங்களையர்போனது இக்காடோ ஆச்சியென்றான்
ஐயாவென்றுசொல்லவே அடித்தாள்தவடையிலே
அடித்தபொழுதிலே அலறிப்புலம்பிவிட்டான்
பாவியை நினைக்கவல்லோ பாலகனையானடித்தேன்
மைந்தனைக்கொஞ்சியல்லோ மடிமேலேவைத்தாளே
அப்போ மதுரைபரிசனங்கள் மகாசேனைதான்கடந்து
சேனைபரியமுதல் சமர்த்தர்கள்சூழ்ந்துவர
ஐந்துலட்சங்குதிரைகளு மெல்லியரைச்சூழ்ந்துவர
ஆனைமாவுத்துகளு மாரணங்கைச்சூழ்ந்துவர
சேனைபரிசனங்கள் சொல்லமுடியாது
இப்படியாக எச்சரித்துத்தானடக்க
அப்போது-காடுஎறிகிறதும் கல்லைப்பிராட்டுறதும்
ஆனைமேல்பேரி அசைக்கிறதும்குலுக்குறதும்
குதிரையின்மேல்கூடாரம் கூட அசைகிறதும்
குதிரைபிரியாமல் கூடநடக்கலுற்றாள்
அப்போதுஅல்லியரும் ஆரணங்குமேதுரைப்பாள்
ஆனைகளாறுகோடி குதிரைகளேழுகோடி
மதுரைபடைகளெல்லாம மன்னுவருகுதடா
மதுரைவளநாட்டில் மகாராசர்கேட்கலுற்றார்
அப்போ-அம்மாவருகிறது ஆனைபடைகளெல்லாம்
பாண்டிவளநாட்டாளும் பவளக்காடுபோய்புகுந்தாள்
வெய்யல்விடாய்த்துவந்து விழுந்ததேசேனைகளும்
காதையடைக்கிறதும் களையாய்வருகிறதும்
நாக்கைவறட்டுரதும் நடுநாக்கிழுக்கிறதும்
வாடிமயங்கினர் மயிலனையாள்சேனையெல்லாம்
அந்தச்சமயத்தி லாரணங்குதான்கேட்டு
பாளையமிரங்குமென்றாள் பத்தினியாளல்லியரும்
கூடாரம்போடுமென்று கொப்பெனவிரங்குமென்றாள்

பஞ்சவர்ணக்கூடாரம் பலதிரையும்போட்டார்கள்
வீதிவீதியாகவே அமர்ந்ததுபாளையங்கள்
ஆனைக்குடேருவும் குதிரைக்குக்கொட்டாவும்
மாட்டுக்குத்தும்புகளும் மனிதருக்குக்கூடாரம்
பாளையங்கள்தோறும் படிகொடுத்தாளல்லியரும்
இப்படியாக இருக்கின்றவேளையிலே
கானகத்தினுள்ளிருக்கும் கனவேடர்வந்தார்கள்
பாளையமிறங்கினதைப் பார்த்தார்கள்வேடுவர்கள்
இத்தனைகாலமாய் இதுநெடுநாள்கண்டதில்லை
இப்பெரியகானகத்தில் இருக்கிறேம்வெகுநாளாய்
இவ்வனத்தில்நாமும் பார்த்ததில்லைவெகுகாலம்
இதுவென்னகாலமோ என்றுமனதிலெண்ணி
என்றல்லோவேடுவர்கள் எச்சரித்துவந்தார்கள்
அப்போதுமந்திரிகள் கண்டார்கள்வேடுவர்கள்
ஆரப்பா நீங்களென்று கேட்டார்களப்போது
இந்தநல்லகானகத்தில் இருக்கின்றவேடுவர்கள்
என்றுமவர்சொல்ல எச்சரித்துமந்திரிகள்
பிடித்துவந்துவிட்டார்கள் பெண்பெருமாளண்டையில்
அவர்கள்-கும்பிட்டுநின்றூர்கள் கொம்பனைமுன்பாக
மகுடத்துரைச்சியவள் வாழ்வரசிகண்டுவிட்டாள்
எந்தவூர்வேடுவரோ எனக்கறியச்சொல்லுமென்றுள்
இந்தவனந்தனிலே ஏனம்மாஇங்குவந்தாய்
கதண்டுகுளவிகொட்டிக் காவலர்கள்தான்மடிவார்
முகமறியாப்பேரை மொய்க்குங்கதண்டுகள்தான்
இந்தக்கானகத்திலம்மா கதண்டுகுளவிகள்தான்
பவளவேட்டைவந்தவர்கள் பாருலகில்மெத்தவுண்டு
கதண்டுகுளவிகொட்டி மடிந்தவர்கள்கணக்குமில்லை
ஆச்சியெழுப்பிடுவாள் அனந்தகோடிசேனைகளை
என்றுசொல்லவேடுவர் ஏந்திழையாளேதுசொல்வாள்
இதுயாருடையாச்சியம் என்றுளேயல்லியரும்
ஆனுற்கேளென்னுச்சி அதுவிபரஞ்சொல்லுகிறேம்

சேராம்பூராசாக்கள் துரைகளவரைம்பதுபேர்
பிள்ளையில்லையென்று பெருந்தவசுபண்ணுர்கள்
மைந்தனில்லையென்று வருந்தித்தவசுபண்ணுர்
குமரனில்லையென்றுசொல்லி கோடிதபசுபண்ணுர்
ஆருக்கும்பிள்ளையில்லை என்ருரோஈஸ்வரனுர்
பரமசிவன்மனமகிழ்ந்து பவளக்கொடிமேலே
பாலகியையுண்டுபண்ணுர் பரமசிவனப்போது
பவளக்கொடியாளென்று பேரிட்டாரீஸ்வரனும்
அப்போது-சேராம்பூராசாக்கள் துரைகளவரெல்லாம்
பிள்ளைகலியினுல் பெண்ணென்றுசொல்லாமல்
மாதையெடுத்துவந்து வளர்த்தார்கள்ராசாக்கள்
பெண்ணென்றெண்ணுதுபிள்ளைஎன்றுதான்வளர்த்தார்
அவள்-மீறிவளர்ந்தாளே மெல்லிருதுவானுளே
பிள்ளையென்றுசொல்லி பொன்மகுடம்சூட்டினுரே
அந்தமுடிகொண்டு ஆளுகிருள்ராச்சியத்தை
பதினுறுதன்வருஷம் பட்டமரசாண்டாளே
அவளைக்-கொள்ளவருவார்கள் கோடானகோடியுண்டு
அவளை-மாலையிடவந்தவர்கள் மட்டுமிதந்தானில்லை
நித்யகன்னியாகவே இருந்தாளின்னுள்வரைக்கும்
குருநாட்டான்குருகுலத்தான்குந்திமகனர்ச்சுனன்காண்
சந்தனவடிவழகன் தருமராஜன்தம்பியவன்
தோழனுந்தானுமாய் தேசத்தில்வந்தவரும்
பவளக்கொடியாளைப் பத்தினியைமாலையிட்டான்
பதினுறுநாளாச்சு பத்தினியைமாலையிட்டு
அந்த-ஆனந்தமாரியவள் அழகுள்ளராச்சியத்தை
இராஜமுடிதரித்து நலமுடனேயாளுகிருள்
அவ்வார்த்தைகேட்டாளே அல்லிப்பெருமாளும்
சீறியெரிபறந்து சிங்கக்குட்டிபோலெழும்பி
கொக்கரித்துஎழுந்தாளே கொல்லுங்குருவியைப்போல்
ஆரடாதூதுவனே அழையுங்கள்வேடுவரை
காவலிலேவையுமென்ருள் கட்டழகர்வேடுவரை

ஆனைகட்டுங்கூடத்தில் அடைத்தார்கள்வேடுவரை
மூன்றுநாளாறு பொழுதிலேவாரேனென்று
மைந்தன்மேலாணையிட்டு வந்தாரேவாள்விஜயன்
மாலையிட்டுக்கொண்டு வாழ்ந்திருக்கநாளாச்சே
எமலோகம்போனாலும் இட்டுவந்துசங்கரிப்பேன்
ஆகாயம்போனாலும் அர்ச்சுனரைக்கொன்றிடுவேன்
பாதாளம்போனாலும் பார்த்தரைக்கொன்றிடுவேன்
எரிப்றந்துகண்சிவந்து எழுந்தாளேபத்தினியாள்
அப்போ துமாயவரும் அறிந்தாரேயிவ்வசனம்
மோசங்கள்வந்து மூடிந்ததேயர்ச்சுனர்க்கு
ஒன்பதவதாரம் பாங்காய்ப்பிறந்தோமே
பத்தவதாரம் பாங்காய்ப்பிறந்தோமே
அப்படிப்பட்டதொரு அர்ச்சுனராஜாவை
சங்கரிக்கவேணுமென்று நினைத்தாளேதையலரும்
அண்டர்வரத்தையெல்லாம் பெற்றவள்காணாணங்கு
சொக்கர்வலுமையுண்டு சுந்தரியாளல்லியர்க்கு
அறிந்துமிருப்போமே அல்லிநல்லாள்தன்சமர்த்தை
ஏமாந்துநாமிருந்தால் இறந்திடுவாரர்ச்சுனரும்

ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியானவர் அல்லியரசாணியுடைய பாளையங்களெல்லாவற்றையுங் கொல்லும்படியாகக் கதண்டுகுளவிகளை யேவிவிடுதல்.

என்றுயெழுந்தாரெ எம்பெருமாளேகவண்ணர்
துவாரகையைவிட்டுச் சுவாமியும்வந்துவிட்டார்
மாய்கையாய்வந்துவிட்டார் வனமாம்வனந்தனிலே
கதண்டுகுளவிகளைக் கடுகவரவழைத்தார்
செங்குளவிகருங்குளவி சேரவரவழைத்தார்
அல்லியரும்புத்திரரும் அவ்விருவர்தன்னைவிட்டு
ஆனைகுதிரைகளை அடங்கவொண்ணாச்சேனைகளை
அத்தண்டபேரையும் அல்லவரைக்கொல்லுமென்றார்
என்றதுசொன்னார் எம்பெருமாள்மேகவண்ணர்

### கதண்டுகுளவி சேனைகளைக் கொல்வது.

மாயனுரைகேட்டு வருகுதுகதண்டுகள்தான்
பாளையத்திற்போய்ப்புகுந்து பதைக்கவேகொல்லுகுது
கண்டங்கண்டந்துண்டமாய்க் கடித்துமேபோடுகுது
ஈரல்பிடுங்குதே எல்லவரைக்கொன்றிடுதே
குடலைப்பிடுங்குதே குப்பையில்தள்ளுதே
அம்மாடியாத்தேயென்று அலறிவிழுந்தவரும்
செத்துமடிந்தாரே சிவலோகம்போய்ச்சேர்ந்தார்
அல்லியருப்புத்திரரும் அவ்விருவர்த்தப்பிவிட்டார்
மற்றபேரெல்லாம் மாண்டுமடிந்தார்கள்
கண்டாளேயல்லியரும் கனகவிசாரமிட்டு
இதுயென்னபாவமிது ஏதுமறியேனே
அனீதமாகவே அனைவோருமாண்டாரே
இவர்களைத்தானெழுப்ப இளங்கொடியுந்தானினைந்தாள்
ஆலவாய்சொக்கர் ஆண்டவனேவாருமென்றாள்
மதுரைமீனாட்சியம்மாள் வாழ்மதுரைச்சொக்கரே
ஆபத்தைத்தீர்க்கவே ஆண்டவனேவாருமென்றாள்
தொழுதுவணங்கியே தோத்திரம்பண்ணலுற்றாள்

### சோக்கலிங்கரும் மீனாட்சியம்மையும் வருகிறது.

சொக்கரறிந்து திடுக்கென்றுதானெழுந்து
அல்லவரைத்தானெழுப்ப ஆண்டவருந்தானெழுந்து
அல்லவரைத்தானெழுப்ப ஆண்டவருந்தான்வருவார்
மாயரறிந்து வந்துவிட்டார்சொக்கரண்டை
என்னுடையமைத்துனரே எங்குநீர்போரீர்காண்
புருஷனுந்தேவியுமாய்ப் போரபயணமெங்கே
அல்லியுடபாளையங்கள் அதமாய்முடிந்ததுகாண்
கதண்டுகொண்டிசெத்தவர்க்கு கன்னிபுலம்புகிறாள்
அல்லவரைநானெழுப்ப ஆயரேபோரேனென்றார்
மாயன்பெருமாளும் வார்த்தைகளேதுரைப்பார்
இதுவொருகாரியமாய் நீர்போகக்காரணமேன்

அடியேனாலாகாதோ அல்லவரைத்தானெழுப்ப
என்னாலேயாகாதோ எழுப்பிவிடமாட்டேனோ
மயிர்க்கால்முறியாதே மாதருடசேனையெல்லாம்
எழுப்பிவிடுகிறேன் ஈஸ்வரரே தப்பாது
அரண்மனைக்கேகுமென்று அனுப்பிவிட்டார்மாயவரும்

ஸ்ரீகிருஷ்ணர் அர்ச்சுனரையழைப்பது.

சேராம்பூராஜாக்கள் சீமையிலேவந்துவிட்டார்
அச்சுதானந்தரும் அந்தநல்லவேளையிலே
காலையில்தாமெழுந்து கால்முகஞ்சுத்திபண்ணி
பூங்காவனத்திற்குப் போகின்றவேளையிலே
மாயன்பெருமாளைக் கண்டுவணங்கினார்
ஆயன்பெருமாளை அடிபணிந்தாரல்லவரும்
வாள்விஜயனெங்கேயென்று மாயவனார்கேட்கலுற்றார்
எந்தோளனர்ச்சுனன் எங்கேயென்றார்மாயவரும்
பங்கயஞ்சீர்க்கண்ணாள் பவளக்கொடியாளருகே
சதுரங்கமாடியே யிருக்கிறான் தனஞ்சயனும்
வாள்விஜயன்கோமானை வரவழைத்துவாருமென்றார்
அவ்வார்த்தைகேட்டுமவர் அச்சுதருமோடிவந்தார்
அருச்சுனருந்தேவியரும் ஆசாரவாசலிலே
சொக்கட்டானாடுகிற வேளையிலேதோழனவன்
கண்காட்டித்தானழைத்தான் காண்டீபனர்ச்சுனரை
சைகையைத்தானறிந்து தேர்விஜயன்தானெழுந்தான்
பூஜைபண்ணிவாரேனென்று போனானர்ச்சுனனும்
அரண்மனைகளேழுகட்டும் அந்தபுரந்தான்கடந்து
தெத்துக்கடந்து தெருவீதிவந்தபின்பு
ஆணழகரர்ச்சுனரே அரிராமர்வந்தார்காண்
மாயன்பெருமாளும் வரவழைத்தாருன்னையென்றார்
எங்கேயிருக்கிறார் எம்பெருமாள்சொல்லுமென்றார்
பிள்ளையார்கோவிலண்டை இருக்கிறார்வாருமென்றார்

## அர்ச்சுனன் வருவது.

என்றதுகேட்டுமவர் இளவிஜயன்தான்பயந்து
பூங்காவனம்புகுந்து புஷ்பமலர்பறித்து
மல்லிகைமுல்லை மலர்பறித்தோடிவந்து
மாயனுடபாதத்தில் வணங்கியேதெண்டனிட்டார்
கொண்டுவந்தபூமலரைக் குபுகுபென்றுதான்சொரிந்தா
முக்காலடிபணிந்து முடிவணங்கித்தெண்டனிட்டார்
வந்துபணிந்தவனை வாழ்த்தியந்தமாயவரும்

## ஸ்ரீ கிருஷ்ணர் சொல்வது.

வம்பரவரர்ச்சுனரே மன்னாஎழுந்திரென்றார்
மூன்றுநாளாறு பொழுதிலேவாரேனென்று
மைந்தன்மேலாணையிட்டு வந்தீரேவாள்விஜயா
மற்றுமொருகன்னியரை மணமாலைசூட்டினாய்
மகுடத்துரைச்சியவள் வாழ்வரசிபொல்லாதாள்
வெட்டியெறிவாளே வீரமணிவாளாலே
கொல்லநினைத்தாளே கொம்பனையாள்மாதுகன்னி
வைகைநதியாளும் வந்தாளேபடைகூட்டி
தண்டெடுத்துவந்தாளே தையலிளங்கொடியாள்
வடகோடிகானகத்தில் வந்துதண்டிறங்கினது
ஆயிரங்கூடாரம் அங்குவந்துபோட்டார்கள்
என்னசெய்வீர்வாள்விஜயா என்றார்பெருமாளும்

## அர்ச்சுனன் சொல்வது.

ஆணலழகுமன்னன் அர்ச்சுனருமேதுசொல்வார்
மதமயக்கமாச்சுது மாயவரேயென்னசெய்வேன்
எங்கேயொளித்து இருப்பேன்காண்மைத்துனரே
நான்-யமலோகம்போவேனோ ஏழுலகம்கொண்டவனே
பிரமலோகம்போவேனோ பெருமாளேசொல்லுமென
நீ-சிவலோகம்போனாலும் தேர்விஜயராசாவே
நீ-பிரமலோகம்போனாலும் போய்பிடிப்பாளல்லியவள்

நீ-எமலோகம்போனாலும் இழுத்துவந்துசங்கரிப்பாள்
நீ-ஆகாயம்போனாலும் அம்புக்கிரையிடுவாள்
நீ-பாதாளம்போனாலும் பாய்ந்துபிடிப்பாளே
இனியென்னசெய்வீர்காண் என்றார்பெருமாளும்
உன்-பாதாரவிந்தத்திற் பரகதிசேரந்திடுவேன்
நான்-செத்துமடிந்திடுவேன் ஸ்ரீராமா நீரறிய
நான்-வல்லபிராணனைக் கல்லோடுமோதிடுவேன்
வேறேகதியில்லையென்று விழுந்தலறித்தெண்டனிட

ஸ்ரீகிருஷ்ணர் இருவரையும் மாண்டவர்போல் செய்வது.

ஆயன்பெருமாளும் அருளாளரப்போது
எந்நாளுமுந்தனிட இடியோடாஎந்தனுக்கு
உன்னாலேயென்னபாக்யம் உண்டுபதங்கண்டேனடா
என்றந்தமாயவரும் எழில்விஜயனர்ச்சுனனை
பவளநல்லகாட்டினிலே பாரளந்தார்கூட்டிவந்து
அருச்சுனன்தன்னுயிரும் அச்சுதன்தன்னுயிரும்
இருவர்உயிர்வாங்கி எம்பெருமாளடக்கிவைத்தார்
கதண்டினிற்செத்தவர்போல் கரியமாலுண்டுபண்ணார்
குடலைப்பிடிங்கியே குத்திச்சரித்துவிட்டார்
வயிற்றைக்கிழித்து மணிக்குடலைத்தொங்கவிட்டார்
துண்டந்துண்டமாகத் துணித்தாரிருவரையும்
நாய்நரிகள்தீண்டாதே நல்லெறும்புமொய்யாதே
சக்கரத்தைத்தானெடுத்துச் சாமியார்காவல்வைத்தார்
பத்திரமாய்க்காருமென்று பாரளந்தாரப்போது

கிருஷ்ணமூர்த்தி ஓலையெழுதல்.

மற்றோர்மரத்தடியில் வந்துபெருமாளும்
சேமக்குருத்தோலை வாரியந்தமாயவரும்
வண்ணக்குருத்தோலை வாரியந்தமாயவரும்
பொன்னினெழுத்தாணி பொருந்தவேவகைபிடித்து

உற்பனதாகவே ஓலையெழுதுகிருர்
சேராம்பூராசாக்கள் சென்றெழுதும்பாவனைபோல்
குருகுலவம்மிசத்தில் குந்திமகன் தருமருக்கு
வெற்றிமதயானை வீமனவன்தனக்கும்
நகுலன்சகாதேவன் ராசாக்கள்யாவருக்கும்
மந்தாரக்குந்தியற்கும் மற்றுமுள்ளமன்னருக்கும்
பாஞ்சாலன்பெற்றெடுத்த பதிவிரதைதுரோபதைக்கும்
ஆருயிரவ ரையன்மார்பாண்டியர்க்கும்
மகுடத்துரைச்சியவள் வாழ்வரசியல்லியற்கும்
மேகம்பயின்றெடுத்த மின்னொளிநாயகிக்கும்
நாகருமீன்றெடுத்த நாககன்னிமங்கையற்கும்
சோரவளநங்கை சுபத்திரைநாயகிக்கும்
ஊருமதயானை உத்தமர்கள் நூற்றுவர்க்கும்
அக்கத்தார்சுற்றத்தார் அனைவோருந்தானறிய
உறவின்முறையாரும் உள்ளவருந்தானறிய
வெள்ளிக்கிழமையில் விடிந்தைந்துநாழிகையில்
சேராம்பூராசாக்கள் துரைகளுடபட்டணத்தில்
பவளம்வெட்டப்போனிடத்தே பார்த்தவிஜயனையும்
அச்சுதானந்தர் அன்பானதோழனையும்
கதண்டுகொட்டிமாண்டார்கள் கட்டழகரென்றுசொல
சாவோலைபோலெழுதி தலைப்புறத்திற்சுட்டாராம்

## ஸ்ரீகிருஷ்ணர் வெட்டியானுய் ஓலைகொண்டு போதல்.

அப்போ- ஆயன்பெருமாளும்அருளாளரேதுசெய்தார்
வெட்டியானைப்போல்வேஷங்கொண்டாரெம்பெருமன்
கம்பளியைமேல்போர்த்து கையில்தடியெடுத்து
தோட்டியைப்போலாக சாவோலைகைப்பிடித்து
ஓட்டம்நடையுமாய் ஓடுகிருரெம்பெருமாள்
அல்லிநல்லாள்தானிருக்கும் அவ்வழியேவாராராம்
கண்டாளேதோட்டிதன்னை கட்டழகியல்லியரும்
மனிதருமில்லாதே மயங்குகின்றவேளையிலே

தோட்டியைக்கண்டவளுந் துரைச்சியவளே துரைபாள்
ஆரடாதோட்டியென்று அழைத்தாளேயல்லியரும்
ஏனம்மாவழைத்தீர் என்றவனுந்தெண்டனிட்டான்
எந்தவூர்த்தோட்டி நீ எனக்கறியச்சொல்லுமென்றாள்
சேராம்பூராசாக்கள் சீமையின்தோட்டியென்றான்
எந்தவூர்பூமிக்கு ஓலைகொண்டுபோரீர்காண்
குருநாட்டுச்சேனைக்குப் போரேனம்மாகொம்பனையே
குருகுலவம்மிசத்தில் குந்திமகனர்ச்சுனனும்
தருமரிடதம்பியராம் தனஞ்சயனர்ச்சுனனும்
வெற்றிமதயானை வீமருக்குத்தம்பியராம்
சேராம்பூராஜாக்கள் துரைகளவர்பெண்ணை
பங்கபஞ்சீர்கண்ணாள் பவளக்கொடியாளை
பதினாறுநாளாச்சு பத்தினியைமாலையிட்டு
கதண்டுகொட்டிமாண்டாரே காண்டீபனர்ச்சுனனும்
ஆகையினாலே அனுப்பினாரென்னையம்மா
ஓலைகொண்டுபோரேனம்மா உத்தமியேயென்றாச்சி
அவ்வார்த்தைகேட்டு அல்லிவயறெரிந்து
ஓலையைத்தாரும் உத்தமனேபார்ப்போமென்றாள்
ஏந்திழையாள்முன்னெடுத்து ஈய்ந்தான்மடக்கோலை
மடக்கோலைதானெடுத்து வாசித்துப்பார்த்தாளே
அதிலிருந்தமார்க்கமெல்லாம் அறிந்துபுலம்பலுற்றாள்
விரித்தாள்தலைகூந்தலை விட்டெறிந்தாள்தம்பலத்தை
அப்பிக்கொண்டுவயிற்றில் அறைந்துமேகொண்டாளே
கோடையிடித்தாற்போல் குத்திக்கொண்டாள்வயிற்றில்
பிச்சுகொண்டாள்சதையைபிடுங்கிக்கொண்டாள்மயிரை
கோவென்றசத்தமுடன் குமுறிப்புலம்பலுற்றாள்
ஐயையோதெய்வமே அனியாயம்பண்ணீர்களே
எங்கேயோவானம் இடித்ததுஎன்றிருந்தேன்
தப்பாதேவானம் தலையிலிடித்துதே
தண்டெடுத்துவந்தேனே சண்டையிட்டுப்போராட
உயிரோடிருந்தாலே உற்றசண்டைபண்ணவேணும்

மடிந்தவர்கள்தன்னுடன் வார்த்தைகளேனெந்தனுக்கு
என்-பத்தாவைப்பறிகொடுத்து பாரினில் நிற்பேனோ
புருஷனை நானிழந்து பூமியிலே நிற்பேனோ
கூடமடிந்திடுவேன் குவலயத்தினில்லாதே
மாண்டுமடிந்திடுவேன் வையகத்தினில்லாதே
தீப்பாய்ந்துபோவேனென்று செப்பியழுதாளே
அப்பாவேதோட்டியடா அழகுமைந்தன்தாரேனடா
எந்தனுடபுத்திரனை எந்தி நீமன்னவனே
கொண்டுபோய்மாமியிடம் குருநாட்டிற்சேருமென்றாள்
பாட்டியார்தன்கையிலே பாலகனை ஒப்பியென்றாள்
அப்போதுதோட்டி ஆரிழைக்குவதுசொல்வான்
அரண்மனைகளென்றால் அஞ்சுவோம்நாங்களம்மா
நான்-தந்தமடக்கோலை தையலரேதாருமென்றான்
மடக்கோலைதான்கொடுத்தாள் மாதுஇளங்கொடியும்
ஓலையைக்கைப்பிடித்து உத்தமனுந்தானடந்தான்

## புலந்திரன் சொல்வது.

போரஞ்சாமன்னன் புலந்திரனுமப்போது
மாதாவைப்பார்த்து மைந்தனுமேதுசொல்வான்
அம்மா-நானையாவென்றால் அடித்தாயேவாய்மேலே
இப்போ-ஆரென்றழுகிறீர் ஆனந்தவாழ்மாரி
புருஷன்மேல்சண்டைக்குப் புறப்பட்டாய்பொற்கொடி
புருஷன்மேல்போருக்குப் போவாரோவையகத்தில்
தண்டெடுத்துப்போக தனஞ்சயனார்மாண்டுவிட்டார்
வாளெடுத்துப்போகவே வைகுந்தஞ்சேர்ந்துவிட்டார்
நான்-பவளத்தேர்கேட்ட பாவமல்லோஎன்தாயே
கேளாமல்நானிருந்தால் கெடுதியொன்றுஞ்சேராதே
எனக்காகஇங்கேவந்து என்தகப்பன்தான்மடிந்தார்
என்தகப்பன்தன்னுடனே என்னுயிர்நான்மடிப்பேன்
என்தகப்பன்மாண்டு இனியிருக்கேன்பூமியிலே
நான்-இப்பவேஎன்னுயிரை இழக்கிறேன்மாதாவே

நான்-ஐந்துவயதம்மா அறியாதபாலனுக்கு
இந்தவிதியெந்தனுக்கு ஈஸ்வரனர்கட்டளையோ
என்று-மண்ணில்விழுந்து மைந்தன்புரண்டழுதான்
அப்போ-பாலனழுகிற பரிதாபந்தான்பார்த்து
ஐயோசிவனேயென்று அழுகிறபாலகனை
நல்லதுதம்பியென்று நாயகியாள்சென்றெடுத்து
அப்பாமகனே அறிவுள்ளகண்மணியே
இந்தவயதிலே ஈஸ்வரனர்கட்டளையோ
அறியாதபாலனுக்கு அமைத்தாரேஇத்துயரம்
இப்போ-பழிகாரியானேனே பாலன்புலந்திரனே
என்று-ஆருததுக்கமுடனழுதுகொண்டுதானிருந்தாள்

### கிருஷ்ணர் தருமருக்கு ஓலைகொடுத்தது.

அப்பால்-தோட்டியுமான துவாரகாபுரிவாசன்
சில்லென்றகாடுகள் செடிகள்வனங்கடந்து
காடுகடந்து கரியமலைதான்கடந்து
எண்ணுமலையி லிசைந்துவருங்காவேரி
மணமாலைரங்கர் வனங்களெல்லாந்தான்கடந்து
துங்கபத்திரிநாடு நடந்தாரேதோட்டியரும்
குருநாடுதேசத்தில் கொற்றவனும்போய்ப்புகுந்து
அன்புடையதருமாவர் கொலுவுக்குமுன்னேவந்து
கொற்றவனர்தருமாவர் கொலுவுக்குமுன்னேவந்து
கைகட்டிநின்றவனுங் கடுகெனவேதெண்டனிட்டான்
தயவாகத்தோட்டிமுகம் தருமருந்தான்பார்த்து
யாருடையதோட்டிநீ யென்றுரே ஆணழகர்
நான்-சேராம்பூராஜாக்கள் தேசத்துதோட்டியென்றூர்
இங்கேநீவந்ததென்ன எனக்கறியக்கூறுமென்றூர்
சொன்னவுடனேயவன் சுருளோலைகைகொடுத்தான்

### தருமர்முதல் யாவரும் புலம்பல்.

மடக்கோலைகட்டவிழ்த்து வாசித்துப்பார்த்தவரும்
அதிலிருக்குஞ்செய்திகளை அறிந்தாரேதருமலிங்கம்

வாய்மூடித்தருமரவர் வயிறெரிந்துபுலம்புகிறார்
மாளவோமாயனுடன் உன்னையனுப்பிவைத்தேன்
என்-செல்வத்திருமுகமே தேர்விசயா அர்ச்சுனரே
என்-கண்ணே நவமணியே கற்பகமேயெங்கொளித்தாய்
என்-கட்டிக்கரும்பே நீ கருவிளமேயெங்கொளித்தாய்
தேடக்கிடையாத திரவியமேயெங்கொளித்தாய்
சுவரிலெழுதவொண்ணாச் சித்திரமேயெங்கொளித்தாய்
படத்திலெழுதவொண்ணாப்பார்த்தீபாஎங்கொளித்தாய்
உன்னைப்பிரிந்துநான் உலகிலிருப்பேனோ
நான்-எப்படிமனந்துணிந் திருப்பேனோவாள்விஜயா
என்றதுசொல்லியே யேங்கியழுகலுற்றார்
வெற்றிமதயானை வீமசேனன்கேட்டு
விம்மியழுதானே வில்விஜயனப்போது
கூவியழுதானே கொற்றவனுமப்போது
நகுலனதுகேட்டு நலமுடனோடிவந்து
மடிந்தீரோ அண்ணாவென்று மண்ணில்புரண்டழுதான்
செத்துமடிந்தீரோ சிவலோகம்போனீரோ
மாண்டுமடிந்தீரோ வைகுந்தம்போனீரோ
உன்னையும்விட்டுநான் உலகிலிருப்பேனோ
என்று-தரையிற்புரண்டழுதான் தாக்குடையநகுலன்
சாஸ்திரக்கொடியுடைய சகாதேவன்தான்கேட்டு
அண்ணாவேயென்றுசொல்லி அலறியழுதானே
குய்யோமுறையோவென்று குழறிப்புலம்பலுற்றான்
குந்தியம்மாள்தான்கேட்டுக் குஞ்சரமேயென்றழுதாள்
ஐயோமகனேயென்று அழுதுபுலம்பலுற்றாள்
பாஞ்சாலன்தன்மகளும் பத்தினியாள்துரோபதையும்
மாரிழவுங்கொண்டு மயிரைவிரித்துக்கொண்டு
ஏந்தியழுதாளே இடைதாவடம்புரள
அந்நகரிலுள்ளோர் அனைவோருந்தானழுதார்
வர்த்தகரும்வாணியரும் வந்துதுக்கங்கொண்டார்கள்
திக்கெட்டுந்தானெரியத் தேசமெங்குஞ்சீட்டெழுதி

97190

மாரிழவுகொண்டார்கள் மகாசேனையுள்ளவரும்
அங்குமவர்கள் துக்கம் அழுதுவந்துகண்டார்கள்
எல்லோருங்கூடியே இறைந்தழுதுகூச்சலிட்டார்
கட்டியழுதார்கள் கடல்நிறைந்தவெள்ளம்போல்
எல்லையளந்த எம்பெருமாள் தான்பார்த்து
குஞ்சிரிப்புக்கொண்டு குலுங்கமிகநகைத்து
நீங்கள் நடவுங்கள் என்றாரே நீலவண்ணர்

தருமர்முதலிய யாவரும் பவளக்காட்டிற்குவருவது.

அப்போதுதருமலிங்கர் அவசரமாய்த்தானெழுந்தார்
தம்பிமார்மூவரும் தானும்நடக்கலுற்றார்
குந்தியம்மாள்தானுங் கூட நடக்கலுற்றாள்
சங்கவதியம்மாள் தானும்நடக்கலுற்றாள்
மாதினியாள் துரோபதையும் மற்றுமுள்ளதேவியரும்
பல்லக்கின் மீதேறி நடந்தார்பலபேரும்
வேங்கையடர்ந்தவனம் வெண்களாப்பூத்தவனம்
கோங்குபெருத்தவனம் கொன்றைகளாப்பூத்தவனம்
சிங்கமுலாவும்வனம் சிறுபுலிகள் தூங்கும்வனம்
யாளிகள்வாழுமந்த அவ்வனத்தைதான்கடந்தார்
மயிலோசைகேட்குமந்த மாந்தோப்புதான்கடந்தார்
அண்டரறியாத தண்டவனங்கடந்து
வேந்தரறியாத வெளிக்காடுதான்கடந்து
சந்திரசூரியர்கள் தான்காணுவனங்கடந்து
அல்லியம்மாள்தானிருக்கும் அவ்வனத்தில்வந்தார்கள்

தருமர் புலந்திரனை அழைப்பது.

தாரார்புகழுடைய தருமர்பெருமானும்
கண்டார்புலந்திரனைக் கட்டழகர்தருமலிங்கம்
அப்பாபுலந்திரனே அழகுள்ளகண்மணியே
தேனேபசுங்கிளியே தெவிட்டாததெள்ளமுதே
கண்ணேநவமணியே கற்கண்டேசர்க்கரையே

சொக்கநாதர்கோயிலுக்குத் தூங்காமணிவிளக்கே
என்-தம்பிபுலந்திரனே தனுவிஜயன்புத்திரனே
வைகைக்கரையடைக்க மண்சுமந்தசொக்கருள்
ஆருயிரம்பாண்டியற்கு அரியபொன்னுகவந்தாய்
வாராய்மகனேயென்று மன்னனெடுத்துரைப்பார்
தம்பிநீவாடாஎன்று தருமரெடுத்துரைத்தார்
போரஞ்சாமன்னன் புலந்திரனுந்தான்பார்த்து
பெரியண்ணுவென்று பிரியமுடன்தெண்டனிட்டான்
அண்ணுவேயென்று அடிபணிந்துதெண்டனிட்டான்
வந்துபணிந்தவனை வாரியெடுத்தணைத்து
வாழ்த்தியெடுத்து மகனைமடியில்வைத்து
கட்டியணைத்துக் கனிவாயைமுத்தமிட்டு
மைந்தன்புலந்திரனை மன்னவனுந்தான்பார்த்து
என்-தங்கக்களஞ்சியமே தார்வேந்தர்பூஷணமே
அரியசிரோன்மணியே அர்ச்சுனனுரெங்கேயென்றார்

## புலந்திரன் சொல்வது.

போரஞ்சாமன்னன் புலந்திரனுங்கூறுவான்
ஐயாவே நீர்கேளும் அதுவிபரஞ்சொல்லுகிறேன்
பாண்டிவளநாட்டாளைப் பவளத்தேர்கேட்டேனையா
பாண்டிவளநாட்டில் பவளங்கிடையாது
எனக்கு-தோஷித்ததென்று சுருளோலைஎழுதிவிட்டாள்
கலைதாங்கிப்போச்சுதென்று கன்னியெழுதிவிட்டாள்
அப்போதுஐயாவும் அவரிங்கேவந்தாரையா
பார்த்தவுடன்யானும் பவளத்தேர்கேட்டேனையா
எடுத்துமடியில்வைத்து என்கண்ணே நல்லதென்றார்
எப்போவருவீரென்று யான்கேட்டேனையாவே
மூன்றுநாளாறு பொழுதிலேவாரேனென்று
என்பேரிலாணையிட்டு எழுந்தருளிப்போனுரையா
சேராப்பூகானகத்தில் சென்றுமடிந்தாரையா
பவளத்தேர்கேட்டுநான் பழிகாரனுனேனையா

சும்மாஇருந்தேனானல் சுகமாயிருப்பாரே
ஐயாவேயென்று அலறினான்பாலகனும்
தாரார்புகழுடைய தருமரவர்கேட்டு
பாலன்புலந்திரனைப் பார்த்துப்புலம்பலுற்றார்
அறிவுள்ளஐயாவே ஐயாவேயென்றழுதார்
வெற்றிமதயானை வீமனும்பார்த்தழுதான்
நகுலசகாதேவரென்னும் ராஜர்புலம்பலுற்றார்
அங்கவர்களெல்லாரும் அழுதுபுலம்பலுற்றார்
தாரார்புகழுடைய த்ருமர்பெருமானும்
மதுரைதுரையாளுகின்ற மாதுமுகம்நோக்கி
மைந்தனும்நீருமாய் வந்ததென்னசொல்லுமென்றார்

## அல்லியரசாணி சொல்வது.

பிறவாமுடிதரித்த பெண்ணரசிசொல்லலுற்றாள்
வந்தேன்மதிகுலைந்தேன் மதியின்விதிவசத்தால்
முன்னேநடந்த முறையெல்லாஞ்சொல்லலுற்றாள்
போரஞ்சாமன்னன் புலந்திரவீரியனும்
கேளாக்கருமமதைக் கேட்டான்புலந்திரனும்
பவளத்தேர்வேணுமென்று கேட்டானேபாலகனும்
மதுரைப்படைத்தலைவர் மன்னவரைத்தானழைத்து
பவளத்தேர்வேணுமென்று கேட்டானேபாலகனும்
சேராப்பூகானகத்தில் உண்டென்றார்செம்பவளம்
எங்களாலாகாது எடுத்துவருவதற்கு
அர்ச்சுனராஜாவால் ஆகுமென்றாரல்லவரும்
மைந்தன்புலந்திரற்கு மாசுரம்வந்ததென்று
ஓலையெழுதியே உத்தமரேயனுப்பிவைத்தேன்
அதனாலேஅர்ச்சுனரும் அவரிங்கேவந்தாரையா
பாலன்புலந்திரனும் பவளத்தேர்கேட்டானப்போ
மூன்றுநாளாறு பொழுதிலேவாரேனென்று
மைந்தன்மேலாணையிட்டு மன்னவரும்போனார்கள்
பதினாறுநாளாயும் பார்த்தர்வரவில்லையென்று

பார்த்தரொடுசண்டை பண்ணவே ணுமென்றுசொல்லி
தண்டுதள்ளிமெடுத்து வந்தேன் தனஞ்செயரே
மதுரைப்படைத்தலைவர் மகாசேனையத்தனையும்
யானைகுதிரைகளும் அண்டவொண்ணுச்சேனைகளும்
குளவிகதண்டுவந்து கொட்டிமடிந்ததையா
மைந்தனும்நானும் மரம்போலே நின்றுவிட்டோம்
என்றுதருமரது இணையடியிற்ருன்விழுந்து
என்னசொல்வேனென்று ஏங்கிமிகவழுதாள்
மன்னர்புலந்திரனை வைத்துவளர்த்திடுங்கள்
எடுத்துவளர்த்திடுங்கள் என்றந்த அல்லியம்மாள்
தீப்பாய்ந்துபோவேனென்று செப்பிப்புலம்பலுற்ருள்
பாராளுந்தருமலிங்கம் பார்த்துமிகவழுதார்
மோதிரக்கையை முகத்தோடணைத்துக்கொண்டு
மெத்தப்புலம்பலுற்ருர் வேந்தர் தருமலிங்கம்

## கிருஷ்ணர் அருச்சுனன் இறந்துவிட்டதைக் காட்டுதல்.

எல்லையளந்ததொரு எம்பெருமாள் தான்பார்த்து
ஏன்காணழுகின்றீர் இப்பெரியகானகத்தில்
மன்னவராருச்சுனனுர் மாண்டவிடங்காட்டுகிறேன்
என்றுசொலிமாயவரும் எல்லோரையுமழைத்துவந்து
வாள்விசயன்பிணத்தை வகையாகக்காட்டலுற்ருர்

## தர்மர் முதலிய யாவரும் புலம்பல்.

தக்கபுகழுடைய தருமர்பெருமாளும்
விஜயன்திருமுடியை வேந்தரவரெடுத்து
காண்டீபன்தன்முடியைக் கண்மலரிலொற்றிக்கொண்டு
தம்பியடாவென்று தருமர்மிகவழுதார்
வீமரவர்பார்த்து மிகவும்புரண்டழுதார்
நகுலசகாதேவ ராஜர்புலம்பலுற்ருர்
அண்ணுவேயென்று அழுதுபுலம்புகிருர்
மந்தாரக்குந்தியம்மாள் தானும்புலம்பலுற்ருள்

சங்கவதியம்மாள் தானும்புலம்பலுற்ருள்
பாஞ்சாலன்பெற்றெடுத்த பத்தினியாள் துரோபதையும்
என்னை-மாலையிட்ட மன்னவரேமடிந்தீரோகானகத்தில்
என்றேதுரோபதையும் ஏங்கியழுகலுற்ருள்
மதுரைத்துரைச்சி மாதுநல்லாளல்லியரும்
காண்டீபனருச்சுனரைக் கண்டுமனங்கொதித்து
பார்த்துமேமாரடித்துப் பைங்கிளியுந்தானழுதாள்
கூடமடிமேனையா கொற்றவனேயென்றுசொல்லி
மெத்தப்புலம்புகிருள் மெல்லிநல்லாளல்லியரும்
அச்சுதன்தங்கை ஆரணங்குசுபத்திரையும்
என்-கண்ணனமைத்துனரே காண்டீபனருச்சுனரே
உம்மைவிட்டுநான்பிரிந்து உலகிலிருப்பேனே
மாண்டுமிருக்கிறது மன்னவனே நீதியுண்டோ
இனியிந்தச்சீவனை இழக்கிறேனென்றழுதாள்
கோவென்றழுதாள் கோபாலன்தங்கையரும்
தேவியாரெல்லோரும் ஆவிவிடத்தான்துணிந்தார்
போரஞ்சாமன்னன் புலந்திரனுமப்போது
அந்த-பாராளுந்தருமரைப் பார்த்தந்தப்பாலகனும்
ஐயருடனேகூட ஐயாவேநான்மடிவேன்
நான்-கூடமடிவேனென்று கோவென்றுபுலம்புகிருன்
பாலனழுகிற பரிதாபந்தான்பார்த்து
அறியாதபாலகனே அறிவுள்ளஐயாவே
இந்தத்துயரம் வருவானேனெந்தனுக்கு
இது-மாயர்மகத்துவமோ மன்னவனேநானறியேன்
என-மைந்தனைத்தானினைந்து மன்னவருந்தானழுதார்
மைந்தன்புலந்திரன் முன்னனழுகிறதை
வெற்றிமதயானை வீமனவன்பார்த்தழுதான்
நகுலசகாதேவ ராசாக்கள்தானழுதார்

---

## சேரம்பூராசாக்கள் பவளக்கொடியாளை அருச்சுனராஜன் எங்கேயென்று கேட்குதல்.

முத்துமுடி தரித்த முருகுழலாள்புத்திரனை
கட்டியழுதார்கள் கடலுடைந்தவெள்ளம்போல்
கூடியழுதார்கள் கொம்பனைமாரெல்லோரும்
சேரம்பூராசாக்கள் தெருவிலுலாவுகையில்
வடகோடிகானகத்தில் வருவானேன்கூச்சலென்று
ஐம்பதுபேருமாய் அரண்மனைக்குள்ளேவந்து
பங்கயஞ்சேர்கண்ணாள் பவளக்கொடியாளை
மாப்பிள்ளைராயர் மன்னவனுமெங்கேயென்றார்
பூசைபண்ணிவாரேனென்று போனாரவர்கானகத்தில்
வடகோடிகானகத்தில் வருவானேன்கூச்சலென்றார்
அஞ்சலிலேதூதுவரை அனுப்பிவைத்தாரப்போது
அப்போதுதூதுவர்கள் அடித்தார்களவ்வண்ணம்
மாப்பிள்ளைராயர் வைகுந்தம்போனாரென்று
ஓடிவந்தார்தூதுவர்கள் ஒருநொடிக்குள்ளாக
தூதுவரும்வந்து தொழுதுதெண்டனிட்டுநின்றார்
மாப்பிள்ளைராயர் வைகுந்தஞ்சேர்ந்தார்காண்
அவர்களுடசேனைகளும் அனைவோரும்வந்திறங்கி
கட்டியழுகிறார் கானகமுங்கொள்ளவில்லை

## சேரம்பூராசர் வருவது.

ஐம்பதுபேர்ராசாக்கள் அபயம்சிவாயமென்று
முன்னறியோம்பின்னறியோம் மும்மூர்த்தியானவரை
அனியாயமென்றுசொல்லி அடித்துப்புரண்டழுதார்
பதினாறுநாளையிலே பாவிசிறையாவதென்ன
பங்கயஞ்சேர்கண்ணாள் பவளக்கொடியாளும்
ஐம்பதுபேர்ராஜாக்கள் அவர்களுடதேவியரும்
எல்லாருங்கூடியே ஏகோபித்தார்கானகத்தில்
கானகத்தில்வந்து கதும்பிமிகவழுதார்

## பவளக்கொடியாள் புலம்பல்.

கட்டியழுதார்கள் கடலுடைந்தவெள்ளம்போல்
அப்போ-பங்கயச்சீர்கண்ணாள் பவளக்கொடியாளும்
பதினாறுதன்வருஷம் பாவிசிறையிருந்தேன்
இந்தப்பழிக்காக ஈஸ்பரரேயிங்குவந்து
என்னை-மாலையிடச்சொல்லிமயக்கமல்லோபண்ணீரோ
அப்படியேமாலையிட்டேன் அர்ச்சுனரைநானுமிப்போ
இந்தவிதியெனக்கு ஏன்வைத்தீரீஸ்பரரே
அண்டமுலகளந்த ஆயர்பெருமாளே
நீர்-எத்தனைநாள்காத்தீரோ என்னைச்சிறையெடுக்க
எத்தனையோராஜாக்கள் வந்தார்கள்மாலையிட
நான்-ஆருக்குமாலையிடே னென்றிருந்தேனப்போது
அருச்சுனரைமாலையிட்டு அருஞ்சிறையானேனே
ஐயையோதெய்வமென்று அலறியழுதிடவே
அப்போதுஎம்பெருமாள் ஆயாவர்பார்த்து
மதுரைதுரையல்லியரின் மனதைக்கலக்கிவிட்டார்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்நாயகியும்
பங்கயஞ்சீர்கண்ணாள் பவளக்கொடியாளை
உற்றுற்றுப்பார்த்தே உளமும்மிகக்கலங்க
வாலைப்பிராயம் வயதுபதினாறிருக்கும்
மேனிப்பவளமது மின்னுகிறகாந்தியைப்போல்
கோடிசூர்யப்பிரகாசம் போலேயிருக்கிறாள்
இவைஎலாந்தானறிந்தா ளிளங்கொடியாளல்லியரும்
வாள்விஜயன்தோள்மேலே மாலையிட்டாளுத்தமியும்
நாம்-காணாதகாட்சியெல்லாங்கண்டோமிதுநெடுநாள்
பதினாறுநாளையிலே பாவிசிறைவைத்தார்கள்
என்றுசொல்லி அல்லியரும் ஏங்கியழுதாளே
தோராவடிவழகி துரோபதையுந்தான்கேட்டு
பங்கயஞ்சீர்கண்ணாள் பவளக்கொடியாளை
கட்டியழுதார்கள் கமலப்பூநாயகியை

அப்போ-சோரம்பூராசர்களுந் தேவிகளுந்தானழுவே
ஆருயிரவர் அணிதிரளாம்பாண்டியர்கள்
எல்லோருங்கூடியே யிசைந்தழுதுகூச்சலிட்டார்
அங்கவர் துக்கம் அடங்கினபிற்பாடு
தக்கபுகழுடையதருமாவரே துசொல்வார்
இறந்ததோரர்ச்சுனனும் இனித்திரும்பப்போராரே
மாண்டதோரருச்சுனனும் மறுபடியும்வாரதில்லை
தம்பியைத்தானெடுத்து தகனஞ்செய்யவேணுமிப்போ
ஆராரைக்கூட்டி அனுப்புவதுசொல்லுமென்றார்
அப்போது அல்லியரும் அரசர்க்கெடுத்துரைப்பாள்
ஆதீனகர்த்தாவே அம்மாவேநான்பாவி
ஐவருக்கும்பொதுவல்லோ ஆரணங்குதுரோபதையும்
மேகத்திலவந்துதித்த மின்னொளிநாயகியாள்
பார்ப்பான்மகளான பரிவுடையபோகவதி
நாகம்பயின்றெடுத்த நாககன்னிநாயகியும்
அச்சுதன்தங்கை ஆரணங்குசுபத்திரையும்
பங்கயஞ்சீர்கண்ணாள் பவளக்கொடியாளும்
அன்னநடைமாதர்களை அக்கினியில்தள்ளுமென்றார்
அப்போ-சோரம்பூராசர்கள் தீரரனைவோரும்வந்து
தாரார்புகழுடைய தருமரடிவணங்கி
ஐம்பதுபேர்களும் ஆண்டிருக்கப்பிள்ளையில்லை
என்று-ஐம்பதுபேர்களும் அருந்தபசுபண்ணுகையில்
உங்கள்-யாருக்கும்பிள்ளையில்லை என்றந்தஈஸ்பரனார்
பவளக்கொடிமேல் உண்டுபண்ணார்பாலகியை
பிள்ளைகலியினால் பெண்ணென்றும்பாராமல்
பெண்ணென்றுசெப்பாமல்பிள்ளையென்றேவளர்த்தோம்
பிள்ளையில்லைஎன்றுசொல்லி பெண்மகுடஞ்சூட்டினோம்
வண்ணலட்சங்கோடியுண்டு மாலையிடவந்தவர்கள்
மற்றொருவர்கையில் மணமாலைதீண்டேனென்று
நித்யகன்னியாகவே நீணிலத்தையாண்டிருந்தாள்
பதினாறுநாளாச்சு பாவிவந்துமாலையிட்டு

அப்படிப்பட்ட அரசனையனுப்பிவிட்டு
திருப்பியிருந்தறியேன் தேகமதைத்தானறியேன்
எங்களைக்கூட இளவரசேதள்ளுமென்று
ஐப்பதுமேர்களுமாய் அடிபணிந்தாரப்போது
தாரார்புகழுடைய தருமரவர்பார்த்து
பாராளுந்தருமரிந்தப் பரிதாபம்பார்த்துமல்லோ
மோதிரக்கையை முகந்தோடறைந்துகொண்டு
தருமர்வயிறெரிந்து தரையிற்புரண்டழுது
என்னசெய்வேன்வாள்விசயா என்றுமிகவழுதார்
அன்னேரவேளையிலே அரிராமரேதுசெய்வார்

ஸ்ரீகிருஷ்ணர் வைத்தியனாய் வருவது.

பாராளுந்தருமரிட பரிதாபம்பார்த்துமல்லோ
எல்லையளந்த எம்பெருமாளப்போது
எழுப்பிடவேண்டுமென்று எம்பெருமாள்தானெழுந்து
மாயன்பெருமாள் மனமகிழ்ந்துவாரார்காண்
மடிந்தமடிப்புகளும் மாணிக்கத்தொப்பைகளும்
பொன்னுல்மிதியடியும் பொந்திக்கோல்கைபிடித்து
வயித்தியன்போலாகமருந்துப்பைதோளில்வைத்து
வயித்தியனாக வடிவுகொண்டுவந்துமல்லோ
ஆரடாமன்னவனே அரவங்கள்கானகத்தில்
எவர்காணுமிங்கே இறைச்சலிந்தக்கானகத்தில்
அப்போர்தருமர் அரசாளும்ராசதுரை
நாங்கள்-குருநாடுசீமை கூச்சல்வந்துதென்றாரே
தருமரென்றுசொல்லுவார்கள் நீர்தானோதார்வேந்தா
ஆமையாநான்தான் அவதிப்படுகிறேன்
மாண்டதொருமன்னன் மன்னவன்யார்காணும்

வயித்தியற்குச் சொல்வது.

என்னோடேதான்பிறந்த எழில்விஜயனர்ச்சுனர்காண்
மாண்டதொருமன்னற்கிந்த மாதரெனவரிசைஎன்றார்
தாயாருங்குந்தியம்மாள் தங்கையவள்சங்கவதி

அவ்விருவர்தான் தவிர இயலானஐயாவே
மற்றுமுள்ளமாதரெல்லாம் மன்னனுடதேவியென்ருர்
சிவசிவாவென்று திருச்செவியில்கையைவைத்தார்
கண்மூன்றுமில்லையோ கைலாசநாதருக்கு
என்றுஉலகளந்த எம்பெருமாள்மனமுருகி
வானவர்கள்தேவருக்கும் வயித்தியனுன்காணும்
கதண்டுகொட்டிமடிந்தவரைக் கடுகவெழுப்பிடுவேன்
இறந்ததொருமன்னவனை எழுப்பிவிடுவோமாகில்
நமக்கென்னகொடுப்பீர்காண் என்ருர்பெருமாளும்

## தருமர்சொல்வது.

அப்போதருமர் அதிகமனமகிழ்ந்து
அப்படியேநீரும் எழுப்பிவிட்டீராமாகில்
அண்டங்குருநாடும் அடங்கலும்உம்மதென்ருர்
அப்படிக்குச்சொன்னல் ஆகாதுஐயாவே
எழுதித்தரவேணும் என்ருரேஎம்பெருமாள்
தருமமுடியான் தருமரெடுத்துரைப்பார்
அந்நகரிநாடும் ஐந்துபங்காய்ப்பங்குமிட்டு
நாலுபேருடையபங்கை நானெடுத்துத்தாரேனிப்போ
வில்லாளிபார்த்தன் விஜயன்பிழைத்தாக்கால்
அவனைப்பித்தந்தாலே ஐயா நீர்வாங்கிக்கொள்ளும்
எல்லையளந்த எம்பெருமாள்தான்கேட்டு
சந்தோஷப்பட்டுத் தன்மனதில்தானடக்கி
மதுரைநகராளும் மாதுமுகப்நோக்கி
உன்-பத்தாவைநானெழுப்பித் தாரேனேபைங்கிளியே
எனக்கென்ன நீர்தருவீர் என்ருரேயெம்பெருமாள்
அப்போது அல்லி ஆரணங்குமேதுசொல்வாள்
தன்பரிசைநாடும் தரணிபதினுயிரமும்
மன்பரிசைநாடும் மதுரைபதினுயிரமும்
அந்நகரிநாடும் அடங்கலுமுன்னதென்ருள்
அப்படிக்குச்சொன்னல் ஆகாது ஆரணங்கே

எழுதித்தரவேணும் என்றுரேஎம்பெருமாள்
எழுதிக்கொடுத்தாளே இளங்கொடியாளல்லியரும்
அப்போதுஎம்பெருமாள் அதிகமனம்பூரித்து
ஆயருபப்போது அருச்சுனரைச்சுற்றிவந்து
வளையத்திரைபோடும் என்றுரேமாயவரும்
வளைத்துத்திரைநடுவே மன்னரிருவரையும்
எடுத்துநிறுத்துமென்றார் எம்பெருமாள்மேகவர்ணர்
எடுத்துநிறுத்தினார் இயல்பெரியமன்னவரை
பாலுடன்தேனும் பசுவின்நெய்வேணுமென்றார்
அப்படியேகொண்டுவந்து கொடுத்தாகளப்போது

வயித்தியர் சொல்வது.

ஒக்கவளர்த்து உலகளந்தமாயவரும்
காயம்பட்டமேனியெல்லாங் கையாலேதான்தழுவி
கால்வேருய்க்கைவேருய்க் கடுகக்கிடத்திவைத்து
எமலோகப்போனவுயிர் இட்டுவந்தேனிப்போது
வந்ததொருசீவன் வைகுண்டம்போகுதுகாண்
தருவித்துப்பார்த்தேனே தங்குதில்லைஎன்செய்வேன்
என்னால்முடியாது எடுத்தடக்கிக்கொள்ளுமையா
எடுத்தடக்கிக்கொளுமையா என்றல்லோஎம்பெருமான்
எம்பெருமாள்மேகவண்ண ரெழுந்துநடந்தாரே
அப்போதுதருமர்கண்டு அவர்பின்னேதானடந்தார்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்பின்னடந்தார்
ஓட்டம்நடையுமாக ஓடினார்மாயவரும்
மாயவருமோட மாதருமர்பின்னோட
பின்னோடிவந்தாளே பெண்பெருமாளல்லியரும்
பின்னோடிவந்தவுடன் பெருமாளும்நின்றலவோ
மற்றுமொருநினைவாய் மாயவருமேதுசொல்வார்
பெண்டுகளைப்பார்த்தால் பொறுக்கமுடியாது
புருஷன்மேற்சண்டைக்குக் கானகத்தில்வந்தாளே
கணவன்மேற்சண்டைக்குக் கானகத்தில்வந்தாளே

புருஷன்மேற்படையெடுத்துப் போர்புரியவந்தாளே
ஆகையாற்சீவனது அவ்வுடலிற்றங்குதில்லை
அல்லியல்லியென்றுசொல்லி ஆவிதுடிக்கிறது
வாள்விஜயனர்ச்சுனரை வகையொன்றும்பண்ணுமல்
என்றைக்கும்நேசமா யிருகிறேமென்றுசொல்லி
நிச்சயமாய்ச்சொன்னுல் நிசமாயெழுப்பிடுவேன்
என்றுமேனவைத்தியரு மெடுத்துரைக்கஅல்லியரும்
எங்கள்-ஆருயிரவர் அவர்களுடதம்மாணை
அங்கயற்கண்ணம்மையை அவளுடையசீர்பாதம்
என்-சீவனுள்ளகாலமெல்லாம் தீண்டேனருச்சுனரை
என்றுசொல்லமாது எம்பெருமாள்சம்மதித்து
சோரவளநங்கை சுபத்திரையைத்தான்பார்த்து
நீயென்னசொல்லுமென்ருர் நேரிழையுமப்போது
என் அண்ணன்மேலாணையது அவரைநான்தீண்டவில்லை
அண்ணனென்ருல்யார்காணும் என்ருரரிராமர்
பாற்கடலிற்பள்ளிகொள்ளும் பச்சைமாலச்சுதர்காண்
நீ-இட்டதோராணை எனக்குமிகப்பாடமல்லோ
அருச்சுனனின்னைவிட்டு அகலமுடியாமல்
எழில்சுடர்மனைகளைக்காத் திருக்கின்றபூதமதை
விட்டுவிட்டாயாமாகில் விசயனெழுந்திருப்பான்
மாட்டேனென்றுசொல்லி மறுத்தாள்சுபத்திரையும்
ஆணைமறுத்தாளே ஆரணங்குசுபத்திரையும்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்தான்கேட்டு
கோபந்தணலாகிக் கொம்பனையாளப்போது
விடுகிறயோஇல்லையோ வேல்பொருதுங்கண்ணுளே
உன்-ஒருத்திக்குமன்னன் உயிரிழந்துபோனுக்கால்
நாங்கள்-அத்தண்டபேரும் அருஞ்சிறையாவோமடி
என்றதுகேட்டவுடன் இட்டாளேயாணையவள்

---

## வயித்தியனுகிய கிருஷ்ணன் எழுப்புதல்.

அப்போதுஎம்பெருமாள் அகமுமிகக்குளிர்ந்து
அர்ச்சுனராசனை ஆண்டவருஞ்சுற்றிவந்து
தட்டியெழுப்பினுர்மாயனுாருச்சுனனை
அண்ணருடபாதம் அடிவணங்கித்தெண்டனிட்டான்
வாரியெடுத்து மார்போடேதானணைத்து
நீர்-வைகுண்டம்போனீரோ அன்பானபோர்விசயா
ஆகாயம்போனீரோ அன்பானபோர்விசயா
என்று-கட்டியணைத்துக் கனிவாயைமுத்தமிட்டு
தம்பி நீவாழியெனத் தருமருஞ்சொன்னுரே
அப்போதுவாள்விசயன் அருகிருந்தமாதவரை
கண்டுஎழுந்து காளையருச்சுனனும்
குந்தியம்மாள்தன்பாதம் கொற்றவனுந்தெண்டனிட
குந்தியம்மாள்தானுங் கொற்றவனைத்தானெடுத்து
வாழ்த்திவிடைகொடுத்துவாழ்ந்திருப்பாயென்றுசொல
கட்டியணைத்துக் கனிவாயைமுத்தமிட்டாள்
வெற்றிமதயானை வீமனவன்பார்த்து
விஜயனருச்சுனரை வேல்பொருதுங்கண்ணுன்
அவன்-கட்டியணைத்துக் கனிவாயைமுத்தமிட்டு
நுவல்பொருதுங்கண்ணு விஜயா நீரெங்குபோனீர்
சீனிச்சர்க்கரையே செல்வமே நீரெங்குபோனீர்
என்றுசொல்லிவீமன் இருந்தான்மனமகிழ்ந்து
நகுலசகாதேவ ராசமுடிமன்னவர்கள்
அண்ணுவேயென்று அருச்சுனரைகட்டிக்கொண்டார்
பொங்கிமனங்குளிர்ந்து புகழ்வேந்தர்தாமிருந்தார்
மைந்தன்புலந்திரனும் மன்னவனுமப்போது
அருச்சுனனுர்பாதம் அடிவணங்கித்தெண்டனிட்டார்
தெண்டனிட்டமைந்தனை தேர்விஜயன்தானெடுத்து

---

அருச்சுனன் புலந்திரனைக் கேட்பது.

வாழ்த்தியெடுத்து மடியின்மேல்வைத்துக்கொண்டு
முகத்தோடேமுகம்வைத்து முத்தமிட்டுப்பாலகனை
என்-தங்கமுடிபெற்ற தாயார்புலந்திரனே
ஏன்வந்தீரிங்கேயென்று எழில்விஜயன்கேட்கலுற்றான்

புலந்திரன் சொல்வது.

அப்போபுலந்திரனார் அருச்சுனற்கேதுசொல்வான்
குருநாட்டில்தானிருந்து கொற்றவரே நீங்களுந்தான்
மதுரைக்கு நீங்களுந்தான் வந்தீர்கள்மன்னவரே
அய்யாவேபவளத்தேர் அப்போதுநான்கேட்டேன்
பவளத்தேர்கொண்டுவாரே னென்றுபரிவாக
மூன்றுநாள்வரைக்கும் முடித்துத்தாரேனென்றீரே
பதினாறுநாள்வரைக்கும் பார்த்தோம்வரவில்லை
எங்கள்மாது நல்லாளல்லியரும் வந்தாள்படையெடுத்து
அந்த-தருமமுடியாளும் தண்டுதளமெடுத்து
சேராம்பூசீமைக்கு சென்றுவரும்பொது
எங்களையர்போனவழி இதுதானோவென்றுகேட்டேன்
ஐயரென்றுசொல்லவே அடித்தாளேவாய்மேலே
அப்படிக்கோபமதாய் வரும்போது அல்லியரும்
சேராம்பூகானகத்தில் சென்றோம்களத்தோடே
இப்படியாக இருக்குமந்தவேளையிலே
சேராம்பூகானகம் சேவிக்கும்வேடர்வந்தார்
அந்த-வேடுவரையப்போதுவேந்தர்கள்தான்பிடித்தார்
மாதுஇருக்கும் மயிலனையாள்கூடாரம்
கொண்டுவந்துவிட்டார்கள் கொற்றவரும்வேடுவரை
மதுரைநகராளுமெங்கள் மாதுநல்லாளப்போது
நீங்கள்-ஆர்காணுமென்று அல்லியருங்கேட்கலுற்றாள்
சேராம்பூகானகம் சேவிக்கும்வேடரென்றார்
யாருடையசீமையென்று அருங்கிளியாள்கேட்டாளே
பவளக்கொடியாளும் பைங்கிளியாள்சீமையிது

என்றந்தவேடுவரும் ஏந்திழைக்குச்சொன்னார்கள்
அப்போதுமாதுநலாள் அல்லியருஞ்சொல்லலுற்றாள்
மாது நல்லகன்னியற்கு மணமாலையாச்சுதோடா
பதினாறுநாளாச்சு பைங்கிளியைமாலையிட்டு
ஒக்கவொருவன் உயிர்த்தோழனாகவந்தான்
அருச்சுனற்குமணமாலை யாச்சுதுஅம்மாவே
என்றதுகேட்டாள் இளங்கொடியாளல்லியரும்
கதும்பியெழுந்திருந்தாள் காட்டானைபோலாக
கோபந்தனலாகி கொம்பனையுந்தானிருக்க
கதண்டுகுளவிகளும் கானகத்தைவிட்டெழும்பி
யானைகுதிரைகளை அடல்பெரியசேனைகளை
கொட்டிமடித்ததுகள் கொற்றவர்களெல்லவரை
மதுரைத்துரைச்சி மைந்தனைத்தப்பவிட்டு
அட்டதண்டசேனையெல்லாம் அறவேமடிந்தார்கள்
செத்துமடிந்தபே ரத்தனையுந்தான்பார்த்து
ஈஸ்வரரேபார்வதியே யென்றேபுலம்பலுற்றாள்
மெத்தவிசாரமாய் மெல்லியருந்தானிருந்தாள்
சேராம்பூராஜாவின் தேசத்துத்தோட்டியென்றான்
நீ-எந்தவூர்த்தோட்டி யென்றாளென்தாயாரும்
குருநாட்டுச்சீமைக்கு கொற்றவர்ஓலைகொண்டு
தருமருக்குத்தம்பியராம் அவர்பேர்தனஞ்சயராம்
சேராம்பூகானகத்தில் சென்றுமடிந்தாரங்கே
தருமருக்குஓலைகொண்டு போரேனான்சாம்புவனும்
அப்போதுமாது அலறிமிகவழுதாள்
அடித்துப்பிரண்டழுதாள் அன்னநடையாளும்
என்னசெய்வேனென்று ஏங்கியழுதாளே
குருநாடுசீமையில் கொற்றவருமப்போது
எல்லோரும்வந்தார்கள் இரைச்சலிட்டுத்தானழுதார்
மாண்டவிடத்துக்கு மன்னர்களெல்லோரும்
அதினாலேயிங்குவந்தோம் ஐயாவேயென்றுசொன்னான்
பாலன்சொன்னவார்த்தையது பார்த்திபன்கேட்டானே

மெத்தவதிசயமாய் வேந்தருந்தானிருந்தார்
பெண்களெல்லாமப்போது பெருத்துமனமகிழ்ந்து
அருச்சுனனுர்தேவிமா ரனைவோருந்தானெழுந்து
தருமரிடபாதஞ் சாஸ்டாங்கமாய்ப்பணிந்தார்
தெண்டனிட்டமாதர்களைச் சீர்பெறவேவாழ்த்தினுர்
தம்பிமார்வந்து தாளிணையைப்போற்றிசெய்தார்
தெண்டனிட்டதம்பியரைச் சீர்பெறவேவாழ்த்தினுர்
அப்போதுஅல்லியரும் அருச்சுனரைத்தான்பார்த்து
பொங்கிமனங்குளிர்ந்து பொற்கொடிஏதுசொல்வாள்
மூன்றுநாளையிலே முடிமன்னுதாரேனென்றீர்
பதினுறுநாள்வரைக்கும் பார்த்தேன்வரவில்லையென்று
தண்டுதளமெடுத்து சண்டைக்குவந்தோமிங்கே
வந்தஇடத்திலிங்கு மாண்டுகிடந்தீரே
அலைகடலிற்பள்ளிகொள்ளும் ஆயருடமாயமிது
இந்தவிதம்பண்ணிஞல்இளங்கொடியுமேதுசெய்வேன்
அது-மாயவனுர்செய்த மதிமயக்கமென்றுசொன்னுள்
இப்படிப்பேசி இருக்குமந்தவேளையிலே
சேராம்புராசாக்கள் எங்கள்மேல்தயவுவைத்தீர்
என்றுசாஷ்டாங்கதெண்ட னிட்டார்கள்ராசாக்கள்

### தருமர்முதல் யாவரும் அரண்மனைக்குப் போகுதல்.

அப்போதுதருமதுரை அதிகமனமகிழ்ந்து
அந்த-பட்டணத்தைநோக்கிப்பரிவுடனேதானடந்தார்
எல்லவருங்கூடியே ஏகோபித்துத்தானடந்தார்
போருர்களெல்லாரும் பொங்கிமனங்குளிர்ந்து
போனுரனைவருமாய்ப் பொற்கொடியாளரண்மனைக்கு
பாராளுந்தருமருக்குப் பவளக்கொடியாளும்
மாணிக்கசிம்மாதனம் மன்னருக்குசோடித்து
குருநாட்டையாளுகிற கொற்றவரேயிருமென்ருர்
வெற்றிமதயானை வீமதுரைராசருக்கு
நவரத்தினசிம்மாதனம் நலமுடனேசோடித்து

இதுமேலிருமென்று ளிளங்கொடியுமப்போது
நாமக்கொடியுடைய நகுலனவன்றனக்கு
சிம்மாதனங்களிட்டு சிறப்பாகவீற்றிரென்றுள்
சாஸ்திரக்கொடியுடைய சகாதேவராசருக்கு
பொன்னுலிழைத்துவைத்த பொற்சிம்மாதனம்போட்டு
இதுமேலிருமென்று ளிளங்கொடியாளப்போது
புலந்திரராசனுக்குப் போட்டார்சிம்மாதனங்கள்
எடுத்துமவள்வைத்து இருமையாதம்பியரே
என்றுமவள்சொல்லி இளங்கொடியுமப்போது
விசயனூர்தேவியற்கும் விதம்விதமாய்வார்த்தைசொல்லி
அவரவர்க்குத்தக்கதோராசனங்கள்போட்டுவைத்தார்
அங்குதேவிமாரெல்லோருந் திறமுடன்தானிருந்தார்
பார்த்தீபனர்ச்சுனரும் பள்ளியறையுட்புகுந்தார்
அத்போ-பாராளுந்தருமதுரை பார்த்துமனமகிழ்ந்து
இந்த-மாதுநல்லகன்னிகையும் மரியாதையுள்ளவர்கள்
இறப்புக்கும்பிறப்புக்கும் இனியொருபெண்வேணுமோ
என்றுசிம்மாதனத்தி லிருந்தார்மனங்களித்து
மதுரைதுரைங்சியவள் மனம்பொருந்தியல்லியரும்
மாதினுடபட்டணம் மகாசேனையுள்ளதெல்லாம்
அரண்மனையுப்பரிகை ஆஸ்தானமண்டபமும்
பள்ளியறையழகும் பார்க்கமுடிபோகவில்லை
பள்ளியறையிலே பவளங்களிருக்கிறதும்
பவளப்புதுமைகளைப் பார்த்தாளே அல்லியரும்
இடம்பெரிய்வாசலது ஏழுநூறுகாதவழி
தூணுக்குத்தூணுமங்கே தொண்ணூறுகாதவழி
ஆயிரங்காதவழி அழகானவாசலது
பவளத்தாள்சொப்பனிட்டுப் பாங்காயலங்கரித்து
பொற்றூணும் நற்றூணும் புட்பாகத்தூணும்
குளிர்ந்தசந்தனத்தூணும் குங்குமநற்றூணும்
தூணுக்குத்தூணுமங்கே தூங்காவிளக்கெரிய
இப்படிக்குமாதனமும் இலங்குசிம்மாதனமும்

போட்டிருக்குமவேனமும் பொன்னூலே ஆசனமும்
வாடாததாயும் வந்து நிழல்காட்ட
முத்துமரகதமும் முழுபவளத் தூணுமங்கே
தங்கத்தாற்பொம்மைகளுந் தங்கநாற்காலிகளும்
செம்பொன்னூற்சிலைகளுமே செம்பவளமாலைகளும்
வாழைகமுகுகளும் வண்ணபலாச்சோலைகளும்
சேரவேநாட்டி செம்பவளத் தூணிருத்தி
நின்றவிடந்தோறும் நீலநிறக்கண்ணாடி
கண்டவிடந்தோறும் கண்ணாடிக்காலுகளும்
காந்தவிளக்குகளும் கைவிளக்குத்தேர்விளக்கும்
ஏணிவிளக்குகளும் எண்ணாததேர்விளக்கும்
பவளப்புதுமைகளைப் பார்க்கமுடியாது
கண்டவிடந்தோறும் கனத்தபவளமாலை
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள் நாயகியும்
எங்கும்பவளமாக இருக்குதரண்மனைக்குள்
அல்லிப்பெருமாளும் ஆரணங்குபார்க்கையிலே
எங்கும்பவளநிற மென்ன இலங்குறது
சோதியழகுமவள் சொரிந்தமுகத்தழகும்
மாவழகுமொப்பனையும் வையகத்தில்கண்டதில்லை
இந்த-மாதினுடவுபசரணை மரியாதைதான்பார்த்து
மதுரையல்லியாவரும் மனங்குளிர்ந்து அப்போது
பவளக்கொடியாளை பைங்கிளியைத்தான்பார்த்து
வாருமிங்கேயம்மாவென்று வார்த்தைமிகப்பேசி
பாஞ்சாலனீன்றெடுத்த பைங்கிளியாள் துரோபதையும்
அலைகடலிற்பள்ளிகொள்ளும் அச்சுதனார் தங்கையரும்
கொம்பனைமாரெல்லாரும் கூடவிளையாடினார்கள்
மாமியார் குந்தியம்மாள் மருமகளைத்தான்பார்த்து
என்-கண்ணனமங்கையரே கட்டழகிவாருமென்று
மார்போடேதானணைத்து மருமகளைமுத்தமிட்டு
திருஷ்டிகழித்தாளே தேன்மொழிக்கப்போது
எட்டுநாளங்கே இருந்தார்கள்யாவருமாய்

விருந்துகள்பண்ணியே வெகுமானந்தான்கொடுத்து
பவளத்தால்பல்லக்கு பாலித்தாள்யாவருக்கும்.

### பவளக்கொடியாள் புலந்திரனுக்குச் சொல்லுதல்.

பங்கயச்சீர்கண்ணாள் பவளக்கொடியாளும்
மைந்தன்புலந்திரனை மடிமேலெடுத்துவைத்து
என்-கண்ணனகண்மணியே காண்டீபர்தன்மகனே
குருநாட்டையாளுகிற கொற்றவர்தன்மகனே
தங்கமுடிபெற்ற தனஞ்சயனார்புத்திரனே
நவரத்தினப்பொன்முடி நாயகியாள்தன்மகனே
கண்ணத்தோடேயணைத்து கனிவாயைமுத்தமிட்டாள்
வாரியணைத்து மடிமீதில்வைத்துக்கொண்டு
மதுரைநாடாளுகிற மாதுதுரைமகனே
என்-தங்கக்களஞ்சியமே தார்வேந்தேதம்பியரே
உந்தனைத்தொட்டு உண்மைபெறவாச்சுதையா
நீ-பவளத்தேர்வேண்டியே பத்தாவைக்கேட்டதினால்
பத்தாவுமிங்குவந்து பாலித்தார்கானகத்தில்
கனவேட்டையாடிவரக் கண்டுவிட்டார்கானகத்தில்
கதண்டுகொட்டிச்செத்தவர்போற் காவலர்மடிந்துவிட
அங்கேயிருந்ததோழன் அழுகிறதைநான்கேட்டு
தோழியைப்போய்ப்பாருமென்றுசொன்னேன்ஐயாவே
பாங்கியரோடிப்போய்ப் பார்த்துவந்துசொன்னார்கள்
ஆரோதெரியாது அரசர்படைவென்றவர்போல்
காணுகுதுதாயே கடுகெனவேபோகவேணும்
என்றவள்சொல்ல ஏறினேன்தண்டிகைமேல்
அப்போதுபோயிரங்கி அவரைநான்பார்த்தேனப்பா
மார்பின்சரப்பளியை வாங்கியேநான்போட்டேன்
தாதியரேகட்டுமென்று தண்டிகைமேல்வந்துவிட்டேன்
கட்டியேதாதியருங் கடுகியேயோடிவந்தாள்
மார்பின்சரப்பளியை வாங்வரச்சென்னேனையா
தாதியவளோடிப்போய்ச் சரப்பளியைக்கேட்டாக்கால்

தருகிறதில்லையென்றார் தனஞ்சயனாரப்போது
தாதியவளோடிவந்து தருவதில்லையென்றாரென
மாதரோடரண்மனைக்கு வந்துவிட்டேன்தம்பியரே
கொலுமுகச்சாவடியில் கொம்பனையும்நானிருந்தேன்
அன்னவடிவெடுத்து அங்குவந்தார்கொலுமுகத்தில்
அவர்-ஆடலும்பாடலும் அதிசயத்தைநான்பார்த்து
கூவுகிறவோசைகளும் குலவுகிறநேர்த்திகளும்
கண்டுமகிழ்ந்துநான் கையிற்பிடித்தேனே
அன்னமென்றுசொல்லி அணைத்துப்பிடித்தேனையா
தாதியரைநானழைத்து தையலவள்கைகொடுத்து
கூண்டிலடையுமென்று கொற்றவனேசொன்னேனையா
அப்போது-அன்னஉருமாறி அருச்சுனராணையா
மன்னவனாரர்ச்சுனரும் மதியைக்குலைத்தாரே
மணமாலைசூட்டினார் மன்னவரேதம்பியென்றாள்
என்-அன்னக்களஞ்சியமே அழகுமணிப்பொக்கிஷமே
என்-பத்தாவின்புத்திரனே பார்வேந்தர்தன்மகனே
குருநாட்டையாளுகிற கொற்றவனார்தருமதுரை
வெற்றிமதயானை வீமமகாராஜனையும்
நாமக்கொடியுடைய நகுலனவன்றனையும்
சாஸ்திரக்கொடியுடைய சகாதேவராஜனையும்
ஐவரைப்பெற்றெடுத்த அம்மாமிகுந்தியம்மாள்
மதுரைநாடாளுகிற மன்னர்துரைச்சியரும்
பாஞ்சாலநாயகியாள் பத்தினியாள்தேவியரும்
மாயவனார்தங்கை மங்கைசுபத்திரையும்
விஜயனார்தேவி மெல்லியர்கள்யாவரையும்
என்-கண்குளிரப்பார்க்க வந்துதேகண்மணியே
இல்லாதேபோனால் இவர்களையறியேனையா
என்றவள்சொல்ல எல்லவருந்தான்கேட்டு
சந்தோஷமாகத் தையலருங்கேட்டார்கள்
பொங்கிமனங்குளிர்ந்து பூவையரும்வீற்றிருந்தார்

---

## பவளக்கொடியாள் புலந்திரனுக்குப் பவளத்தேர் கொடுத்தது.

பங்கயஞ்சீர்கண்ணாள் பவளக்கொடியாளும்
பவளத்தேரொன்று பாலனுக்குச்செப்பனிட்டு
மெத்தவிநோதமாய் வெகுவாயலங்கரித்து
வேந்தன்புலந்திரனுக்கு வேண்டியதுதான்கொடுத்து
பவளத்தேர்மேலே பாலகனையேற்றிவைத்தாள்
திருஷ்டிகழித்தாளே தேன்மொழியுமப்போது
பங்கயஞ்சீர்கண்ணாள் பவக்கொடியாளும்
மாமியார்குந்தியம்மாள் மயிலணைக்கப்போது
பாதஞ்சரணமென்று பணிந்தாளேதேன்மொழியும்
மந்தாரக்குந்தியம்மாள் மருமகளைத்தானெடுத்து
வாழ்த்திவிடைகொடுத்து மங்கையருமப்போது
கட்டியணைத்துக் கனிவாயைமுத்தமிட்டு
என்றுஞ்சிரஞ்சீவியர் யெந்நாளும்வாழ்ந்திருப்பாய்
அப்போ-பங்கயஞ்சீர்கண்ணாள் பவளக்கொடியாளும்
பாராளுந்தருமருக்குப் பாதஞ்சரணமென்றாள்
சாஷ்டாங்கமாகத் தையலருந்தான்பணிந்தாள்
வாழ்த்திவிடைகொடுத்தார் மகாராசரப்போது
வெற்றிமதயானை வீமதுரைராசருக்கு
மாதுநல்லமங்கையரும்வணங்கியேதெண்டனிட்டாள்
விஜயரந்தஅருச்சுனரை மெல்லியருந்தான்பார்த்து
குருநாட்டுச்சீமைக்குக் கொற்றவரேபோரீரோ
பதினாறுதன்வருடம் பாவிசிறையிருந்தேன்
ஒன்றுமறியாமல் உத்தமியும்நானிருந்தேன்
கோடானகோடியுண்டு கொம்பனையைக்கேட்டவர்கள்
மாலையிடவந்தவர்கள் மட்டுமிதங்களில்லை
ஆரையுந்தீண்டேனென்றருஞ்சிறையில்நானிருந்தேன்
ஏறெடுத்துப்பார்த்தவர்கள் ஏனென்றுங்கேட்டதில்லை
ஆருமில்லைவையகத்தில் அருச்சுனரேயென்றுசொல்லி
வாழ்த்திவிடைகொடுத்தார் மதவீமராசனுக்கும்

நகுலசகாதேவ ராசமுடிமன்னருக்கும்
மைத்துனர்களிருவருக்கும் மாதுசரணமென்றாள்
என்பத்தாவின்தேவி எல்லோர்க்குஞ்சரணமென்றாள்
தருமாபுரியாளுந் தனஞ்சயனாரப்போது
பங்கயஞ்சீர்கண்ணாள் பவளக்கொடியாட்கு
வேண்டியவுடுப்புகளும் வேணதுயிலாடைகளும்
பொன்னாலலங்கரித்துப் பொற்பவளத்தண்டிகையும்
சந்தோஷமாகத் தையலற்குத்தான்கொடுத்தார்
எந்நாளுஞ்சுகமா யிருந்தரசு ஆளுமென்றார்
அப்போவிடைகொடுத்தார் ஐவரும்ஒன்றாக
பங்கயஞ்சீர்கண்ணாள் பவளக்கொடியாளும்
மணமாலையிட்டீரே மாயவனார்தன்னருளால்
பதினாறுநாளையிலே பத்தாவேயெந்தனையும்
செய்யாதகோலமெல்லாஞ் செய்துவிட்டீரர்ச்சுனரே
குருநாட்டுச்சீமைக்குக் கொற்றவரேபோரீரோ
என்றுசொல்லிக்கன்னியரும் ஏங்கிமுகம்வாடி
பொங்கியழுகிறதும் பொற்கொடியாளப்போது
மயங்கியழுகிறதும் மண்மேல்விழுகிறதும்
பார்த்தாரருச்சுனரும் பாரமுடியாளை
மயங்கியழுகிறதை மன்னவருந்தான்பார்த்து
கட்டியணைத்துக் கனிவாயைமுத்தமிட்டு
மாணிக்கத்துப்பட்டியால் மாதருடகண்துடைத்து
அழவேண்டியகாரியமேன் அன்னப்பசுங்கிளியே
குருநாட்டுச்சீமைக்குக் கொற்றவனார்தன்னுடனே
கூடியுறவாடி கொம்பனையேநானேகி
எல்லோரும்பட்டணஞ்சேர்ந் திருக்குமந்தவேளையிலே
நானும்வருவேன் நாயகமேயஞ்சாதே
தங்குவேனோபூமியிலே தரிப்பேனோஅங்குநான்
என்-சோதிமணிவிளக்கே தெள்ளுமணியாளே
உன்னைப்பிரிந்துநான் உலகிலிருப்பேனோ
கடுகவருவேண்டி என் கட்டழகிகண்மணியே

நான்-ஓடிவருவேண்டி ஒருநொடிக்குள்ளாக
என்றுமேசொன்னரே ஏந்திழையுமப்போது.
இந்தக் கருமத்துக்கோ என்னைவந்துமாலையிட்டீர்
இப்படியென்றறிந்தால் இணங்கேனேமன்னவனே
எனக்கென்னகெதியாச்சு என்றேயழுதுகொண்டு
ஈஸ்வரரேபார்வதியே எனக்கென்னவிதிவிதித்தாய்
அண்டமுலகளந்த ஆயர்பெருமாளே
எல்லாருங்கூடியே யிருந்தீரோஎந்தனுக்கு
இந்தக்கருமத்துக்கு இனியென்னசெய்வேனையா
என்றுசொல்லிமாது இளங்கொடியாள்தானழவே
காண்டீபனருச்சுன்னுங் காளையவனப்போது
பங்கயஞ்சீர்கண்ணுள் பவளக்கொடியாளே
தங்கமுடிதரித்த களஞ்சியமேநாயகமே
நான்-இங்கேயிருப்பேண்டி இளங்கொடிநாயகமே
எனக்குப்பெரியவர் இயலானவீமராசர்
அவருக்குமூத்தவர் அழகானதருமலிங்கம்
அவர்கள்-புறப்படநானிருந்தால் பேச்சுக்கிடமல்லோ
பொறுக்கமுடிகூடாது புத்தியுள்ளநாயகமே
அதினலேபெண்ணரசே அவரோடுறவாக
போய்வாரேன்கண்ணேயென்று புகன்ருனிளவிசயன்
அப்போதுமாது அருங்கிளியுமேதுசொல்வாள்
கடுகவாரேனென்று கட்டழகரெந்தனுக்கு
தேவரீர் நிச்சயங்கள் செய்துகொடுமென்ருள்
இல்லாமற்போனல் இனிநம்பேனென்றுசொன்னுள்
காண்டீபனருச்சுனனுங் காளையவனேதுசொல்வான்
தருமர்மேலாணையிட்டுத் தையலற்குத்தான்கொடுத்தார்
இனியானல்நம்புவையோ என்ருனிளவிஜயன்
பங்கயச்சீர்க்கண்ணுள் பவளக்கொடியாளும்
மனதுகுளிர்ந்தாளே மாதுநல்லாள்கன்னியரும்
அருச்சுனனுமப்போது அதிகமனம்பூரித்து
மாதுகையில்விடைவாங்கி மன்னன்நடக்கலுற்ருன்

அங்கேவிடைபெற்று ஐவருந்தானடந்தார்
மதுரைத்திசைநோக்கி வாரார்துரைகளெல்லாம்

### ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியானவர் அல்லியுடைய பாளையத்தை யெழுப்பிவிடுதல்.

அண்டமுலகளந்த ஆயர்பெருமாளும்
மதுரைத்துரைச்சி மகாசேனையுள்ளதெல்லாம்
குளவிகதண்டுகள் கொட்டிமடிந்தவரை
சேனைபரிவாரம் சேனைகளுள்ளதெல்லாம்
யானைகுதிரைகளை அத்தண்டசேனையெல்லாம்
மன்னர்துரைமக்கள் மகாசேனையுள்ளதெல்லாம்
தட்டியெழுப்பிவிட்டார் தனஞ்செயனுரெம்பெருமாள்
தூங்கிவிழித்தாற்போல் துரைமக்கள்தானெழுந்தார்

### தருமர்முதலிய யாவரும் அவரவரிடஞ்செல்லுதல்.

எழுப்பிவிட்டுமாயனு ரேகினாரப்போது
தருமாபுரியாளும் தருமதுரையெல்லவரும்
குந்தியம்மாள்தன்னுடனே கொற்றவர்தேவியரும்
எல்லவருங்கூடியே ஏகிவழிநடந்தார்
அல்லிநல்லாள்பாளயத்தில் வந்தார்களப்போது
செத்துமடிந்ததொரு சேனைகளெல்லவரும்
எப்போதும்போலே யிருக்கவேகண்டார்கள்
மதுரைத்துரைச்சி மனங்குளிர்ந்தாளப்போது
பாளையங்களுள்ளதெல்லாம் பயணங்களாச்சுதப்போ
ஆனைகுதிரைகளும் ஆண்பெரியசேனைகளும்
கொடிகள்கொடிசீலை குடைகளுஞ்சூழ்ந்துவர
யானைகுதிரையின்மேல் அடிபடுதுடங்காவும்
ஒட்டையின்மேல்நகபந்து ஓசைகிளம்புகுது
எக்காளஞ்சின்னம் எழில்பெறவேஊதுவதும்
பூரிகைடம்மாரம் பூமியதிருதங்கே
அல்லிப்பெருமாளும் அழகுபுலந்திரனும்
பாஞ்சாலிநாயகியாள் பத்தினிதுரோபதையும்

மந்தாரக்குந்தியம்மாள் மாமியுந்தான்கூட
ஆனையம்பாரியின்மேல் அனைவரும்வீற்றிருந்தார்
பார்க்கமுடிபோகவில்லை பைங்கிளியாள்ராணுவங்கள்
காடுசெடிகள் கடுந்தனலாகுதங்கே
கல்லுகளும்முள்ளுகளும் கடுகுபொடியாகுதங்கே
கருந்தூளுஞ்செந்தூளுங் கதிரோனைக்கப்புதங்கே
பாளையப்போகிற அதிசயத்தைத்தான்பார்த்து
காண்டீபனருச்சுனனும் காளையவர்தானிருந்தார்
இப்படிக்குஅதிசயமாய் இவள்வரக்காரியமேன்
இது-நமக்காகவந்தது நம்முயிரைக்கொல்லவல்லோ
மாயன்பெருமாள் மகாதேவர்கிருபையினுல்
ஆயன்பேருமாள் அருளாளர்கிருபையினுல்
நாம்-தப்பிப்பிழைத்தோம் தார்வேந்தர்தருமத்தினுல்
பாராளுந்தருமதுரை பாக்கியத்தால்தப்பிவந்தோம்
இளங்கொடியாள்மாதருக்கு எதிரியொருவரில்லை
தப்பாமல்தலையறுப்பாள் தாமக்கொடிமுடியாள்
பொல்லாதஅல்லியவள் போருக்குவல்லவள்காண்
மைந்தன்மேலாணை மறந்தபாவியென்றுசொல்லி
சத்தியந்தப்பினுர் தார்வேந்தரென்றுசொல்லி
கழுமரத்திலேற்றிக் கடுஞ்சிறையில்வைப்பாளே
என்றுமனதினுள்ளே எண்ணினுனர்ச்சுனனும்
அப்போ-எல்லோருங்கூடியே ஏகிவழிநடந்தார்
அந்த-மதுராபுரிவல்லி வாழ்வரசிபட்டணத்தில்
போனுர்களவருமாய் பொற்கொடியாளரண்மனைக்கு
அருச்சுனனுர்தேவிமார் அல்லவரும்போய்நுழைந்தார்
மைத்துனர்தருமருக்கும் மற்றுமுள்ளமன்னருக்கும்
சிங்காதனங்கள் சிறப்பாகச்சோடித்தாள்
குருநாட்டையாள்தருமர் கூடவேதானிருந்தார்
ஐவரையும்பெற்றெடுத்த ஆரணங்குகுந்தியம்மாள்
பாஞ்சாலிநாயகியாள் பத்தினியாள்துரோபதையும்
மற்றுமுளதேவியெல்லாம் வாருமென்றுதானழைத்து

அவரவர்கட்காசனங்கள் போட்டாளேயல்லியரும்
அப்போ-மூன்றுநாளங்கே முடிமன்னர்தாமிருந்தார்
விருந்தமுதுசெய்து மெத்தஉபசரித்தாள்
எல்லவர்க்கும்வெவ்வேரு யீந்தாள்வெகுமானம்
வெகுமானம்பெற்று விடைபெற்றுத்தானடந்தார்
அப்போபாராளுந்தருமதுரை பாலகனைதானழைத்தார்
கட்டியணைத்துக் கனிவாயைமுத்தமிட்டார்
எந்தன்களஞ்சியமே என்தம்பிபுலந்திரனே
நான்-போய்வாரேன்கண்ணேபொன்னின்புலந்திரனே
என்றுசொல்லித்தருமர் இருமென்ருரப்போது
வெற்றிமதயானை வீமதுரையேதுசொல்வார்
என்-அப்பாபுலந்திரனே அல்லிமகனுரே
கட்டிக்கரும்பே காளைபுலந்திரனே
போய்வாரேன்கண்ணே புலந்திராசாவே
என்றுசொல்லிவீமர் இருமென்ருரப்போது
நாமக்கொடியுடைய நகுலரவர்பார்த்து
தம்பிபுலந்திரனே தார்வேந்தர்தம்பியரே
குருநாடுசீமைக்குக் கொற்றவனேபோய்வாரேன்
என்றவர்சொல்லி இருமென்ருரப்போது
சாஸ்திரக்கொடியுடைய சகாதேவன்தான்பார்த்து
பொன்னுமணியே புலந்திராசாவே
தங்கமணியே தார்வேந்தாபுலந்திரனே
குருநாடுசீமைக்குக் கொற்றவனேபோய்வாரேன்
என்றவர்சொல்லி யிருமென்ருரப்போது
மந்தாரக்குந்தியம்மாள் மயிலனையாளப்போது
புலந்திரனைத்தானெடுத்து பெருக்கமனமகிழ்ந்து
ஐவர்கலிதீர்க்கவந்த அரும்பொன்னேகண்மணியே
குருநாட்டையாளுகிற கொற்றவர்கள்தன்னுடனே
நான்-போய்வாரேனென்று புலந்திரனைமுத்தமிட்டு
இருங்காணும்மன்னவனே என்றுசொன்னுளப்போது
அருச்சுனனுர்தேவிமா ரெல்லோருமப்போது

நாங்கள்-யாவரும்போய்வாரோம் அதிரூபசித்திரமே
என்றுசொன்னாரப்போது இயலானதேவிமார்கள்
காண்டீபனர்ச்சுனனும் காளையவனப்போது
மைந்தன்புலந்திரனை வாரிமடியில்வைத்து
அப்பாபுலந்திரனே அருமையுள்ளகண்மணியே
போய்வாரேனென்றான் போர்விசயராசாவும்
போரஞ்சாமன்னன் புலந்திரனுங்கூறுகிறான்
ஐயாவே நீர்போனால் அதன்பின்வருவதில்லை
போனால்வருவதில்லை யென்றான்புலந்திரனும்
ஆனாலழகுமன்னன் அர்ச்சுனனுங்கூறலுற்றான்
இந்நாளும்போல இனியிருக்கமாட்டேனப்பா
கடுகிவருவேனப்பா காளைபுலந்திரனே
நம்புவேனோவென்று நவின்றான்புலந்திரனும்
நம்பியிருமென்று நல்விசயன்சொன்னானே
அல்லியரைப்பார்த்து அர்ச்சுனனுமேதுசொல்வான்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்நாயகமே
குருநாடுசீமைக்குக் கொம்பனையேபோய்வாரேன்
அப்போதுஅல்லியரும் ஆரணங்குதான்மயங்கி
கண்ணீர்சொரியவிட்டாள் கட்டழகியப்போது
வேண்டாங்காண்மாதே விசாரப்படவேண்டாம்
மெய்யாய்வருகிறேன் மெல்லியரேநம்புமென்றார்
போய்வாருமென்று பொற்கொடியுந்தெண்டனிட்டாள்
எல்லோருமாக எழில்நாடுசென்றார்கள்.

வாழிவாழிவானவர்-வாழிமாமறை
வாழிவாழிமாதவர்-வாழிவையமே.

பவளக்கொடிமாலை முற்றிற்று.

———(:)———

28.4.17.
57A
5-31

பக்கிரியாபிள்ளையவர்களியற்றிய,

## தோத்திரக் கீர்த்தனப்பாமாலை.

இது "புத்தம் புதுப்பாடல், புகழ்வண்ணத் திருப்பாடல், பக்திதரும் பாடல், பக்கிரியாபிள்ளைபாடல்" என்னும் புதுமொழி ஒருபழமொழியாய் வழங்கிவரும்படி இனியவாக்குகள் அமைந்து இன்பம் பயக்குகின்றதென்பது இப்புத்தகத்தை வாங்கிப் படிப்பவர்க்கே நன்கு விளங்கும். இதன் விலை அணா 5.

---

செந்தமிழ்ச் சரபம் விரகாலூர்

மகா-௱-௱-ஸ்ரீ சுப்பையாபிள்ளை அவர்களியற்றிய,

| | | | |
|---|---|---|---|
| கோவலன் சரித்திரத் திருப்புகழ் காவடிச்சிந்து | 0 | 4 | 0 |
| நல்லதங்காள் சரித்திரத் திருப்புகழ் காவடிச்சிந்து | 0 | 4 | 0 |
| அரிச்சந்திரன் திருப்புகழ் காவடிச்சிந்து | 0 | 4 | 0 |
| பதிவிரதா சத்தியவான் சாவித்திரித் திருப்புகழ் | 0 | 4 | 0 |
| இராமாயணத்திருப்புகழ், இலங்காதகனக்காவடிச்சிந்து | 0 | 3 | 0 |
| சிதம்பரம் நடராஜர் நடனத்திருப்புகழ் காவடிச்சிந்து | 0 | 2 | 0 |
| ஞானசௌந்தரித் திருப்புகழ் காவடிச்சிந்து 2-பாகம் | 0 | 8 | 0 |
| அல்லியரசாணி சரித்திரத் திருப்புகழ் காவடிச்சிந்து | 0 | 4 | 0 |
| பாண்டவாள் சரித்திரப் பாரதக்காவடிச்சிந்து திருப்புகழ் | 0 | 4 | 0 |
| பரமன்திருமால்முருகன் பக்திரஸக் கீர்த்தனை | 0 | 4 | 0 |

---

சு. துரைசாமி படையாச்சியார் அவர்களியற்றிய.

| | | | |
|---|---|---|---|
| பாகவதத் திருப்புகழ் காவடிச்சிந்து | 0 | 3 | 0 |
| சப்தகாண்டம் இராமாயணத்திருப்புகழ் காவடிச்சிந்து | 0 | 3 | 0 |
| ஸ்ரீ பாகவத குசேல பக்தியானந்தச் சரித்திரத்திருப்புகழ் | 0 | 4 | 0 |
| பார்வதி,சத்தியவான் சாவித்திரி சரித்திரத்திருப்புகழ் | 0 | 4 | 0 |
| வள்ளி சுயம்வரத் திருப்புகழ் காவடிச்சிந்து | 0 | 4 | 0 |

மகா-௱-௱-ஸ்ரீ உடையார்பிள்ளையவர்களியற்றிய,

| | | | |
|---|---|---|---|
| கோவலன் சரித்திரம் 1, 2 பாகங்கள் | 0 | 4 | 0 |
| அல்லியரசாணி சரித்திரம் 1, 2 பாகங்கள் | 0 | 4 | 0 |

வேலுச்சாமிக் கவிராயரவர்களியற்றிய

| | | | |
|---|---|---|---|
| இந்து தேசாபிமானிகள் மீது தேசியகீதங்கள். சிறந்த செந்தமிழ்ப் பாடல்கள் | 0 | 4 | 0 |

இ. மா. கோபாலகிருஷ்ணக்கோன்,

புத்தகவியாபாரம் புதுமண்டபம், மதுரை.